பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்

New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-110

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)


| | | | | | |
|---|---|---|---|---|---|
| மலர் : 16<br>Vol : 16 | இதழ் : 04<br>Issue : 04 | www.ncbhpublisher.in | ஜுலை 2024<br>July 2024 | விலை<br>Price } ₹ 45/- | ஆண்டு சந்தா<br>Annual Subscription } ₹ 540/- |




## நகரங்களில் குழந்தைகள் குழந்தைகளாகவே இல்லை

பாமா




23.06.2024 அன்று நாகர்கோவில் சீதப்பாலில் எஸ்.காசிவிஸ்வநாதன் எழுதிய ‘தாமிரபரணி ஓடிக்கொண்டிருக்கிறது’ எனும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் சிபிஐ மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், தோழர்கள் எஸ்.தோதாத்ரி, எஸ்.காசிவிஸ்வநாதன், மருத்துவர் அறம், த.சுபாஷ்சந்திரபோஸ், பி.தாமரைசிங், எஸ்.அனில்குமார், எஸ்.கே.கங்கா மற்றும் என்சிபிஎச் மேலாண்மை இயக்குநர் க.சந்தானம் ஆகியோர் கலந்துகொண்டனர்.




18.06.2024 அன்று திருச்சியில் ‘சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம்’ 20 தொகுதி நூல்கள் வெளியிடப்பட்டன. இதில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், பொ.வேல்சாமி, புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் இரா.அறவேந்தன், என்சிபிஎச் மேலாண்மை இயக்குநர் க.சந்தானம், பொது மேலாளர் எஸ்.சண்முகநாதன், விற்பனை மேலாளர் தி.ரெத்தினசபாபதி, முதுநிலை விற்பனை சீரமைப்பாளர் அ.கிருஷ்ணமூர்த்தி, பாவை பொதுமேலாளர் ஆ.சிவக்குமார் மற்றும் நூல் தொகுப்பாசிரியர்கள் கலந்துகொண்டனர்.

கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2055*

*மலர் - 16 இதழ் - 04 - ஜூலை 2024*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**



ஆசிரியர் குழு
பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்
முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந.முத்துமோகன்
முனைவர் மு.இராமசுவாமி
முனைவர் நா.இராமச்சந்திரன்
முனைவர் பா.ஆனந்தகுமார்
முனைவர் ஞா.ஸ்டீபன்
ப.குராஜன்
முனைவர் இரா.அறவேந்தன்
முனைவர் இரா.காமராசு
முனைவர் உ.அலிபாவா



இதழ் வடிவமைப்பு
கா. குணசேகரன்

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com
இணைய தள முகவரி: www.ncbhpublisher.in

தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

சந்தா தொகையை
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch. Chennai - 600 050
A/c.No. 1035249018
IFSC Code : CBIN0282161
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


1 ஆசிரியம்...
ஆசிரியர் குழு....04

2 நகரங்களில் குழந்தைகள் குழந்தைகளாகவே இல்லை
பாமா....06

3 நாட்டார் வழக்காற்றியல் அறிவோம்
முனைவர் மு. ஏழுமலை....15

4 தமிழ்க் கல்வியின் பரிமாணங்கள்
இரா.மோகனவசந்தன்....23

5 புலியூர்க்கேசிகன்: எளிமையால் புறந்தள்ளப்பெற்ற புலமையாளர்
முனைவர் மா.பரமசிவன்.... 29

6 பண்டைய நோயறி நுட்பங்கள் அறிமுகம்
முனைவர் ஜா.திரிபுர சூடாமணி....33

7 கவிதைகளில் சாதியத் தாக்கம்
முனைவர் இர.சாம்ராஜா....37

8 சங்கப் பாடல்களில் - இக்கால பெண் கவிஞர்களின் பாடுபொருள் ஒப்பீடு
ப. நீலாவதி & முனைவர். இரா.கௌரி.... 42

9 கவிதைகள் முன்வைக்கும் பசுமை அரசியல்
ப. நவசக்திவேல் & முனைவர் க. புவனேஸ்வரி.... 47

10 சங்க இலக்கியத்தில் களிற்றுக் கொடை
இரா.சுசில்குமார்....50

11 புகையிலை குறித்த காட்சி சித்திரம்
எச்.ஹாமீம் முஸ்தபா....53

12 திருக்குறளும் மநுதரும சாஸ்திரமும் சித்திரிக்கின்ற பெண் பற்றிய மதிப்பீடுகள்
முனைவர் ஆ. நளினி சுந்தரி.... 55

13 சிலம்பு வழி வந்த மாதவி காவியம்
முனைவர் கா. வாசுதேவன்.... 61

14 கேரளநாட்டார் வழக்காறுகளில் தொல்தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள்
முனைவர் பிரபாஹரன்.கி.... 67

15 KUṬAKŪTTU: THE POT DANCE OF KṚṢṆA IN TAMIL LITERATURE AND ICONS WITH SPECIAL REFERENCE TO SAIVA TIRUMUṞAIGAL
K. Vadivelou & Dr. Saju George....69



# ஆசிரியம்...

இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம், ஓமன், சவூதி அரேபியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 150 பள்ளிகளில் பணியாற்றும் 1300க்கும் மேற்பட்ட கணித ஆசிரியர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வில் 80 சதவீத ஆசிரியர்கள் பதில் கூறமுடியாமல் தடுமாறியதாக ஓர் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்றாட வாழ்க்கையில் உண்டாகும் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டறியும் திறனை வளர்த்துக்கொள்ள உதவும் தர்க்கரீதியான பகுப்பாய்வு, இயற்கணிதம் உள்ளிட்ட பாடங்களிலிருந்து கேள்விகள் கேட்கப்பட்டதாக, கல்விக்கான முன்னெடுப்புகள் (இஜ) எனும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் தெரிவித்துள்ளது. மனப்பாடக் கல்வி முறையிலிருந்து புதிய சிந்தனைகளைத் தூண்டும் கல்வி முறையை

மாற்றியமைத்தால் இந்தநிலை மாற வாய்ப்புள்ளதென்றும் அந்நிறுவனம் கூறியுள்ளது. இக்கருத்து வரவேற்கக்கூடியதே.

பீகாரிலுள்ள பல்வேறு அரசுப் பள்ளிகளில் மூன்றரை லட்சம் ஆசிரியர்கள் பல ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர். 2023ஆம் ஆண்டில் பீகார் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நடத்தும் ஆசிரியர் சேர்ப்புத் தேர்வெழுதி அரசு ஆசிரியராகத் தேர்வாகலாம் என அரசு அறிவித்திருந்தது. இம்முடிவை எதிர்த்து ஒப்பந்த ஆசிரியர்கள் உச்சநீதிமன்றத்தில் முறையிட்டனர். "நாட்டைக் கட்டமைக்க ஆசிரியர்கள் உதவி புரிகின்றனர். அப்படியிருக்கையில் உங்களால் இந்தத் திறன்தேர்வைக்கூட எதிர்கொள்ளமுடியாது என்றால் நீங்கள் ராஜினாமா செய்துவிட்டுப் போகலாம்" என்று நீதிபதி பி.வி.நாகரத்னா ‘குட்டு‘ வைத்து வழக்கை தள்ளுபடி செய்துள்ளார்.

ஜார்கண்ட் மாநிலம் ஹசாரிபாக்கில் உள்ள ஒயாசிஸ் பள்ளி முதல்வரான எக்சானுல் ஹக் என்பவர் நீட் தேர்வுக்கான நகர ஒருங்கிணைப்பாளராகவும் துணை முதல்வர் இம்தியாஸ் ஆலம் என்பவர் தேசியத் தேர்வு முகமையின் பார்வையாளராகவும் செயல்பட்டு வந்தனர். வினாத்தாள்கள் இருந்த டிஜிட்டல் பெட்டியை உடைத்து அவற்றை கசியவிட்டதாக இவ்விருவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டு தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர். கடமை மறந்து சுயநல வெறிகொண்ட இந்த ‘ஆசிரிய‘ப் பதர்கள் கடுமையாக தண்டிக்கப்படவேண்டியர்கள்.



தர்மபுரியில் 17 வயது சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்ததாக அரசுப் பள்ளி ஆசிரியர் போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். தாயின் பராமரிப்பில் இருந்த அச்சிறுமிக்கு அவர் அவ்வப்போது கல்வி மற்றும் குடும்பச் செலவுக்கு உதவி செய்து வந்திருந்த நிலையில் தற்போது அத்துமீறியிருக்கிறார்.

ஆசிரியப் பணி அறப்பணி, எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும் என்பவற்றையெல்லாம் வழிதவறிப் பிறழும் ஆசிரியர்களுக்கு எப்படி, யார் உணர்த்துவது?

**ஆசிரியர் குழு**

கருக்கு, சங்கதி, வன்மம், மனுஷி ஆகிய தமிழின் முக்கியமான நாவல்களை எழுதியவர் எழுத்தாளர் பாமா. தலித் மக்கள் வாழ்வியல், கிருஸ்தவத்தில் சாதி, குடும்ப அமைப்பு முறை, மாணவர்களின் கல்விநிலை போன்றவை குறித்த அவரது சிந்தனைகளை வெளிப்படுத்துகிறது இந்நேர்காணல்

2024ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் 'அவ்வையார் விருது' பெறுவதற்காக சென்னை வந்திருந்த எழுத்தாளர் பாமா அவர்களை மாதவரத்திலுள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் சந்தித்தோம். இயல்பாகவும் தெளிவாகவும் அமைந்திருந்தது அவருடனான உரையாடல்.

# நகரங்களில் குழந்தைகள் குழந்தைகளாகவே இல்லை

**பாமா**

**நேர்காணல்: ஜி.சரவணன்**



**உங்களின் கருக்கு நாவல் வந்து இருபத்தைந்தாண்டுகளைக் கடந்துவிட்டது. தற்போது விருட்சங்களாகும் விதைகள் நாவல் வெளிவந்திருக்கிறது. ஒரு படைப்பாளியாக இப்போது எப்படி உணர்கிறீர்கள்?**

முதல்ல கருக்கு எழுதும்போது ஒரு எழுத்தாளரா அத புத்தகமா பப்ளிஷ் பண்ணனும் அப்டின்னு எழுதல. அது யதார்த்தமா நடந்த விஷயம். அப்ப கருக்குக்கு கிடைச்ச எதிர்ப்பு, வரவேற்பு ரெண்டையும் பாத்த பிறகு நிறைய பேர் சொன்னாங்க. பெண்களைப் பத்தி எழுதுங்க அப்டின்னு. அப்புறந்தான் சங்கதி எழுதுனேன். தொடர்ந்து வன்மம் எழுதுனேன். அப்ப இந்தியா டுடே இலக்கிய மலர் கொண்டுவந்தாங்க. அதுக்கு சிறுகதை கேட்டாங்க. அதுவரைக்கும் நான் சிறுகதை எழுதினதில்லை. அப்ப அண்ணாச்சின்னு ஒரு சிறுகதை எழுதினேன். அதுக்கு நல்ல வரவேற்பு இருந்தது. அப்பதான் எனக்கு நாம சிறுகதையும் எழுதலாம் அப்டிங்கிற நம்பிக்கை வந்தது. அப்புறம் கவிதைகளும் எழுத ஆரம்பிச்சேன். ஒன்றிரண்டைத் தவிர அதை புத்தகமா போடல.

அந்த நேரத்துலதான் நான் எழுத்தாளர் என்பது நிறுவப்பட்டது. 2000இல் கருக்கு ஆங்கில மொழிபெயர்ப்பு வந்தது. மொழிபெயர்ப்புக்கு தேசிய அளவுல சர்வதேச அளவுல விருதுல்லாம் கிடைச்சது. ஆக மெல்ல மெல்ல நல்ல சரியான வளர்ச்சிதான். வளர்ச்சி ஒருபக்கம் இருந்தாலும் எதிர்ப்புகளும் ஒரு பக்கம் இருந்துச்சி. மொழி, நடை, கலாச்சாரம், வகைமைன்னு எதிர்ப்பு இருந்துச்சி. அப்புறம் இடையில கொஞ்சம் பிரேக். ஏன்னா சொந்த வாழ்க்கையில சில பிரச்சினைகள். தங்கச்சி இறந்தது, அப்பா, அம்மா இறந்ததுன்னு… அப்புறம் தென் மாவட்டக் கலவரங்கள்… அதத்தான் வன்மம்ன்னு எழுதினேன்.

அப்புறம் மனுஷி வந்து கருக்கோட செகண்ட் பார்ட் மாதிரிதான். ஒரு பெண், தலித் பெண் தனியொரு மனுஷியாக சமுதாயத்தில் எப்படி வாழுறது? வாழ்வதற்கேற்ற ஒரு சூழல் இருக்குதா? அவங்கவங்க உணர்வுகளோட வாழ்ந்தால் அத எப்படியாவது தடுத்து நிறுத்திடணும், அழிச்சிடணுங்கிற ஒரு மனப்போக்குதான் இருந்துட்டுருக்கு.

அதுல ரொம்ப அடிபட்டேன் நான். அத ஒரு புதினமாத்தான் எழுதினேன். நிறைய பெண்களுக்கு அது பிடிச்சிருந்தது. வரவேற்பு இருந்தது. அது மொழிபெயர்க்கப்படாததால அவ்வளவா பரவலாக்கம் செய்யப்படல. ஆனா தனிப்பட்ட முறையில சில கல்லூரிகள்ல அத பயன்படுத்தினாங்க. அதோட ஆங்கில மொழிபெயர்ப்பு இப்பதான் ஆரம்பிக்கிறாங்க. இடையிடையே சுமார் அறுபது சிறுகதைகள் எழுதினேன். கடைசியில் ‘விருட்சங்களாகும் விதைகள்’ எழுதினேன்.

33 வருசம் ஆசிரியர் பணியில் இருந்திருக்கிறேன். கடைசியா ஒரு இருபது இருபத்துமூணு வருசம் தொடக்கப் பள்ளியில இருந்தேன். அது செங்கல்பட்டு மாவட்டத்துல ஒரு கிராமம். இப்ப காஞ்சிபுரம் மாவட்டம். அந்தப் பகுதியில தலித் மக்கள் முதல் தலைமுறையில படிக்க வராங்க. இன்னமும் அந்த கிராமம் அப்படித்தான் இருக்கு. சரியான சாலை வசதி, பேருந்து வசதில்லாம் இல்ல. தேநீர் குடிக்கணும்னாகூட கடையெல்லாம் கிடையாது. அந்த ஊர்தான் கடைசி என்டு மாதிரி. அந்தப் பகுதியில மக்கள்ட்ட எந்த விழிப்புணர்வும் இல்ல. படிப்பும் இல்ல. நான் 95கள்ல போனேன். 2015ல அங்கதான் நான் பணிநிறைவு பெற்றேன்,. அந்தப் பள்ளிய நான் விரும்பி ஏற்றுகிட்டு போனேன். ஹையர் செகண்ட்ரியிலேருந்து பிரைமரிக்கு போனேன். அந்தப் பகுதி ரொம்ப பரிதாபமான நிலையில இருந்துச்சி.

ஏன்னா நான் தென்பகுதியிலிருந்து வந்திருக்கேன். எனக்கு கிராமப்பகுதி வாழ்க்கை தெரியும். அங்க பள்ளிக்கூடம் நிரம்பி வழியும். இங்க பாத்திங்கன்னா போயி அவங்கள பிடிச்சிட்டு வரணும். கடலை எடுக்கிறாங்கன்னா நின்னுடுவாங்க. ஒரு கல்யாணம்ன்னா நின்னுக்கிடுவாங்க. மொட்டை போடுறதுன்னா நின்னுக்கிடுவாங்க. அவங்க வரவேமாட்டாங்க. நாம தேடிப் போயிப் போயி கொண்டுவரணும். அப்படி ஒரு நிலவரமா இருந்துச்சி. அப்ப இவங்களுக்குதான் நாம பணி செய்யணும்ன்னு வாலன்ட்டியராதான் நான் போனேன். அதுக்கப்புறம் நல்ல ஒரு மாற்றம் வந்தது. நான் போகும்போது மூன்றாசிரியர் பள்ளியா இருந்தது. அப்புறம் ஏழாசிரியர் பள்ளியா மாறுனது. ஒருகட்டத்துல 82 பிள்ளைங்க ஒரு செக்ஷன்ல இருந்தாங்க.

அந்த ஏரியாவும் நல்லாருக்கும். விருட்சங்களாகும் விதைகள்லகூட நான் எழுதியிருப்பேன். அது ரொம்ப இயற்கை சார்ந்த ஒரு இடம். இன்னிக்கும் அப்படிதான் இருக்கும். அதமாதிரி பிள்ளைங்க பல்லுயிர் மேல அன்பு உள்ள பல்லுயிர் மேல பரிச்சயம் உள்ள பரிவுள்ள குழந்தைகளாத்தான் அவங்க இருந்தாங்க. அந்தப் புத்தகம் எனக்கு மனசுக்கு ரொம்ப நெருக்கமான புத்தகம். இன்றைய காலகட்டத்தில் அது ரொம்ப தேவைங்கற மாதிரியான புத்தகம். நேற்றுகூட முதலமைச்சர்கிட்ட விருது வாங்கினப்ப எல்லா புத்தகத்தோட இதயும் ஸ்பெசிபிக்கா கொடுத்தேன்.

இது எனக்கு ஏன் முக்கியமா படறதுன்னா அந்தப் பள்ளியில ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குமான உறவு ரொம்ப விரிஞ்சி போயி ரொம்ப அந்நியப்பட்டு போன ஒரு நிலைமை. இப்பமும் அப்படிதான் இருக்குது. குழந்தைகளோட உள்ளார்ந்த ஒரு உலகத்தை நாம பாக்கவே மாட்டேங்குறோம். புரிஞ்சிக்க மாட்டங்குறோம். அத வெளிக்கொணரணும். இந்தப் பயணம்ங்கிறது இதான்.

**முதல்ல நீங்க கருக்கு நாவல் எழுதத் தொடங்கும்போது இந்த மொழி செல்லுபடியாகுமா என்று தோன்றியதா? திட்டமிட்டு இந்த மொழியில் எழுதவேண்டும் என்று எழுதினீர்களா? அல்லது இயல்பாக எழுத வந்ததா?**

நான் இத புத்தகமா போடணும்ன்னு எழுதல. அந்தமாதிரி எந்த எண்ணங்களும் என்ட்ட இல்ல. இது நான் எனக்காக எழுதினது. கான்வென்ட்ல ஏழு வருசம் இருந்துட்டு வெளில வந்துட்டேன். வந்த பிறகு ரொம்ப இக்கட்டான ஒரு நேரம். சாப்பாட்டுக்கு வழியில்ல. இருக்க சரியான இடம் இல்ல. அப்ப எல்லாருமே எனக்கு அந்நியர்களாதான் தெரிஞ்சாங்க. ஆனா வாழணும்ன்னு இருக்கு. எப்படி வாழ்றதுன்னு தெரியல. அந்த ஒரு மனநிலையிலதான் இருந்தேன். அடுத்தவேளை சாப்பாட்டுக்கு எனக்கு வழி கிடையாது. ஒரு ரெண்டுங்கெட்டான் நிலமை. அந்த ஒரு சூழல்லதான் அப்ப எனது கடந்தகால நினைவு, வெறுமை, கான்வென்ட் லைப்ல கிடைத்த ஏமாற்றங்கள் எல்லாம் சேர்ந்து ரொம்ப பாடுபட்டேன். மன அழுத்தம் நிறைய இருந்தது. அப்ப எனக்கு ஆசுவாசமா இருக்கும் அப்டிங்கறதுக்காகத்தான் எழுதுனது. அதுனால இந்த மொழி அந்த மொழி அது வருமா வராதா என்ற எண்ணமே எனக்கு கிடையாது.

அப்படி எழுதியபோது என்னன்னா அன்கான்சியஸா அது நடந்தது. நகர்ப்புறங்களை எழுதும்போது கிளாசிக் தமிழ்ல எழுதியிருந்தேன். எங்க கிராமத்து வாழ்க்கைய எழுதும்போது மக்கள் மொழியிலேயே எழுதியிருந்தேன்.

அப்ப மார்க் பாதர்தான் பாத்துட்டு இது நல்லாருக்குது. இது எல்லாத்தயும் உங்க மக்கள் மொழியிலேயே எழுதியிருந்தா நல்லாருக்கும் என்று அவர் சஜஸ்ட் பண்ணதால எல்லாத்தையும் அப்புறம் மாத்தினேன். நான் புத்தகமா போடுறதுக்கு விரும்பல. ஏன்னா உண்மையான பேரு, பட்டப்பேருன்னு புனைவா நான் எழுதல. நம்மளத யாரு பாக்கப்போறா அப்புடின்னு எழுதுதனதுதான்.

ஆனா மார்க் பாதர்தான் இத கண்டிப்பா புத்தகமா போடணும்ன்னு சொன்னாரு. அவரையுமே எல்லாரும் டிஸ்கரேஜ்தான் பண்ணாங்க. இது என்ன மொழிநடை, இது என்ன வகைமை இதைப்போய் புத்தகமா போடுறீங்கன்னு. அப்ப பாதர்தான் முயற்சி எடுத்து ஒரு சின்ன பதிப்பகம் மூலமா கொண்டு வந்தாங்க. சின்ன புத்தகமா 12 ரூபான்னு போட்டோம். அங்கங்க சின்ன சலசலப்பு வந்தது. மெயின்ஸ்ட்ரீம் ரைட்டர்ஸ்ல்லாம் விமர்சனம் பண்ணாங்க. அந்த மொழிநடையை வச்சி அப்புறம் ஒரு ஒழுங்குமுறையே இல்ல, பழைமைய வச்சில்லாம் நிறைய பேசுனாங்க. ஆனா சில ரைட்டர்ஸ் வந்து அத ரொம்ப புகழ்ந்தாங்க.

பிரபஞ்சன், சுஜாதா, சுபமங்களா ஆசிரியர் கோமல் சுவாமிநாதன் இவங்கள்ளாம் நல்ல ஒரு ரிவ்யூ கொடுத்தாங்க. அதுக்கப்புறம் கொஞ்சம் பரவலாக்கப்பட்டது.

அப்புறம் அசோகமித்திரனாலதான் இது ஆங்கிலத்துக்குப் போனது. மினி கிருஷ்ணன்ன்னு அவங்க எடிட்டர். அவங்க அப்ப நார்த் இன்டியால இருந்தாங்க. அப்ப தலித் புத்தகங்கள ஆங்கிலத்துல கொண்டு வர்றதுக்கு ஒரு புராஜக்ட் கிடைச்சிருக்குன்னு சொன்னப்ப இவரு கருக்குன்னு ஒண்ணு வந்திருக்கு. நல்லாருக்குன்னு எல்லாரும் சொல்றாங்க. வித்தியாசமாதான் இருக்குன்னு சஜஸ்ட் பண்ணிதான் அவங்க எடுத்தாங்க.

அப்ப லட்சுமி ஹோம்ஸ்ட்ராங்ன்னு நல்ல ஒரு டிரான்ஸ்லேட்டர் கிடைச்சாங்க. அப்புறம் அது கிராஸ்வேர்ட் அவார்டெல்லாம் வாங்குனுச்சி.

**கருக்கு நாவல் காலகட்டத்து சாதிய ஒடுக்குமுறைய நம்மளால புரிஞ்சிக்கமுடியுது. ஆனா முப்பது வருசம் கழிச்சி நீங்க சம்பாதிக்க ஆரம்பிச்சி தன்னிறைவு பெற்ற பிறகும்கூட வீடு தரமுடியாது போன்ற சாதிய ஒடுக்குமுறை என்பதை எப்படிப் புரிந்துகொள்வது?**

அதாவது எத்தன வருசம் ஆனாலும் ஜாதி ஒழியலல்ல. ஜாதி இருக்கிறவரை இந்த நிலைமை நீடிச்சிட்டுதான் இருக்கும். வேங்கைவயல் நிகழ்ச்சிய எடுத்துக்கங்க, இப்ப நடக்குறதுதானே. நாம நெனச்சிகூட பாக்காதமாதிரி இன்னும் கோரமா நடக்கும். அந்த காலத்துல வன்முறைகள் நடந்தாலுமே இப்ப இவ்வளவு குரூரமா இருக்கு. வளரும் தலைமுறைகள்ட்டகூட ஜாதிவெறி அதிகமா இருக்கு. இது நாம எதிர்பார்க்காத ஒண்ணு. அதனால வளந்திருக்கா மாறிருக்கான்னா கொஞ்சம் மாறியிருக்கு. தலித் மக்கள்ட்ட ஒரு எழுச்சி வந்திருக்கு.

அம்பேத்கர் நூற்றாண்டு கொண்டாடின காலத்துல அரசியல் ரீதியா எழுச்சி இருந்துச்சி. இலக்கிய ரீதியா எழுச்சி இருந்தது. சமூக எழுச்சியும் இருந்துது. அதனால கல்வியோட முக்கியத்துவம் தலித் மக்களுக்கு புரிய ஆரம்பிச்சிது. பாடுபட்டாலும் படிக்கணும். நம்மள விடுதலைப்படுத்திக்கணும். போராட்டத்தின் மூலமா நாம விடுபடணும். அதனால அடிச்சா திருப்பி அடிக்கக்கூடிய மனபலம் உடல்ரீதியா இல்லாட்டாலும் பொருளாதாரம் இல்லாட்டாலும் திருப்பி அடிக்கணும் அப்படிங்கிற நிலமை வந்துருக்கு. அடி வாங்குறவன் எவ்வளவு காலம் அடி வாங்கிகிட்டே இருப்பான்? ஆதிக்க சாதிக்காரங்கள சார்ந்து வாழக்கூடாதுங்குற தெளிவு வந்துருக்கு. அது நடந்துருக்கு.

ஆதிக்கசாதிக்காரங்க விவசாயத்தப் பொறுத்தவரையில நிலங்கள பூரா பணப்பயிரா மாத்தி யாருகிட்டயாவது ஒப்படைச்சிடறாங்க. தென்னந்தோப்பு, மாந்தோப்பு, கொய்யா தோப்பு இப்புடி பயிர் பண்றாங்க. உணவுப் பயிர் ரொம்பவும்

குறைஞ்சிருச்சி. தலித் மக்கள் நெற்பயிர் விவசாயத்தில் கைதேர்ந்த நிபுணர்கள். இப்ப அந்த வேலை இல்லை. ஏன்னா நிலமும் இல்லை. அதனால விவசாயத்த நம்பி இல்லாம சாலை போடுறது, கொளுத்து வேலை, பிளம்பர் வேலைன்னு எல்லாம் சிதறிட்டாங்க. கஷ்டப்பட்டாவது பிள்ளைகள படிக்க வக்கிறாங்க.

மாற்றங்கள் இருக்குது. ஆனாலும் தீண்டாமை இன்னைக்கும் இருக்குது. வடிவங்கள் மாறியிருக்கு. அதுக்கு கருத்தியல் ரீதியான போராட்டம், கலாச்சார ரீதியான போராட்டம் என்ற முறையில் நடந்துகிட்டேதான் இருக்கு.

**தனித்து வாழ நேரும் ஒரு தலித் அல்லாத பெண்ணுக்கும் தலித் பெண்ணுக்குமான சிக்கல்களில் உள்ள அடிப்படை வேறுபாடுகள் என்னென்னன்னு சொல்லமுடியுமா?**

பொதுவாக பெண்ணுன்னாலே ஒரு வலியும் வேதனையும் இருக்கு. நம்ம சமுதாயத்தப் பொருத்தவரையில பெண் அப்டின்னாலே கல்யாணம் பண்ணியிருக்கணும். அவ பொறந்தவுடனே சொல்றது ஒரு ஆணுக்கு நல்ல மனைவியா, ஒரு குடும்பத்துக்கு நல்ல ஒரு பெண்ணா இருக்கணும்ங்கறதுதான். அப்படி சொல்லிதான் பொம்பள புள்ளய வளப்பாங்க. வீட்டில பாத்தாலே தெரியும். வீடு பெருக்கறது, பாத்திரம் கழுவறது இதெல்லாம் பொம்பள புள்ள வேல. ஆம்பள பசங்களுக்கு வேலைகளே இருக்காது. விளையாட்டு பொருள்கள்லகூட வித்தியாசம் இருக்கும்.

பெண் வீட்டில் எந்தக் கேள்வியும் கேட்கமுடியாது. வீட்டுச்சூழல்லயே ஆண் பெண்ணுன்னு பிரிச்சிடுவாங்க. பெண் என்பவள் குதிரைக்கு கடிவாளம் கட்டினா மாதிரி கணவன், குடும்பம் என்று அப்படியேதான் கொண்டு போவாங்க. இதுல தலித்துன்னாலும் சரி தலித் இல்லன்னாலும் சரி எல்லா பெண்ணுக்கும் ஒண்ணுதான். இது ஆணாதிக்க சமுதாயம், அதிலும் உயர்ஜாதி ஆணாதிக்க சமூகம்.

தலித் பெண், தலித் அல்லாத பெண் என்பதில் தலித் பெண்ணுக்கு கூடுதல் சுமை என்னன்னா ஜாதி அடையாளம். இந்த ஜாதி அடையாளம் இருந்தாலே அங்க மதிப்பு இல்ல. அங்க மனித உயிர் அப்படிங்கறது அடிபட்டுப் போகும். அதாவது இவள என்ன வேணாலும் பண்ணலாம். பெண் என்றாலே என்னவும் பண்ணலாம். தலித் பெண் என்றால் எந்தப் பாதுகாப்பும் கிடையாது. இது பாலியல் ரீதியானது மட்டுமில்லை. கேவலமாக நடத்துவது, அசிங்கமாக பேசுவது எல்லாம் செய்வார்கள்.

தன்னிச்சி வாழும்போது சாபக்கேடு என்னன்னா இருபத்தஞ்சி வயசு தாண்டிட்டாலே நம்மள கேக்காமலேயே திருமதின்னு போட்டுருவாங்க. நான் திருமதி இல்லன்னு சொன்னா ஒரு வினோத உயிரப் பாக்குறமாறி பாப்பாங்க. கல்யாணம் ஆகாதது ஒரு குற்றம் மாதிரி பாப்பாங்க. அப்பன்னா விடோவா அப்டின்னு கேப்பாங்க.

மனுவுல சொன்னமாதிரி ஒரு தகப்பனுக்கு சொந்தமான சிறுமி, இல்லன்னா ஒரு ஆணுக்கு சொந்தமான மனைவி, இல்லன்னா ஒரு மகனுக்கு சொந்தமான அம்மா இப்படித்தான் அடையாளம் பண்ணுவாங்க.

இது இல்லாதவங்கள்லாம் மனிதப் பிறவிகளே கிடையாது. அவங்க மனப்பதிவுல இப்படித்தான் இருக்கும்.

தலித் பெண்களைப் பொருத்தமட்டில் ஒரு ஆணைச் சார்ந்துதான் வாழணும்ங்கற நிலை ரொம்பக் குறைவு. ஆண் இருந்தாலும் இல்லாட்டிலுமே ஒரு பெண்ணால் குடும்பத்தைப் பார்த்துக்கொள்ளமுடியும். நிறைய தலித் குடும்பங்கள் பெண்களாலதான் நடக்குது,.

தனித்து வாழும் பெண்கள்ன்னா நான் மனுஷியில எழுதினமாதிரி நாம இயல்பா இயங்கமுடியாது. நாம ஆசப்பட்டாகூட நல்லா டிரஸ் பண்ணலாம், பூ வைக்கலாம்ன்னு செய்யமுடியாது. எங்க போனாலும் தனியாவா? தனியாவா? என்ற வார்த்தை தொடர்ந்துகிட்டே இருக்கும். காய்கறி வாங்குகிறபோது கொஞ்சம் கூடுதலாக வாங்கிவிட்டால்கூட ஒருத்திக்கு எதுக்கு இவ்வளவுன்னு கேப்பாங்க. கேரக்டர தப்பா பேசுவாங்க. வீட்டுக்கு யாராவது வந்தா எப்ப வந்தாங்க, யாரு வந்தாங்க, ஏன் வந்தாங்கம்பாங்க. முள்ளு மேல நிக்கிறமாதிரிதான். அதையெல்லாம் மீறிதான் நிக்கப் பழகிக்கணும்.

தலித் அல்லாதவர்களுக்கு கூடுதலா ஜாதி அந்தஸ்து இருக்கு. அவர்கள் தலித்துகளைவிட பொருளாதாரத்தில் கொஞ்சம் மேம்பட்டவர்களாக இருப்பார்கள். அதை வைத்து காப்பாற்றிக்கொள்ளலாம். தலித்துகள் என்பவர்களுக்கு நிராயுதபாணியான நிலைமைதான்.

**கிறித்தவத்தைத் தழுவிய பிறகு தலித்துகள் சாதியற்றவர்களாக ஆகிவிட்டார்கள் என்ற அரசின் முடிவை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

அரசுக்கு சாதி இருக்குன்னு தெரியும். தலித்தாக இருந்து கிறித்தவத்துக்கு மாறுகிறவர்கள் எஸ்சியிலிருந்து பிசியாக மாறுகிறார்கள். ஆனா அவங்களோட வாழ்க்கை மாறல. பொருளாதாரம் மாறல. இருக்குற சமூகச்சூழல் மாறல. எதுவுமே மாறல. மதம் மட்டும்தான் மாறியிருக்கு. மதம் மாறினதால வாழ்க்கைல என்ன மாறிட்டாங்க? ஆனா இட ஒதுக்கீடு குடுக்கறது கிடையாது.

அதாவது ஒரு பறையர் கிருஸ்தவரா இருந்தாலும் கிருஸ்தவப் பறையராதானே இருக்காரு. பள்ளர்

கிருஸ்தவர், அருந்ததியர் கிருஸ்தவர். வெள்ளாள கிருஸ்தவர் அப்படிதான் இருக்கு.

கிருஸ்தவத்துல ஜாதி ஒட்டு இருக்கு. ஜாதி மறையல. தலித்துகள் ஏன் கிருஸ்தவத்துக்கு மாறினாங்கன்னா இந்த அவமானத்திலிருந்து தப்பிப்பதற்காகத்தான். இந்து கோயில்கள்ல வுடமாட்டறாங்க. தீண்டாமை இருக்குது. வேலை வாங்கிட்டு சரியான கூலி குடுக்கமாட்டுறாங்க. நம்மள ஈனப்பிறவின்னு சொல்றாங்க. மாட்டுக்கறி திங்கறவங்கன்னு சொல்றாங்க.

கிருஸ்தவ மதத்துல அப்படி இல்ல. சர்ச்சுக்கு எல்லாரும் போகலாம். எல்லாரும் ஒண்ணா உட்கார்ந்து மாட்டுக்கறி சாப்பிடலாம். எல்லாரையும் மதிக்கிறான். உட்கார வச்சி பேசுறான். இயேசு சொன்னதெல்லாம் எல்லாரையும் நேசிங்க, அன்பு செய்யுங்க. எல்லாரும் சமம் அப்டின்னு சொல்றாங்க. எல்லாம் நல்ல மதிப்பீடுகள்தான். அத கேக்கும்போது நம்பி மாறிப் போறோம். ஆனா அங்க அப்படி இல்ல.

ஆனா கிருஸ்தவத்துல ஒரு வாய்ப்பு என்னன்னா நாம கேள்வி கேட்கலாம். கிருஸ்து என்ன சொன்னாரு? நீ ஏன் என்ன இப்படி நடத்துற? நான் இங்கதான் இருப்பேன்னு உரிமை கோரலாம். கிருஸ்தவத்துக்கு போனதுனால தலித் பெண்கள் ஜாக்கெட் போடமுடிஞ்சிச்சி. பொதுவெளியில நடமாட முடிஞ்சது. கோயில்கள்ல உள்ள போகமுடிஞ்சது. அப்பகூட டவுசர் கோவில் பானா கோவில் எல்லாம் கட்டி இவங்க தனியா இவங்க தனியா என்றுகூட இருந்திருக்கிறது.

மிஷனரிகள் சமத்துவத்ததான் போதிச்சாங்க. இங்க உள்ளவங்கதான் சாதிய சேத்துகிட்டாங்க. ஆனா இப்ப தலித் கிருஸ்தவ விடுதலை இயக்கம் அப்படின்னுல்லாம் வந்திருக்கு. ஒரு மாற்றம் வந்துருக்குது.

**சரி, கிறித்தவத்தைத் தழுவினாலும் தலித்துகள் மீதான சாதி முத்திரை தொடர்கிறது என்பதை கருக்கு நாவலில் வெளிப்படுத்தியிருந்தீர்கள். இந்த முப்பதாண்டுகளில் நிலைமை மாறியிருக்கிறதா?**

கொஞ்சம் மாறியிருக்கு. மாறிருக்குதுன்னா ஜாதிகள்லாம் இருக்குது. நாம முன்னேறும்போது அவங்களால தடுத்து நிறுத்த முடியல. வெளிப்படையா இல்லாம ரொம்ப ஏதாவது நுட்பமா செய்யமுடியுமான்னு பாக்குறாங்க. தமிழகத்தைப் பொருத்தவரையில் 60 சதத்திற்கும் மேல் தலித்துகள்தான் கிருஸ்தவர்கள். மெஜாரிட்டி. ஆனா மைனாரிட்டியாக இருக்கிற நான் தலித்துகள்தான் அதிகாரப் பதவிகளில் இருப்பார்கள். இன்னமும் அது இருக்கத்தான் செய்யுது. அதிகாரமெல்லாம் ஆதிக்க சாதி கிருஸ்தவர்களிடம்தான் இருக்கிறது. ஒப்பீட்டளவில் பார்க்கப்போனால் எவ்வளவோ பரவாயில்லை, கொஞ்சம் மாற்றம் வந்திருக்கிறது என்று சொல்லலாம்.

**பெண்களுக்கெதிரான பாலியல் குற்றங்கள் மற்றும் ஒடுக்குமுறைக்கெதிரான அரசின் சட்டங்களைப் பற்றிக் கூறுங்களேன்...**

சட்டங்கள் போதுமானவையாக இருக்கின்றன. அவற்றை நடைமுறைப்படுத்துவதில்தான் சிக்கல்கள் உள்ளன. சிக்கல்ன்னா என்ன வேணும்ன்னு பண்றாங்க. கிரமப்புறங்கள்ல பெண்களுக்கு அதுபற்றிய போதுமான புரிதல் இல்ல. அப்படியே போனாலுமே அதிகாரத்தில் இருப்பவர்கள் பெண்களை அவ்வளவாக பொருட்படுத்துவதில்லை. சட்டத்தை வளைச்சி திரிச்சிதான் செய்வாங்க. சட்டங்களெல்லாம் இருக்கு. ஆனால் அதனால பெரிய பயன் ஒண்ணுமில்ல.

ஒடுக்குறவன்கிட்டயே கம்பக் கொடுத்து காப்பாத்துன்னா திரம்பத்திரும்ப அடிக்கத்தானே செய்வான். போக்சோ சட்டம் தினந்தினம் செய்தி வந்துகிட்டுதான் இருக்கு. என்ன பண்றது? இந்த நாட்டுல பொறந்ததுதான் தப்பு. சட்டமெல்லாம் சரிதான் அதை நல்லா நடைமுறைப்படுத்துனாலே போதும்.

**கன்னியாஸ்திரியாகி அடித்தள மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற உங்கள் நிறைவேறாத எண்ணம் தற்போது ஈடேறியதாக சொல்லமுடியுமா?**

முழுமையா நிறைவேறாட்டியும் கான்வென்ட்ல இருந்ததவிட நிறைய நடந்துருக்கு. அங்க இருந்திருந்தா நான் ஒரு எழுத்தாளர் அப்டின்னு அறிமுகம் ஆகியிருக்கமாட்டேன். நேரிடையா இல்லாட்டியும் என்னோட எழுத்து பரந்துபட்ட அளவில் போய்ச் சேர்ந்திருக்கிறது. அதன் தாக்கம் நிறைய பேருக்கு இந்த சமூகத்தைப் புரிந்துகொள்ள உதவிருக்கு. இந்த சமுதாயத்துக்கு நம்மோட பங்களிப்பு என்னவா இருக்கணும்? எப்படி வாழணும்? அப்படிங்கறதையெல்லாம் யோசிக்க வச்சிருக்கு. அதுல எனக்கு திருப்தியா இருக்கு. நாம என்ன நெனச்சி எழுதுனமோ அது சரியா நிறைவேறியிருக்கு.

**தலித்திய பெண்ணியம் என்கிற வகைமை ஒரு பேசுபொருளானதற்குக் காரணமாயிருந்தவர்களில் நீங்களும் ஒருவர். அதைப் பற்றி விளக்குங்களேன்...**

முதல்ல எனக்கே இந்த இஸம் பத்தியெல்லாம் ஓர்மை இல்லை. கருக்கு எழுதின பிறகு சங்கதி எழுதனப்பதான் தலித் பெண்கள்ட்ட இருக்கிற சக்தி அந்தப் பெண்ணியம்ங்கறது வித்தியாசமா இருக்குதுன்னு எனக்கு புரிஞ்சது.

பொத்தாம் பொதுவாக ஆணாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற பெண், ஆணுக்குப் பெண் சமம் இப்படியான கோட்பாடுகள்தான் நிறைய பேசுறாங்க.



பாரதி கண்ட புதுமைப்பெண் என்று வீராவேசமான வசனம்ல்லாம் பேசிட்டிருக்கிற கூட்டங்கள் இருக்குது. அவங்க நடுத்தட்டு வர்க்கப் பெண்கள் பத்தி கவலப்படறதே கிடையாது. அடித்தட்டு மக்களின் வலிகளைக் கண்டுகொள்வதில்லை.

ஒரு பெண்ணோட மாண்புக்கும் ஒரு மனுஷிங்கிற நிலைமைக்கும் அவ இந்த உலகத்துல இருக்கவே லாயக்கு இல்லாத ஒரு உயிர் என்று அடிப்படையே நசுக்கப்படும்போது அதப்பத்திப் பேசறதுக்கு சமூக அந்தஸ்து இல்ல. சமூக வெளியில சுதந்திரமா வந்து நடமாடமுடியல. புழங்கமுடியல. எல்லா வகையிலயும் ஓரங்கட்டி இருட்டடிக்கப்பட்ட அந்தப் பெண்ணோட மனநிலை. அவளுக்கென்ன விடுதலை? அப்டிங்கறதப் பத்தி யோசிக்கறதில்லை.

அதேசமயம் அந்தப் பெண்கள்ட்ட எப்படிப்பட்ட ஒரு கலகலப்பான வாழ்க்கை முறை, உழைப்பு, அவங்க எப்படி வாழ்க்கைய சுவாரசியமா கொண்டு போறாங்க? அந்த மாதிரியான விஷயங்களயும் யாரும் வெளிய கொண்டு வர்றதில்ல.

சங்கதி நாவல்ல போராட்ட குணமுள்ள பெண்களத்தான் நிறைய எழுதினேன். நான் பாத்த, ரசிச்ச, கேள்விப்பட்ட பெண்கள் அவங்க.

ஆயுதம் வச்சிப் போராடிதான் இவங்கள எதிர்க்கணுமுன்னு இல்ல. நமக்கான உறுதி வெளியில இருந்து இல்ல, நம்மகிட்டயே இருக்கு. உழைக்கிறதே அந்தப் பெண்களுக்கு ஒரு உல்லாசமான வேலை. பாட்டு பாடிகிட்டு கதை சொல்லிகிட்டு நாட்டுப்புற கதைகளை பேசிகிட்டு இருப்பாங்க.

யாருமே வந்து இவ்வளவு வேலை இருக்கேன்னு முனங்கிகிட்டோ கஷ்டப்பட்டுகிட்டோ வேல செய்யறதில்ல. அப்படியே பழகிப் பண்ணுவாங்க. சிரிப்பாங்க. விளையாடுவாங்க. வலிகளை, சுமைகளை லேசாக எடுத்துப்பாங்க.

வாழ்றது கஷ்டப்படுறதுக்கு இல்ல. நொந்து நூலாகிப் போய் உட்காருவது கிடையாது வாழ்க்கை. சந்தோஷமா இருக்கறது. சுதந்திரமா இருக்கிறது அப்படிங்கறத தத்துவார்த்த ரீதியில இல்லாம வாழ்க்கை அனுபவத்தில் தெரிஞ்சிக்கிறாங்க. இன்னக்கி இவ்வளவுதான் இருக்குன்னா கூழைக் காய்ச்சி குடிச்சிட்டு சந்தோஷமா படுத்துத் தூங்குறாங்க. இன்னிக்கு நிறைய இருக்குன்னா கறியுஞ் சோறுமா நல்லா சாப்பிடுவாங்க.

இன்னிக்கி நான் சந்தோஷமா இருக்கணும். என்ட்ட இருக்கு, அவங்ககிட்ட இல்ல, அவங்களுக்கு கொஞ்சம் கொடுப்போம். நீங்க இன்னிக்கும் எந்த தெருவுக்கும் போங்க இருக்கறத தாராளமா குடுப்பாங்க. நல்ல ஒரு விருந்தோம்பல், மனிதநேயத்தை பரப்புதல். இதெல்லாம் அவங்களுக்கு தெரிஞ்சிதான் செய்யிறாங்கன்னு நான் சொல்லமாட்மேன். இது அவுங்களுக்குள்ளேயே இருக்குற உள்ளுணர்வு.

ஆக இந்தப் பெண்ணியம்தான் நுகர்வு கலாச்சாரம், மனித உறவுகள் மடிந்துபோவது, குடும்பம் சிதைந்துபோதல் போன்ற இந்த காலகட்டத்தில் இது ஒரு முக்கியமான தேவைன்னு எனக்கு தோணுது. அதுதான் மனிதத்தை இன்னமும் உயிர்ப்போட வச்சிருக்கு.

இவங்கள்ட்ட இருக்கிற சுதந்திரமும் மனநிலையும் பணக்காரங்கள்ட்ட இருக்காது. அந்த நிலை இன்னும் தூக்கலாக ஆண்கள்ட்டன்னுகூட சொல்லமாட்டேன் தலித் பெண்கள்ட்ட, இருக்குது. மனிதத்தை நேசிச்சி மலர வைக்கிறாங்க அவங்க. இதத்தான் நான் தலித் பெண்ணியம்ன்னு சொல்றன்.

**தமிழகத்தில் தற்போதைய குடும்ப அமைப்பு முறை பற்றி...**

மரபுரீதியான குடும்ப அமைப்பு மாறிகிட்டிருக்கு. முன்ன கூட்டுக்குடும்பங்கள் நிறைய இருந்தது. அதிலயும் குறைகளும் இருந்தது. நிறைகளும் இருந்தது. இப்ப தனிக்குடித்தனம். இதிலயும் குறைகள் இருக்கு. நிறைகள் இருக்கு. ஆனா இதுதான் பெஸ்ட் இதுதான் பெஸ்ட்ன்னுல்லாம் சொல்லமுடியாது. காலத்தின் மாற்றத்திற்கேற்ப எல்லாமே மாறிக்கொண்டிருக்கிறது, என்னென்ன சந்தர்ப்பத்தில் யார் யாருக்கு என்னென்ன அவசியமாக இருக்கிறதோ அதைத் தீர்மானம் பண்ணிக்கொள்ளவேண்டும்.

ஒட்டுமொத்தமாக சொல்லவேண்டுமென்றால் முதியவர்களை புறந்தள்ளுகிற மனநிலை அதிகம் வந்திருக்கு. அது வரவேற்கப்படக்கூடிய விஷயமல்ல. நகரங்களில் குழந்தைகள் குழந்தைகளாகவே இல்லை. கமாடிட்டியாக இருக்கிறார்கள். பையன் ஒரு போன். பொண்ணு ஒரு போன். அவங்க உலகமே அதுலதான் இருக்கு. ஸ்கூலப் பாத்தீங்கன்னா கொடுமையா இருக்குது. பேக்டரி மாதிரி இருக்குது. குழந்தைமைங்கறதே இல்லாமப் போச்சு. ஆனா கிராமத்தில் குழந்தைகள் குழந்தைகளாகவே இருக்கிறார்கள். விளையாடுறாங்க. ஓடுறாங்க. அங்க இடமிருக்குது. ஓரளவுக்கு தாத்தா பாட்டி உறவுகள மதிக்கிறாங்க.

இன்னொன்னு விவாகரத்துகள். அத தப்புன்னும் சொல்லமாட்டேன். இருக்கட்டும் அப்டின்னும் சொல்லமுடியல என்னால. ஏன்னா பிடிக்காத ஒருத்தன்கூட வருசம் பூரா மல்லுகட்டி சாவறதவிட வெளில வந்துர்றது நல்லது. இன்னொன்னு சின்னச்சின்ன காரணத்துக்கெல்லாம் ஒரு புரிதல் இல்லாம ஒரு கவுன்சிலிங் இல்லாம பிரிஞ்சிக்கிறதும் தேவையில்லாத ஒண்ணு.

குடும்பங்கிற அமைப்பு சொத்துக்காகவோ நகைக்காகவோ இல்ல. அதனால குடும்பம் குடும்பம்ன்னு மரபுரீதியா இழுத்து பிடிச்சிட்டு வாழ்றது தேவையில்லை. ஏன்னா குடும்பங்கறது சந்தோஷமா வாழ்றது. சுதந்திரமா வாழ்றது. அது கணவனானாலும் மனைவியானாலும் அவங்கவங்களுக்குன்னு ஒரு வெளி இருக்கு. அந்த சுதந்தரத்த கொடுக்கறது இல்ல. இருக்குது. இருக்கறத அனுமதிக்கணும். சில பெண்களும்கூட அர்ரகண்ட்டா ஆண்கள அடக்கி வச்சிருக்காங்க. அப்படி இருக்கக்கூடாது. நீ மனுசன். நான் மனுஷி. கசப்பு வரலாம். அவங்கவங்களுக்குன்னு தனி எண்ணங்கள், தனி உணர்வுன்னு நிறைய இருக்கு.

சேந்து வாழணும்ன்னா அட்ஜஸ்மென்ட்தான் இருக்கணும். விட்டுக்கொடுத்தல் இருக்கணும். என்னப் பொருத்தவரையில கல்யாணம் பண்ணாலும் பண்ணாட்டாலும் மகிழ்ச்சியா இருக்கணும். சுதந்திரமா இருக்கணும். ஏன்னா வாழ்க்கை ஒரு வாழ்க்கைதான்.

**ஆமாம், இதையொட்டி ஒரு கேள்வி. கணவனைப் பிரிந்து ‘சிங்கிள் மதர்‘ என்ற குடும்ப அமைப்பு ஒன்று உருவாகியிருக்கிறதே, அதைப்பற்றி...**

உலகம் பூராவும் அப்படி நிறைய இருக்காங்க. கணவனை விட்டு பிள்ளைக்காக, பிள்ளைக்காகன்னு போறாங்க. அந்தப் பிள்ளைக்கு முழுமையான ஆளுமைத்திறன் வளரணும். அப்படி இல்லாத பட்சத்தில் அது எதுக்குன்னு ஒரு கேள்வி வருது. சின்னப்பிள்ளைகளை நாம கட்டாயப்படுத்தி உறவுகளை நேசிக்க வைக்கவே முடியாது. அதாவது அது குழந்தைக்கு கஷ்டம். அம்மா வந்து ஒரு காலகட்டம் வரைக்கும் சப்போர்ட் பண்ணுவாங்க. ஏன் பண்றாங்கன்னா இந்த சமுதாயம் அப்படி. ஏத்துக்குறதில்ல. எப்படி சிங்கிள் வுமன ஏத்துக்கறதில்லையோ அதே மாதிரி சிங்கிள் மதரை ஏத்துக்கறதில்ல. ஸ்கூல் அட்மிஷனுக்குப் போனா அம்மா மட்டுந்தான் என்கிறபோது அந்த அம்மாவையும் ஏத்துக்கமாட்டாங்க. அந்தப் பையனுக்கும் கொடுக்கவேண்டிய ஸ்பேஸ குடுக்கமாட்டாங்க. இப்பிடி ஒரு அவலநிலை இருக்குது. அதனால சிங்கிள் மதர் வைராக்கியமா என்னால முடியும்ன்னு தைரியமா இருந்தாகூட சமுதாயம் வந்து ஒவ்வொரு நாளும் பலவீனப்படுத்திகிட்டே இருக்கு. அதனால அவங்க நொந்துபோறாங்க.

இப்ப என்னையே எடுத்துக்கங்க. நான் தண்ணி பிடிக்க வரிசையில நின்னாகூட நீ தனியாதான இருக்க, உனக்கென்ன அவசரம்ன்னுதான் கேப்பாங்க. நீ வாழத் தகுதியில்லாதவள்னு சொல்லிகிட்டே இருப்பாங்க. ரொம்ப கஷ்டம்.

ஒண்ணு அந்தப் பொண்ணுக்கு பேமிலி பேக்ரவுண்ட், சொந்தபந்தங்கள், நண்பர்கள் அப்புடி யாராவது உதவியா இருந்தாதான் உண்டு. இல்லன்னா அந்தப் பொண்ண, அந்தப் பிள்ளைய வாழமுடியாத பண்றதுக்கு நிறைய நிர்பந்தங்கள பண்ணுவாங்க. ஆனாலும் இருக்குது. அதப்படி நிறைய பேர் வாழ்ந்துகிட்டும் இருக்காங்க. இத வரவேற்கணும். தனி மனுஷியாக இருக்குறது அவங்க பண்ண தப்பு கிடையாது. அவன் விட்டுட்டு போனான்னா என்ன பண்ணமுடியும்? அவன் பின்னாலேயே ஓடணுமா? இந்த சமுதாயம் எந்தமாதிரி இத எதிர்கொள்ளணும்? இப்படி டார்ச்சர் பண்றது ரொம்ப ரொம்ப மோசமான விஷயம்.

ஆனா கிராமத்துல இதல்லாம் ஒரு பிரச்சினையே இல்ல. தனி மனுஷியா பிள்ளைகளை படிக்க வச்சி ஆளாக்கிருக்கான்னு அவள பாராட்டுவாங்க.

**கல்விப்புல அனுபவத்தை ‘விருட்சங்களாகும் விதைகள்‘ நாவலில் எழுதியிருந்தீர்கள். மேலும் வேறென்ன எழுதியுள்ளீர்கள் அல்லது எழுதப் போகிறீர்கள்?**

நிறைய சிறுகதைகள் எழுதியிருக்கேன். கல்வி சார்ந்து அந்தப் பிள்ளைகளை வைத்து உண்மைச் சம்பவங்களை எழுதியிருக்கேன். எழுதணும்ன்னா நிறைய எழுதலாம். என்னோட விருட்சங்களாகும் விதைகள் நிறைய போகணும்ன்னு நினைக்கிறேன். மத்த புத்தகங்களல்லாம் பத்தி நினைக்கமாட்டேன். டீச்சர்ல்லாம் இத வாசிக்கணும்.

பிள்ளைகளோட உளவியல், கலாச்சார பின்னணி இதல்லாம் தெரிஞ்சிக்கணும். ஒவ்வொரு குழந்தையோட மனசும் ஒரு பெரிய உலகமா இருக்கு. அந்தக் குழந்தைகளோட உலகத்தைப் பத்தி நாம கவலப்படறதே இல்ல. நம்மளோட அனுபவத்த இதுதான்னு அவங்கள்ட்ட திணிக்கதான் பாக்குறோம். அவங்களுக்கான ஆசைகள், கனவுகள் நிறைய இருக்கு. அவஙக முகத்துலேருந்தே அத நாம பாக்கலாம். அதுக்கு கைடு பண்ணணும். திணிக்கக்கூடாது. இதனால எப்படி வளருணுமோ அப்படி வளராம வேறமாதிரி போயிடுது. ரொம்ப கஷ்டமா இருக்கு.

**தாங்களாகவே துணிந்து சுயேச்சையான வாழ்க்கைப் பயணம் உங்களுடையது. இதில் மனநிறைவுடையதாக உணர்கிறீர்களா?**

அப்கோர்ஸ், ஆமாம். தவறான நிலைப்பாடாக ஒருநாளும் நான் நினைத்ததில்லை. முப்பத்தஞ்சி வருசத்துக்கு மேல ஆவுது. நிறைய அடிபட்டிருக்கேன். குடும்பத்துனால, ஜாதியினால, வறுமையினால நிறைய பாத்துருக்கேன். ஆனா நாம தனியா இருக்கோம் அப்டின்னு நினைக்கல.

ஆனா என்ன நெனச்சிருக்கேன்னா ஏதாவது அரசு அலுவலகங்களுக்கு போனா கணவன் இல்லன்னா அப்பா இல்லன்னா தம்பின்னு எதாவது உறவு கேட்டுத் துளைக்கிறப்போ எனக்கு கோவம் வரும். எதுக்கு ஒரு ஆண் துணை இருந்தாத்தான் அனுமதின்னு அரசு அதிகாரிகள் பண்றது, அலட்சியமா பாக்குறது இதல்லாம் பாத்தா கோவம் வரும்.

எலக்ஷன் டூட்டி போடுவாங்க. எங்கங்கயோ தேடிக் கண்டுபிடிச்சி போகணும். வேல முடிஞ்சி . நடுராத்திரியில மத்தவங்களல்லாம் யாராவது வந்து கூட்டிட்டு போவாங்க. நான் தனியா நிப்பேன். மனுஷியிலகூட இதப்பத்தி எழுதியிருக்கேன்.

தனியா இருக்கறத பத்தி கவலப்பட்டதில்ல. ஆனா சில நேரங்கள்ல பேருந்துல ஜன்னலோரம் உக்காந்திருந்தா நீங்க தனியாத்தானே இருக்கீங்க அங்க போங்கன்னு சொல்ற நேரத்துல கோபப்பட்டு சண்டை போட்டிருக்கேன். மத்தபடி வேறெதுவும் நெனச்சதுல்ல. ஹேப்பிதான்.

**தவிர்க்கவே முடியாத சூழ்நிலையில் தனித்திருக்கவேண்டிய முடிவை எடுக்கும் பெண்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது...**

அப்படி நிறைய பேர் என்னைப் பார்த்து முடிவெடுத்திருக்கிறார்கள். அவங்க அப்பா அம்மா வந்து உன்னையப் பாத்து கல்யாணம் வேண்டாங்கிறான்னு சொல்லுவாங்க.. எங்களுக்கு புடிச்சவன்னு இல்ல, உனக்குப் புடிச்சங்கள கல்யாணம் பண்ணிக்கோன்னு சொல்லுவாங்க.

அப்ப உனக்கு அந்த பையன புடிச்சிருந்தா பண்ணு, உங்க அப்பா அம்மாவுக்கு பிடிச்சவனா இருந்தா பண்ணாதன்னு சொல்லுவேன். அதேபோல சிஸ்டரா போறேன்னு சொன்னா போகாதன்னுதான் சொல்லுவேன்.

உனக்கு அந்த பையன புடிச்சிருக்கு, அவனுக்கு உன்னய புடிச்சிருக்குன்னா தாராளமா கல்யாணம் பண்ணுன்னுதான் சொல்லுவேன். என்னய பாத்துட்டுல்லாம் இருக்காத. இது ரொம்ப கஷ்டமான வாழ்க்கை. நான் வேலை செஞ்சேன். நானே சம்பாதிச்சேன். என்னய பாத்து நீங்க மாத்திக்கக்கூடாது. அது கஷ்டம்,

சிஸ்டரா வந்தவங்க கேட்டாங்க. நாங்க விட்டுட்டு வெளிய வர்றோம்ன்னு. வெளிய வர்றதுன்னா ஒரு வேலையோட வெளிய வா. சாப்பாட்டுக்கு வழி வேணும் அப்டிதான் சொல்லி அனுப்புனேன்.

இதுல இருக்குற சாதக பாதகங்களை சொல்லிவிடுவேன்,.. தானாக நிற்கக்கூடிய வசதி வாய்ப்புகள் வந்தால் பரவாயில்லை. யாரையும் சாராமல் இருக்கக்கூடிய வழியை உண்டாக்கிக்கொள்ளவேண்டும். உறவினர்கள் நண்பர்கள் ஒத்துழைப்பு வேண்டும்.

ஆனால் நிறைய பேர் அப்படி தனியாக இருக்கிறார்கள். கிராமப்புறத்தில் ஒரு மாதிரியாக இருக்கிறது. நகர்ப்புறத்தில் ஒரு மாதிரியாக இருக்கிறது. சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு வாழமுடியும். இப்பல்லாம் வாழ்க்கை ரொம்ப ஈசிங்க.

இருக்க இடம், சாப்பாடு, இயற்கையோட இயைந்த வாழ்க்கை. மலைகள், வானம், பறவைகள் இதோட உறவுகள் வச்சிகிட்டம்ன்னா ரொம்ப எளிமையா வாழ்க்கைய கடந்து போகலாம்.

என் அனுபவத்துல வாழ்க்கை அழகானது, எளிமையானது. நல்லா வாழலாம். கெடுத்துக்கறது நாமதான்.

●

*முன்னட்டைப் படம்*

நன்றி: ‘தமிழ் இலக்கியத்தின் திசை வழி’ ஆவணப்படம்

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்

**வழங்கும் மகத்தான படைப்பு தற்போது விற்பனையில்...**

# சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம்

22 தொகுதிகள்
7500 பக்கங்கள்
விலை
**ரூ.9000/-**

1/8 டெம்மி அளவு,
தரமான தாள்,
அழகிய
வடிவமைப்புடன்

- ஒரு நூற்றாண்டு வாசிப்புப் பின்புலத்தில் -
- பாடல் - பாடவேறுபாடு - உரைவேறுபாட்டு விளக்கங்கள் - பாடல் கருத்து - அருஞ்சொற்பொருள் - விரிவான ஆய்வு முன்னுரை எனும் அமைப்பில் -
- எண்மரின் பத்தாண்டு காலக் கடும் உழைப்பில் -
- 22 தொகுதிகள் 7500 பக்கங்களில் -
- பலமுறை முன் மதிப்பீடு செய்யப்பட்டு -
- உயர்ந்த கட்டமைப்பில் -
- தமிழக வரலாற்றில் முதல்முறையாக -




**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.

கட்டுரை

# நாட்டார் வழக்காற்றியல் அறிவோம்



## பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன் அவர்களுடனான ஓர் உரையாடல்

முனைவர் மு. ஏழுமலை

பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன் அவர்கள் தமிழ்ச் சமூக வரலாற்றுப் புரிதல்சார் எழுத்துகளைப் பதிவு செய்த ஆய்வாளர்களில் குறிப்பிடத்தக்கவர். குறிப்பாக தமிழ்ச் சமூக நாட்டார் வழக்காறுகளைக் கொண்டு தமிழ்ச் சமூக வரலாறுகளைக் கட்டமைத்ததில் மிகவும் குறிப்பிடத்தக்கவர் ஆவார். பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியம் அவர்களின் எழுத்துகளை நூல்வழியாக மட்டுமே முழுமையாக அனுபவித்த நிலையைக் கடந்து நேரில் சென்று சில வினாக்களை முன்வைத்து அவருடைய ஆய்வுகளையும் ஆய்வு முறையியல் தேர்ந்தெடுப்பின் நுட்பங்களையும் அறிய வேண்டும் என்பது என் நீண்டநாள் விருப்பமாக இருந்தது. 20.05.2024 அன்று நான் மட்டும் சென்று சென்னையில் அவரது மகன் வீட்டில் அவரைச் சந்தித்தது. 24.05,2024 அன்று என் பேராசிரியர் முனைவர் இரா. சீனிவாசன் அவர்களோடு சென்று சந்தித்தது. இந்தச் சந்திப்புகளின் சூழல்களில் கிடைக்கப்பெற்ற புரிதல்களையும், அவருடைய எழுத்துகளால் பெற்ற புரிதல்களையும் இணைந்த பதிவாக இப்பதிவு அமைகிறது.



ஆ.சிவம் அவர்கள் சென்ற ஏப்ரல் தொடக்கத்தில் தன்னுடைய எண்பத்தியோராம் அகவையை நிறைவு செய்து எண்பத்தி இரண்டாம் அகவையைத் தொடங்கியிருக்கும் நிலையில் மிக மகிழ்ச்சியான உணர்வோடு அவரின் வீட்டிற்குச் சென்றேன்.

**பேராசிரியரின் வாசிப்புப் பழக்கம்**

பேராசிரியர் ஆ. சிவம் அவர்களுடனான வழக்கமான உரையாடலின் முடிவில் வினா எழுப்பிக் கொண்டு உரையாடும் நிலையாகத் தொடர்ந்தது. இந்நிலையில் பேராசிரியரின் வாசிப்பு சூழல் குறித்த தொடக்க நிலையைக் கேட்டபோது மிக அரிதான தகவல்களைக் கூறத் தொடங்கினார்.

அவருடைய குழந்தைப் பருவம் என்பது மற்ற குழந்தைகளின் பருவ காலங்களைப் போல் ஓடியாடி விளையாடும் குழந்தைகளின் பழக்கத்திலிருந்து வேறுபட்டதாக இருந்திருக்கிறது. குழந்தைப் பருவத்தில் இதயம் சார்ந்த நோய் ஏற்பட்டதால் வேகமாக நடக்கக்கூடாது, ஓடக்கூடாது என்று மருத்துவர்கள் கூறியிருக்கிறார்கள். அதனால் பள்ளிப் பருவத்தின் ஓய்வுக்காலம் என்பது ஆனந்தவிகடன், கல்கி உள்ளிட்ட இதழ்களை வாசிக்கக்கூடியதாகவும், தங்கள் வீட்டில் உள்ளவர்களுக்கும் சுற்றி வாழ்பவர்களுக்கும் இதழ்களை வாசித்துக்காட்டும் சூழலும் வாசிப்புப் பழக்கம் தொடர்ச்சியாக நடைபெறுவதற்குக் காரணமாக அமைந்துள்ளது. அடுத்தகட்ட நிலையில் சிறுகதை, நாவல் வாசிக்கும் நிலையாகவும் உருவாகியிருக்கிறது.

அவரின் பள்ளிக் காலத்தில் தான் பயின்ற உயர்நிலைப்பள்ளியில் தொடர்ச்சியாக வாசிக்கும் பழக்கம் உருவான நிலையை மிகுந்த சுவையான அனுபவமாக பகிர்ந்துகொண்டார். பள்ளி நூலகராக இருந்த தி.க.சரவணமுத்து என்பவரின் பங்களிப்பில் இவரின் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்கச் செய்திருக்கிறது. மாணவப் பருவத்தில் வாசிப்பில் காட்டிய ஆர்வமும், நூலக சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட ஒழுக்கமுடைய மாணவனாக இருந்ததால் நூலகருக்குப் பிடித்த மாணவர்களுள் ஒருவராக விளங்கியிருக்கிறார். மேலும், இவரோடு சில மாணவர்களும் வாசிப்புப் பழக்கத்தில் இணைந்திருக்கிறார்கள். இந்நிலையில் நூலகர் இந்தக் குழுவை நூலகத்தில் உள்ள இதழ்களைப் பாதுகாப்பதற்கான பாதுகாவலர்களாகப் பயன்படுத்தியிருக்கிறார். அதாவது இதழ்களில் உள்ள படங்களை மற்றவர்கள் கிழிக்காமல் பார்த்துக்கொள்வதுடன் பென்சில், பேனாவால் கிறுக்காமல் பார்த்துக்கொள்வது இக்குழுவின் பணியாக இருந்தது. இக்குழு மாணவர்களுக்கான நாள் அட்டவணையிட்டு மாணவர்களின் இந்தப்பணிக்கு ஊக்கமளிக்கும் வகையில் நூலகத்திலிருந்து நூல்களை எடுத்துச் செல்ல சலுகை காட்டியிருக்கிறார். இந்தப் பயனைப் பெற்றவர்களில் இவரும் ஒருவர். இவ்வாறான வாசிப்புப் பழக்கம் என்பது பல்வேறு நூல்களைப் பாடப் புத்தகங்களைக் கடந்து வாசிப்பதற்கான வழக்கத்தை உருவாக்கியிருக்கிறது.

நூல் நிலையங்களின் நூல்களில் மட்டுமல்லாமல் இவரின் தந்தையின் வாசிப்பும் இவரின் வாசிப்பை விசாலப்படுத்தியிருக்கிறது. பள்ளிப்படிப்பைக் கடந்த இவரின் தந்தை, சாமிநாத சர்மா, ஏ.கே. செட்டியார், டால்ஸ்டாய் எனப் பலருடைய நூல்களை வாசித்துள்ளதின் தாக்கம் இவர் நூல் வாசிப்பில் உச்சம் தொடுவதற்குக் காரணம் என்று குறிப்பிட்டார்.

**ஆளுமைகளுடனான தொடர்பு உருவாதல்**

இவர் மேற்கொண்ட தொடர்ச்சியான வாசிப்பைப் போலவே பல ஆளுமைகளுடனான நட்பு பதினேழு வயதிலேயே உருவானது. தன்னுடைய இளமைக் காலத்தில் அறிமுகமான ஆளுமைகள் குறித்து பகிர்ந்துகொள்ளும்போது, சிந்துபூந்துறையிலிருந்து பள்ளிக்குச் செல்லும் வழியில் இருந்த நெல்லை புத்தக நிலையத்தின் உரிமையாளரான அண்ணாச்சி சண்முகம் பிள்ளை அவர்களுடனான பழக்கம், அந்தப் புத்தகக் கடையில் சம்பளம் இல்லாத ஒரு பணியாளாக இவரை மாற்றியிருக்கிறது. அந்தப் புத்தகக் கடையில்தான் சாமிநாதசர்மா இயற்றிய கார்ல் மார்க்ஸ் வரலாறை வாங்கிப் படித்திருக்கிறார். அந்தப் புத்தகக் கடைக்கு வரும் கம்யூனிசத் தோழர்களின் உரையாடல்களைக் கேட்டிருக்கிறார். சண்முகம் பிள்ளை அவர்களுடனான தொடர்பால் வாசிப்பும் பல ஆளுமைகளுடான தொடர்பும் மார்க்சியம் சார்ந்த அறிவும் தோற்றம் பெற்றிருக்கின்றது. மேலும் ஏ.ஜி. பெருமாள் என்பவரின் தொடர்பும் இவரின் ஆளுமை வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. இவர்தான் ஜோசப் நீதம், ஜே.டி. பெர்னால், ராகுல் சாங்கிருத்யாயன், கோசாம்பி ஆகியோரைப் பற்றியும் அவர்களுடைய எழுத்துகளைக் குறித்தும் உரையாடல் வடிவில் உணர்த்தியிருக்கிறார்.

மார்க்சியம் சார்ந்த நூல்களின் வாசிப்பு, மார்க்சிய அறிஞர்கள் சார்ந்து உருவான நட்பு ஆகியவற்றால் நெல்லை கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்திற்கு செல்லக்கூடிய பழக்கம் இவருக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கட்சி அலுவலகத்தின் மூலமாக அறிமுகமானவர்தான் தோழர் நல்லகண்ணு.

இவரின் அறிமுகத்தைப் பற்றிக் கூறும்போது, "நெல்லை கட்சி அலுவலகத்தில்தான் தோழர் நல்லகண்ணுவைச் சந்தித்தேன். முழுக்க கிராமத்து மனிதராகவே அவர் எப்போதும் எனக்குக் காட்சியளிப்பார். அவர் கட்சி அலுவலகத்தில் உட்கார்ந்துகொண்டு ஆங்கிலப் பேப்பர் படிப்பது பொருத்தமில்லாமல் இருப்பதாக எனக்கு அந்தக் காலத்தில் படும். புத்தகங்களுக்கு வெளியில் கிராமப்புறங்கள், கோயில்கள், கிராமியக் கதைகள், பாடல்கள், சாதிய முரண்பாடுகள் ஆகியவற்றையெல்லாம் பற்றிய உணர்வை எனக்கு

ஏற்படுத்தியவர் இவர்தான். எந்தப் புத்தகத்திலும் கிடைக்காத அபூர்வமான வரலாற்றுத் தகவல்களைக் கிராமத்து வாழ்க்கையிலிருந்து அவர் எடுத்துச் சொல்லிவிடுவார். அவரைச் சந்தித்ததும் அவரோடு பழகியதும் என் பார்வையில் திருப்புமுனைகளை ஏற்படுத்தின. தலித்துகள், சாதியக் கொடுமைகளின் உக்கிரம், நிலச்சுவான்தார்களின் அக்கிரமங்கள் பற்றிய உணர்வை என்னில் ஏற்படுத்தியவரும் அவர்தான்.'' (தமிழ்ச் சூழல்களில் ஆய்வும் அரசியலும்,2014, பக்.22-23) என்று குறிப்பிடுகிறார்.

இதன்மூலம் ஆய்வுக் களங்களின் திறப்புகள் நல்லகண்ணு அவர்களின் தொடர்பின் மூலமாக பெற்றிருக்கிறார். இதைப்போன்று பேராசிரியர் அருணாச்சல கவுண்டர், தொ.மு.சி.ரகுநாதன், தோழர்கள் ப.மாணிக்கம், பாலதண்டாயுதம், ஜீவா முதலானவர்களின தொடர்பும் மிக குறிப்பிடத்தக்க நிகழ்வுகளாகும். ப. மாணிக்கம் அவர்கள்தான் கட்சிப் பணிகளில் ஆர்வம் கொண்டிருந்த இவரை கட்சிப் பணிக்கு பலர் இருக்கிறார்கள், எழுத்துப் பணிக்குத்தான் ஆள் வேண்டும். அதை நீ செய் என்று மடைமாற்றம் செய்து ஆய்வு நிலையிலான எழுத்துப்பணியில் செல்வதற்கு காரணமாகியிருக்கிறார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில் பேராசிரியர்கள் உளுந்தூர்பேட்டை சண்முகம், உலக ஊழியர், அ.நடேச முதலியார், மெய்யப்பன், மு.அண்ணாமலை, ஆறு அழகப்பன், சோம. இளவரசு எனப் பல பேராசிரியர்களுடன் வீடுவரை சென்று உரையாடும் அளவிலான நெருக்கமான உறவு இருந்திருக்கிறது. இவற்றோடு, ஒருசாலை மாணாக்கராக இருந்த பேராசிரியர் நாச்சிமுத்து, முனைவர் மே.து.ராசுகுமார் உள்ளிட்ட பல்வேறு ஆளுமைகளின் தொடர்பும் இவரைப் படிப்படியாக ஆய்வுப் பணி நோக்கி நகர்த்தியிருக்கிறது என்பதையும் உணர்ந்துகொள்ள முடிந்தது.

**பேராசிரியர் நா.வானமாமலையுடனான அறிமுகம்**

இவரது ஆய்வுக் களங்கள் விரிவடைந்தமைக்கு ஆய்வு முறையியல் தேர்வுக்கும் பேராசிரியர் நா. வானமாமலை அவர்களுடனான சந்திப்பும், அவர் உருவாக்கிய நெல்லை ஆய்வுக்குழுவும் நடத்திய ஆராய்ச்சி இதழும், இவற்றோடு இணைந்திருந்த ஆய்வுவட்டத் தோழர்களும் மிகக் குறிப்பிடத்தக்கக் காரணம் என்பதை நூல்களின் மூலமாகப் படித்து அறிந்திருந்தாலும் ஆ.சிவம் அவர்களுடனான உரையாடலில் ஒரு மகிழ்ச்சியான உணர்வோடு அவர் கூறினார்.

நா.வானமாமலையுடனான சந்திப்பு குறித்தும் அவர் பதிவு செய்தார். இச்சந்திப்பு குறித்து பேராசிரியர் முத்துமோகன் மேற்கண்ட நேர்காணல் நூலில் குறிப்பிடும்போது, ''தோழர் ப. மாணிக்கம்தான் 'வானமாமலையிடம் போங்கள்' என்று அனுப்பிவைத்தார். நேரடி அரசியலில் நான் ஈடுபடுவதை அவர் விரும்பாததே இதற்குக் காரணம் என்பதை வெகுநாட்கள் கழித்து அறிந்துகொண்டேன். பாளையங்கோட்டை முருகன் குறிச்சியில் டயோசிசன் அச்சகத்திற்கு அருகில் உள்ள சத்திரம் தெருவில், பாளையங்கோட்டை வாய்க்காலுக்கு அருகில் உள்ள வீட்டில் பேராசிரியர் நா.வா. அப்போது குடியிருந்தார். 'தோழர் மாணிக்கம் அனுப்பினார், வந்தேன்' என்று அறிமுகப்படுத்திக் கொண்டேன். அப்போதுதான் என்னைப்பற்றி தோழர் ப. மாணிக்கம் அவரிடம் கூறியுள்ளார் என்பது தெரிய வந்தது. முதல் அறிமுகத்திலேயே 'ஏன் உடம்பை ஒடுக்கிக் கொண்டு நிற்கிறாய்? உட்காரு' என்றார். கொஞ்சநேரம் அவரோடு பேசிவிட்டுப் புறப்படும்போது இரண்டு புத்தகங்கள் படிக்கத் தந்தார். பிறகு அடிக்கடி அவரைத் தேடிச் செல்வேன். சில வேளைகளில் அவருக்கு மாலை நேர நடைபயணத் தோழனாகிவிடுவேன்." (தமிழ்ச் சூழல்களில் ஆய்வும் அரசியலும் - பேராசிரியர் ந. முத்துமோகன்) என்று கூறுவதிலிருந்தும் பேராசிரியர் நா.வா அவர்களுடன் ஆ.சிவம் அவர்களுக்கு ஏற்பட்ட சந்திப்பை விளங்கிக்கொள்ளலாம். இந்தச் சந்திப்பு இவருக்குக் கிடைத்த தமிழியல் ஆய்வுக்கான கைவிளக்கு என்றே கருதலாம்.

**ஆராய்ச்சி இதழும் ஆய்வாளராக உருவான சூழலும்**

ஆ. சிவம் அவர்கள் தொடர்ச்சியான வாசிப்புப் பழக்கம் கொண்டதோடு தான் ஒரு ஆய்வாளராக உருவான சூழலை மிக சுவையாக எடுத்துரைத்தார். பேராசிரியர் நா.வா.வின் கட்டாயப்படுத்துதலால்தான் எழுதத் தொடங்கினேன். வாசிப்பில் ஆர்வமுடையவன் என்பதே என்னுடைய முதல் அடையாளமாகத் தொடக்கத்தில் இருந்தது. சில தவிர்க்க முடியாத நிர்பந்தங்களால் உருவானதாகவே என் எழுத்துகள் நிகழ்ந்திருக்கிறது.

இவ்வாறு ஆ.சிவம் அவர்கள் தான் ஆய்வாளராக உருவான அனுபவத்தை, தோழர் எ. சண்முகானந்தம் மேற்கொண்ட நேர்காணலில், ''பேராசிரியர் நா. வானமாமலை என்னை எழுதச் சொல்லிக் கட்டாயப்படுத்திக் கொண்டே இருப்பார். அவர் 'ஆராய்ச்சி' இதழைத் தொடங்கியபோது, அதன் புற வேலைகளில் பங்கெடுத்துக்கொண்ட நான்கைந்து பேரில் நானும் ஒருவன். 'இதழுக்கு நீயும் ஒரு கட்டுரை கொடு. அப்போதுதான் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கும்' என்றார். என்னுடைய கட்டுரை இடம்பெற்றுத்தான் 'ஆராய்ச்சி' இதழ் சிறப்படைய வேண்டும் என்பதில்லை. மற்றவர்கள் மொழியில் சொல்லப்போனால் 'எனது கட்டுரை அதில் ஒரு

திருஷ்டிப் பொட்டுதான்' ஆனாலும், 'நாட்டுப்புறப் பாடல்களும் திருமண உறவுகளும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதிக் கொடுத்தேன். அது, திருமண உறவுகள் தொடர்பாக, நாட்டார் பாடல்கள் என்ன சொல்கின்றன என்பதைப் பற்றியது. அந்தக் கட்டுரையை அச்சில் பார்த்தபோது, அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது. அப்போது நா.வா சொன்னார், 'ரொம்பக் கறரா இருந்திருந்தா இந்தக் கட்டுரையை நான் போட்டுருக்கக் கூடாது. ஆனா, நீ தொடர்ந்து எழுதணும்னு நான் விரும்புகிறேன். அதனாலதான் அனுமதிச்சேன். அடுத்தமுறை செறிவா ஒரு கட்டுரை எழுது' என்று சொன்னார். அதன் பிறகு, 'பரதவர்களின் வாசல்படி மறியல்' என்ற கட்டுரையை நிறைய கள ஆய்வுகள் செய்து எழுதினேன். அது அவருக்கு நிறைவாக இருந்தது. 'நல்ல கட்டுரையா வந்திருக்கு. இதை அப்படியே போட்டுக்கலாம்' என்று சொன்னார். இதழிலும் கொண்டு வந்தார். அது வெளிவந்த பிறகு, எனக்கு நிறைய தொடர்புகள் ஏற்பட்டன. அப்போது தொலைபேசி வசதியில்லாத காலம் என்பதால், ஏராளமான கடிதங்கள் வந்தன. பலரும் நேர்ப்பேச்சில் அந்தக் கட்டுரை குறித்து என்னிடம் விவாதித்தார்கள். அது எனக்கு உற்சாகமளித்தது. அங்கிருந்து இந்த ஆய்வுப் பயணம் தொடங்கியது." *(பண்பாடு முதல் காட்டுயிர் வரை - ஏ.சண்முகானந்தம்)* என்ற எழுத்தோடு இணைத்தும் உணர்ந்துகொள்ளலாம்.

**நாட்டார் வழக்காற்றியலின் ஆய்வின் தொடக்க நிலை**

தமிழகத்தில் நாட்டார் வழக்காற்றியல் சார்ந்த ஆய்வுகளை நோக்கும்போது, 1960க்கு முன்பு 1960க்கு பின்பு என்ற இரு நிலைகளில் வைத்து புரிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாதது. ஏனெனில், 1960க்கு முன்பாக நாட்டார் வழக்காற்றியல் சார்ந்த ஆய்வியலை நோக்கும்போது, நாட்டார் வழக்காறுகளை சேகரிப்பதாகவும், சேகரித்த நாட்டுப்புறப்பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், விடுகதைகள், பழமொழிகள் பதிப்பித்து வெளியிடுவதாகவும் உள்ளது. நாட்டார் வழக்காறுகள் சார்ந்த ஆய்வாக முன்னெடுக்கப்பட்டதா எனில் பெரும்பான்மையாக இல்லை என்ற விடையே கிடைக்கும்.

ஏ.சண்முகானந்தம் தொகுத்த பண்பாடு முதல் காட்டுயிர் வரை என்ற நூலில், "ஐம்பதுகளின் இறுதிவரை 'நாட்டாரியல், நாட்டுப்புறவியல்' என்கிற சொல்லே இங்கு அறிமுகமாகவில்லை. நாட்டுப்புறப் பாடல்கள் மட்டுமே அறிமுகமாகியிருந்தன. மேலும், அன்றைக்கு இந்தப் பாடல்களுக்குக் குறிப்பிடும்படியான மதிப்பும் இருக்கவில்லை. மதிப்பு குறைவான ஓர் இலக்கிய வகைமையாகவே நாட்டார் பாடல்கள் பார்க்கப்பட்டன. கி.வா.ஜகந்நாதன் அந்தக் காலகட்டத்தில் சில நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்து, 'மச்சு வீடு', 'கஞ்சியிலும் இன்பம்', 'நாடோடிப் பாடல்கள்' என்ற மூன்று தலைப்புகளில் நூலாகக் கொண்டு வந்தார். பெரியசாமித் தூரன் பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்தவர், கொங்குப் பகுதியில் நிலவிய பாடல்களைத் தன்னுடைய மாணவர்களைக் கொண்டு சேகரித்து, 'காற்றிலே மிதந்த கவிதைகள்' என்ற நூலாகக் கொண்டு வந்தார். தி.நா. சுப்பிரமணியன் தமிழ்நாட்டின் முன்னோடி கல்வெட்டு ஆய்வாளர். தென்னிந்திய சாசனங்களையெல்லாம் பதிப்பித்தவர். 'காட்டு மல்லிகை' என்ற தலைப்பில் நூலாகக் கொண்டுவந்தார்...

பெர்சி மாக்வின் என்ற பிரிட்டிஷ் அதிகாரி. இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பே இந்தியாவை விட்டு வெளியேறியவர். ஒரு பாடலுக்கு ஓரணா, ரெண்டணா எனக் கொடுத்து மக்களிடம் சேகரித்த நாட்டுப்புறப் பாடல்களையெல்லாம் இந்தியாவை விட்டுப் போகும்போது, ஒரு குறிப்பேட்டில் எழுதி, அதை சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டார். பல்கலைக்கழகத்திற்கு அதை என்ன செய்வதென்று தெரியவில்லை. பலகாலம் அதைத் தூங்க வைத்துவிட்டனர். ஒன்று மட்டும் அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. இதில் இருப்பதெல்லாம் பழமையான விஷயம். பழமையான விஷயங்கள் இருக்க வேண்டிய இடம், சரஸ்வதி மஹால். ஆக, அங்கு அனுப்பிவிட்டார்கள். சரஸ்வதி மஹால்காரர்களுக்கு, இது ஓலைச்சுவடி இல்லை, இலக்கியமுமில்லை, இலக்கணமுமில்லை. ஆகவே என்ன செய்வது எனத் தெரியவில்லை. கி.வா. ஜகந்நாதனுக்கு அனுப்பி, இதைப் பதிப்பியுங்கள் எனக் கேட்டுக்கொண்டார்கள். அவர் அதை 'மலையருவி' என்ற பெயரிட்டுப் பதிப்பித்தார்.

மு.அருணாசலம் மரபுவழித் தமிழறிஞர். 'காற்றில் மிதந்தவை' என்ற தலைப்பில் சில பாடல்களைப் பதிப்பித்தார். அன்னகாமு என்பவர் 'ஏட்டில் எழுதாக் கவிதைகள்' என்ற பெயரில் ஒரு நூலைப் பதிப்பித்தார். இவை அனைத்தும் கவனித்தால்... குறிப்பாக நூல் பெயரைக் கவனித்தால், இவை அனைத்தும் ரசனை அடிப்படையில் பார்க்கப்பட்ட, பதிப்பிக்கப்பட்ட நூல்கள் என அறிந்துகொள்ளலாம். இன்றைக்கு நாட்டுப்புறவியல் ஓர் அறிவியல் துறையாக வளர்ந்துவிட்டது. இங்கிருந்து அவற்றைப் பார்க்கும்போது, அவற்றில் ஆய்வியல் குறைபாடுகள் உள்ளதாகத் தோன்றும். ஆனால், அன்றைய காலகட்டத்தில் இவ்வளவு பாடல்களைத் தொகுத்து, இந்தத் துறைக்கு வளம் சேர்த்த அவர்களது பணி, மதித்துப் போற்றத்தக்கது. அன்றைக்கு அவர்கள் அவ்வளவு பாடல்களைச் சேகரிக்காவிட்டால் நாட்டுப்புறவியல் அந்தப் பாடல்களையெல்லாம்

இழந்திருக்கும்'' என்று குறிப்பிடுவதிலிருந்து தொடக்ககால நாட்டார் வழக்காற்றியல் சார்ந்த சேகரிப்பும் அதன் முக்கிதயத்துவத்தையும் புரிந்துகொள்ளலாம்.

**இரண்டு அறிஞர்களும் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வின் முன்னேற்றமும்**

தமிழக நாட்டார் வழக்காற்றியலைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால் இரண்டு அறிஞர்களின் ஆய்வு முன்னெடுப்புகளைப் புரிந்துகொள்ள வேண்டும். ஒன்று, பேரா. நா. வானமாமலை. இரண்டு, பேராசிரியர் முத்துசண்முகம் பிள்ளை. இந்த இரண்டு அறிஞர்களின் நாட்டார் வழக்காற்றியல் சார்ந்த முன்னெடுப்பு என்பது, முன்பு குறிப்பிட்டதைப்போல, 1960களுக்கு முந்தைய, பிந்தைய ஆய்வு என்ற வரையறையை தீர்மானிக்கக்கூடியதாக அமையும். இவ்விரு அறிஞர்களின் ஆய்வு முறையியல் தமிழ்ச் சூழலில் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வியல் சார்ந்து ஏற்படுத்திய தாக்கம் குறித்து பேராசிரியர் மிக விரிவாகவே உரையாடினார்.

தமிழகத்தில் நடைபெற்ற நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகளைப் பற்றி ஆ.சிவம் அவர்கள் குறிப்பிடும்போது, தமிழகத்தில் நடைபெற்ற ஆய்வுகளைப் பொறுத்தவரையில் தொடக்கத்தில் வழக்காறுகளை சேகரித்தல், சேகரித்த வழக்காறுகளைப் பதிப்பித்தல், இதன் தொடர்ச்சியாக நாட்டார் வழிபாடு, சடங்குகள், கலைகள் உள்ளிட்டவற்றை விவரணையாக எடுத்துரைத்தல் என்ற நிலைகளில்தான் இருந்தது. பிறகுதான் நாட்டார் வழக்காற்றுகளை சமூகத்துடன் இணைத்து சமூக வரலாறுகளாகவும், ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பண்பாடாகவும், கோட்பாடுகளைக் கொண்டு பொருத்தி ஆராயும் ஆய்வுமுறையாகவும் வளர்ச்சி பெற்றது. சுருக்கமாகக் கூறினால், 'தமிழில் வருணனைமுறை, மார்க்சியமல்லாத கோட்பாட்டு ஆய்வுகள், மார்க்சியக் கோட்பாட்டு ஆய்வுகள் என்ற மூன்று வகையான ஆய்வுகள் இன்றும் நிலவுகின்றன. ஆயின் மார்க்சியம் சார்ந்த ஆய்வுகளே அளவிலும் செல்வாக்கிலும் மிக அதிகமாக உள்ளன' என்று தம் உரையில் பதிவு செய்தார்.

நாட்டார் வழக்காற்றியல் சார்ந்த மேற்காணும் ஆய்வுமுறையிலிருந்து வேறுபடுத்திய ஆய்வுமுறையில்தான் பேராசிரியர் நா. வானமாமலை, பேராசிரியர் முத்துசண்முகம் பிள்ளை அவர்களின் ஆய்வுமுறையியல் அறிமுகம் உள்ளது. பேராசிரியர் நா. வானமாமலை அவர்கள் 1960, 1964 ஆகிய ஆண்டுகளில் வெளியிட்ட தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள் (1960), தமிழர் நாட்டுப் பாடல்கள் (1964) ஆகிய இரண்டு நூல்களும் நாட்டார் வழக்காற்றியல் சார்ந்த ஆய்வில் புதிய ஆய்வியல் முறையை அறிமுகப்படுத்தியது. நாட்டார் வழக்காற்றியல் சார்ந்து வெறும் பதிவுகளாக பதிப்பிக்கப்பட்ட தொகுப்புகளிலிருந்து அது மிகவும் மாறுபட்டிருந்தது. அதில் யார் யார் அந்தப் பாடல்களைப் பாடினர், யார் யார் அவற்றைச் சேகரித்தனர், எந்தப் பகுதியில் அந்தப் பாடல்கள் நிலவின என்ற குறிப்புகளை உள்ளடக்கியதாக நூல் இருந்தது. மேலும், பாடல்களின் உள்ளடக்கத்தைக் கொண்டு அப்பாடல்களின் பதிவுகளுக்கு கீழே சில வரிகளில் அந்தப் பாடலுக்கும் அப்பாடல் சேகரிக்கப்பட்ட சமூகத்திற்குமான தொடர்பைப் பற்றி விளக்கி எழுதியிருந்தார். இந்த முறையியல் என்பது, நாட்டார் வழக்காறுகள் ரசனைக்கும் பொழுதுபோக்கிற்குமானது அல்ல, அதில் ஆய்வதற்குச் சமுகம் தொடர்பான செய்திகளும் இருக்கின்றன என்று உணர்த்தியது.

பேராசிரியர் நா.வா. அவர்களின் இரண்டு நூல்களும் நாட்டார் வழக்காறுகள் குறித்த பார்வையையும் ஆய்வையும் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் சென்றது என்றால் மிகையல்ல. மேலும், கட்டபொம்மன் குறித்த கதைப்பாடலைப் பதிப்பித்தபோது அந்த நூலுக்கு அவர் எழுதிய முன்னுரையும் முக்கியமானது. கட்டபொம்மன் கொள்ளைக்காரனா? வீரனா? என்ற விவாதத்திலான முன்னுரை என்பது நாட்டார் வழக்காறுகளைக் கொண்டு ஒரு வரலாற்றைக் கட்டமைக்க முடியும் என்பதை மெய்ப்பித்தது. பேராசிரியர் நா.வா நோக்கிய மார்க்சிய அடிப்படையிலான பார்வையான எல்லாவற்றிலும் இருக்கும் அரசியலைப் புரிந்துகொள்வது என்ற நோக்கு என்னைப் போன்ற ஆய்வாளர்கள் வர்க்க அரசியலையும், அடித்தள மக்கள் வரலாற்றையும் புரிந்துகொண்ட ஆய்வுகளை உருவாக்குவதற்கு மிக முக்கியமான காரணமாக அமைந்தது என்று கூறி முடித்த நிலை என்பது நாட்டார் வழக்காறுகள் ஒரு ஆய்வுப் பொருளாக மாறுதல், சமூக வரலாறுகளாக நா. வா. பார்த்த பார்வை, தான் உருவாக்கிய மாணவர்களுக்கு சமூக வரலாற்று ஆய்வுகளுக்கு நாட்டார் வழக்காறுகள் மிக முக்கியமான முதன்மையான துணைக்கருவி என்பதைக் கற்பித்த பாடத்தைப் புரிந்துகொள்வதற்கான உரையாகக் காண முடிகிறது.

பேராசிரியர் நா.வா அவர்கள் கல்விப் புலத்திற்கு வெளியில் நாட்டார் வழக்காற்றியலை சமூகவியல் ஆய்வாக அடுத்தக்கட்டத்திற்கு எடுத்துச் சென்றதைப் போன்று, கல்விப் புலத்தில் நாட்டார் வழக்காற்றியலை கொண்டு சென்ற பெருமை மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பேராசிரியர் முத்துசண்முகம்பிள்ளை அவர்களுக்கு உண்டு. அவர் வெளிநாட்டில் தான் பெற்ற ஆய்வு முறையியலை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தன்னிடம் பயின்ற ஆய்வு

மாணவர்களிடம் எடுத்துரைத்து, நாட்டார் வழக்காற்றியல் சார்ந்த ஆய்வுப் பொருண்மைகளை முனைவர் பட்ட ஆய்வுக்கு வழிகாட்டினார். இச்செயல்பாடு மிக முக்கியமானதாகும்.

இச்செயலால் அறிமுகமானவர்களே பேராசிரியர் மு. இராமசாமி, பேராசிரியர் சரஸ்வதி வேணுகோபால் ஆகியோர். பேராசிரியர் மு. இராமசாமி அவர்கள் தோல்பாவை நிழல் கூத்து பற்றியும், பேராசிரியர் சரஸ்வதி வேணுகோபால் மதுரை மாவட்ட தாலாட்டு, ஒப்பாரிப் பாடல்களிலும் ஆய்வு மேற்கொண்டனர். பேராசிரியர் அதன் பிறகு தெருக்கூத்து குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். மேலும், பி.ஆர். சுப்பிரமணியம் அவர்களும் கேரளத்தில் அமைப்பியல் கோட்பாட்டைக் கொண்டு கதைப்பாடல் பொருண்மையில் ஆய்வு மேற்கொண்டார். பேராசிரியர் காவ்யா சு. சண்முகசுந்தரம் (1975இல் நாட்டுப்புறவியல் என்ற சொல்லை உருவாக்கியவர்) திருநெல்வேலி மாவட்டம், பேராசிரியர் ஆறு. இராமநாதன் தென்னாற்காடு மாவட்டம் சார்ந்த நாட்டுப்புறப்பாடல்களைக் கொண்டு ஆய்வு மேற்கொண்டார். இவ்வாறு பல ஆய்வாளர்களும் பல நாட்டார் வழக்காறுகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகளும் இன்றுவரை தொடர்ச்சியாக வந்துகொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் தே. லூர்து அவர்களின் பங்களிப்பும் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கதாகும். 1976இல் நாட்டார் வழக்காற்றியல் என்ற சொல்லை உருவாக்கியதோடு, அச்சொல் குறித்த விளக்கத்தையும் தெளிவுபடுத்தினார். இவர் மேற்கத்திய கோட்பாடுகளைத் தமிழில் மொழிபெயர்ப்பு செய்து கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகள் தமிழகத்தில் உருவாகக் காரணமாக இருந்தார் என்ற பேராசிரியரின் தொடர்ச்சியான உரை தமிழக நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு வரலாற்றை மிக நுட்பமாக அறியச் செய்கிறது.

**மார்க்சியத்தை முதன்மையாகக் கொண்ட ஆய்வு முறையியல்**

ஆ.சிவம் அவர்களின் உரையில் தொடர்ச்சியாக மார்க்சியம் சார்ந்த ஆய்வுகளின் தரம் குறித்தும், பேராசிரியர் நா.வா. உருவாக்கிய மார்க்சியம் சார்ந்த ஆய்வு மரபின் தனித்தன்மை குறித்தும் நூலிழையாக இழையோடி வருவதைக் காண முடிந்தது. மார்க்சிய அறிவின் பின்புலத்திலிருந்து ஆய்வு மேற்கொள்ளும் ஆ.சிவம் அவர்களின் எழுத்துகளுக்கும், மார்க்சிய பின்புலத்தை வெளிப்படுத்தாத அறிஞர்களின் எழுத்துகளுக்கும் உள்ள வேறுபாடு உணர்த்தும் நிலையில் சில பதிவுகள் உரையிலும் இடம்பெற்றது. அதனால், பேராசிரியரின் எழுத்துகளுக்கான ஆய்வு முறையியலின் சிறப்பம்சம் குறித்துக் கேட்டபோது, ஆற்றொழுக்காக தன்னுடைய எழுத்துக்களுக்காக தான் கொண்டுள்ள நுட்பங்களைக் கூறத் தொடங்கினார். அப்போது, தமிழ்நாட்டில் மார்க்சியம் அல்லாத ஆய்வுகளை, முதலாவது, கோட்பாடு ஒன்றைக் எடுத்துக்கொண்டு அதைப் பொருத்திப் பார்க்கும் வகையில் தரவுகளைச் சேகரித்து எழுதுவது. இரண்டாவதாக, தரவுகளைச் சேகரித்துவிட்டு பின்னர் கோட்பாடு ஒன்றை அதில் பொருத்திப் பார்ப்பது. மூன்றாவதாக, தரவுகளைச் சேகரித்து அவற்றை முறைப்படுத்தி விவரணை முறையில் எழுதுவது என்ற மூன்று நிலைககளில் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகளை நுட்பமாக வகைப்படுத்தினார். இவற்றில் மூன்றாம் நிலையிலான ஆய்வு முறையியலைத்தான் தான் பின்பற்றுவதாகவும் கூறுகிறார்.

அதாவது, ஒரு ஆய்வுக் களத்தை எடுத்துக்கொண்டு, நுட்பமான கள ஆய்வு மேற்கொண்டு, கள ஆய்வின் அடிப்படையில் மட்டுமல்லாமல் அந்தப் பொருண்மை குறித்து இலக்கியம், இலக்கணம், கல்வெட்டு மற்றும் பிற ஆவணப் பதிவுகளையும் எடுத்துக்காட்டி விவரணையோடு எழுதுவது என் எழுத்துகளின் சிறப்பம்சம் என்று கூறுவதும், நாட்டார் வழக்காறுகளை வெறும் ஆய்வுப் பொருளாக மட்டும் பார்க்காமல், இந்த வழக்காற்றிற்கு யார் உரிமையாளர்களாக இருக்கிறார்களோ அவர்களின் வாழ்க்கையையும் வழக்காற்றையும் மேம்படுத்த முனைவதாக இருந்திருக்க வேண்டும் என்று குறிப்பிடுவதும், “மாற்று வரலாற்றுக்கான தரவுகளாக வாய்மொழி வழக்காறுகளும் சடங்குகளும் அமைகின்றன. இவற்றை நாம் அப்படியே வரலாற்றில் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதில் ஐயமில்லை. மரபு வழி வரலாற்றுக்கான தரவுகளை எவ்வாறு ஏனைய தரவுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து ஒரு முடிவுக்கு வருகிறோமோ அதே போன்று இத்தரவுகளையும் பயன்படுத்தி உண்மையைக் கண்டறியலாம்.” (முன்னுரை, அடித்தள மக்கள் வரலாறு) என்று குறிப்பிடுவதும் பேராசிரியர் பதிவு செய்யும் எழுத்துகளின் தனித்தன்மையைப் புரிந்துகொள்ளச் செய்கிறது.

மேலும், நான் வரலாறு, சமூகவியல், நாட்டார் வழக்காற்றியல், பண்பாட்டியல் என எந்தப் பொருண்மை குறித்து ஆய்வு மேற்கொண்டாலும் முதன்மையான தரவுகளாக நாட்டார் வழக்காற்றியல் தரவுகளை எடுத்துக்கொள்கிறேன். அந்த நாட்டார் வழக்காற்றியலுக்கும் அந்த வழக்காற்றியலை வழங்கும் சமூகத்திற்கான உறவை நுட்பமாக பார்க்கத் தவறுவதில்லை. வழக்காற்றியலை விவரிக்கும் விவரணையாக மட்டும் அமையாமல் பயன்முறை நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாகக் கொண்டுவருகிறேன். இவை என்னுடைய எழுத்துகளின்

தனித்தன்மையாக கருதுகிறேன் என்று கூறுவதன் மூலம் தன்னுடைய ஆய்விற்கான தனித்த ஆய்வு முறையியலை பேராசிரியர் கைகொண்டிருப்பதை அறிய முடிகிறது.

இவற்றோடு, பேராசிரியர் முத்துமோகன் நேர்காணல் செய்து பதிவு செய்துள்ள தமிழ்ச் சூழலில் ஆய்வும் அரசியலும் என்ற நூலில் இடம்பெற்றுள்ள, "எல்லாப் பிரச்சனைக்குள்ளும் ஓர் அரசியல், குறிப்பாக வர்க்க அரசியல், மறைந்துள்ளது என்பதே நான் கற்றுக்கொண்ட மார்க்சியம் எனக்கு உணர்த்தியுள்ளது. அரசியல் என்பது வர்க்கம் சார்ந்தது என்றும் அது கற்றுக்கொடுத்துள்ளது. சமயம், பண்பாடு ஆகியவற்றிற்கு முழுமையாக இல்லாவிட்டாலும் ஓரளவுக்காவது இது பொருந்தும் என்பதை அது உணர்த்தியுள்ளது. பண்பாடு எனும்போது இந்தியச் சூழலில் சாதியையும் அது உள்ளடக்கியுள்ளது என்பதை நினைவில் கொண்டவன். பல்வேறு சமூகவியலாளர்கள் *Holistic Study* என்ற பெயரில் முழுமையான ஆய்வு அணுகுமுறை குறித்துப் பேசியுள்ளார்கள் அல்லவா! நானும் என்னுடைய ஆய்வுகள் முழுமையான ஆய்வுகளாக அமைய வேண்டுமென்று விரும்புபவன். அவ்வகையில் மார்க்சிய சமூகவியலைக் கையாள முயலுகிறேன். வளைக்க முடியாத இறுக்கமான கோட்பாடாக மார்க்சியத்தை நான் பார்க்கவில்லை. பொருளியல் என்ற நிலையுடன் மட்டும் நின்றுவிடாமல் பல்வேறு வகைப்பட்ட தரவுகளைச் சேகரித்து அவற்றிற்கு இடையே ஓர் இயைபு காண்பது அவற்றின் வழியாக அதன் அரசியல், பொருளியல், பண்பாட்டு உண்மைகளை வெளிப்படுத்த முயற்சி செய்கிறேன். செவ்விலக்கியம், நாட்டார் வழக்காறு, சமயம், வரலாறு, தொல்லியல், கல்வெட்டியல் தொடர்பான தரவுகளும் அவற்றிற்கிடையே மறைந்து கிடைக்கும் உறவுகளும் முக்கியமானவை என்றும் கருதுகிறேன். தேவைப்படும்போது சாட்சிகளைப் போல, பிற நாட்டு அறிஞர்களை துணைக்கு அழைத்துக் கொள்கிறேன்" எனும் இக்கருத்துகளை இணைத்துப் புரிந்துகொள்ளும்போது இவரின் ஆய்வு முறையியலின் நுட்பத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளலாம்.

**ஆய்வின் தனித்துவம்**

ஆ.சிவம் அவர்கள் தொடர்ச்சியாக அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்ச் சமூக வரலாற்றை நாட்டார் வழக்காற்றியலைக் கைக்கொண்டு கோட்பாடுகளற்ற தனித்ததொரு ஆய்வு முறையியலோடு எழுதி வருகின்றார். நாட்டார் வழக்காற்றியலின் நான்கு வகைகளான வாய்மொழி வழக்காறுகள், மக்களின் பழக்க வழக்கங்கள், நிகழ்த்துக் கலை, பொருள்சார் பண்பாடு என்ற நான்கு நிலையிலும் தன்னுடைய ஆய்வுகளை மேற்கொண்டு வருபவர். தனித்த நூல்களாகவும், கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு நூல்களாகவும், குறுநூல்களாகவும், பதிப்பு நூல்களாகவும் தமிழ்ச் சமூகத்தைப் புரிந்துகொள்வதற்கான சமூக வரலாற்றை மார்க்சியக் கண்ணோட்டத்தோடு பதிவு செய்துவருவது தமிழ்ச் சமூகத்திற்கு இவரின் சிறந்த பங்களிப்பாகும்.

இவரின் எழுத்துகளை கிறித்துவ வரலாறு, புழங்குபொருள் சார்ந்த பண்பாட்டு ஆய்வுகள், தமிழக அரசியல் வரலாறு, பண்பாட்டு ஆய்வு வரலாறு, சாதி சமய வரலாறு, அடித்தள மக்கள் வரலாறு எனப் பல்வேறு நிலைகளில் வகைப்படுத்தி ஆராய வேண்டும். பேராசிரியரின் எழுத்துகளை தமிழக வாசகர்கள் முழுமையாக வாசிக்க வேண்டும். பேராசிரியரின் எழுத்துகளை வாசிப்பதால் சமூகத்தை மாற்றிவிட முடியும் என்பதல்ல. பொருளுக்கும் உழைப்புக்குமான தொடர்பை அறிந்துகொள்ள முடியும். வர்க்க உருவாக்க அரசியலைப் புரிந்துகொள்ள முடியும். நாட்டார் வழக்காற்றியல் ஆய்வின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளலாம். நாட்டார் வழக்காறுகள் என்பது சமூக உருவாக்கத்திற்கான, சமூக மாற்றத்திற்கான கருவிகள் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். நாட்டார் தெய்வங்களும் வழிபாடுகளும் உருவான அரசியலைப் புரிந்துகொள்ளலாம், நாட்டார் வழக்காற்றியலைக் கொண்டு உள்ளூர் வரலாறுகளைக் கட்டமைக்க வேண்டியதன் அவசியத்தைப் புரிந்துகொள்ளலாம். குறிப்பாக, பொருள் உற்பத்தியில் உழைப்பாளிகளின் உழைப்பை அந்நியமாக்கும் முதலாளித்துவ சமூகத்தை மாற்றியே ஆக வேண்டும் என்னும் எண்ணமாவது உருவாகும். இவையே பேராசிரியரின் எழுத்தின் வெற்றியாகும்.

இவருடனான நேரடி உரையாடல் என்பது பல்வேறு ஆய்வுக் களங்களையும் ஆய்வு முறையியலையும் கற்பித்தது. குறிப்பாக, தமிழ்நாட்டின் வட மாவட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய பல ஆய்வுக் களங்களையும் எடுத்துக்காட்டியது சிறப்பாகும். அந்த ஆய்வுக் களங்களுக்குள் ஆய்வுக்குச் செல்வதற்கு முன்பாக ஒரு குறிப்பிட்ட ஆய்வுப் பொருண்மை சார்ந்து வாசிப்பு நிலையில் தயாராக வேண்டிய முறைமை, கள ஆய்வில் மேற்கொள்ள வேண்டிய நுட்பமான நிலைகள் ஆகியவற்றை எடுத்துக்காட்டி உரையாடியது ஆயிரம் புத்தகங்களைப் பார்த்த அனுபவமும் நூறு புத்தகங்களை முழுமையாக படித்த அனுபவமாகவும் இருந்தது.

●

கட்டுரையாளர், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்,
உதவிப் பேராசிரியர், து.கோ. வைணவக் கல்லூரி,
அரும்பாக்கம், சென்னை.




20.06.2024 அன்று நாகர்கோவிலில், நாகர்கோவில் வழக்கறிஞர்கள் சங்கம் மற்றும் என்சிபிஎச் நாகர்கோவில் கிளை இணைந்து நடத்திய புத்தகக் கண்காட்சியை மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி பி.கார்த்திகேயன் அவர்கள் தொடக்கி வைத்தார். இதில் வழக்கறிஞர்கள் ஆர்.ஜெயக்குமார், எம்.விஸ்வராஜன் மற்றும் என்சிபிஎச் கிளை மேலாளர் அ.பழனிவேல் ஆகியோர் கலந்துகொண்டனர்.



நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், விகடன் பிரசுரம், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம்,நெய்தல் மக்கள் இயக்கம் இணைந்து நடத்திய புத்தகக் கண்காட்சியை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,விகடன் பிரசுரம், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம்,நெய்தல் மக்கள் இயக்கம் இணைந்து நடத்தும் தேசிய புத்தகக் கண்காட்சியை நாகர்கோவில் துணை ஆட்சியர் ரெ. செந்தில் வேல்முருகன் அவர்கள் திறந்து வைத்தார், இதில் மாவட்ட உணவு வழங்கல் துறை கண்காணிப்பாளர் ஐயரின் செல்வி, தோழர்கள் ராஜா, எஸ்.கே.கங்கா, சுபாஷ்சந்திரபோஸ், முனைவர் செல்வசுமதி, தோழர் அனந்த சுப்ரமணியன் மற்றும் என்சிபிஎச் கிளை மேலாளர் அ.பழனிவேல் ஆகியோர் கலந்துகொண்டனர்.




# தமிழ்க் கல்வியின் பரிமாணங்கள்

**இரா.மோகனவசந்தன்**

சென்னைப் பல்கலைக்கழகத்தின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் பேரா.வீ.அரசுவின் எழுபதாம் ஆண்டு அகவை நிறைவையொட்டி 'ஓர்மைத்தடம்' என்கிற நூல் வெளியாகியுள்ளது. அவரிடம் பயின்ற மாணவர்கள் அவரை நேர்காணல் செய்து இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு பேராசிரியர் கல்விப் புலத்தில் எப்படிப் பணியாற்ற வேண்டும் என்று இந்நூல் சிறப்பாக எடுத்துரைக்கிறது. இந்நூலை முழுமையாக வாசிக்கிற ஒருவர், பேரா.அரசு என்பவர் கல்விப் புலத்தில் எப்படியானவராகத் திகழ்ந்தார்? அவரின் கல்விப்புலச் செயல்பாடுகள் எப்படியாக அமைந்தன? அவரிடம் பயின்ற மாணவர்களை அவர் எப்படியாக நெறிப்படுத்தியிருக்கிறார்? என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

சமூகநீதி, இடதுசாரி அரசியல் தேர்ச்சியுள்ள ஒருவர், பல்கலைக்கழகம் போன்ற உயராய்வு நிறுவனங்களில் தொடர்ச்சியாகக் குறிப்பிட்ட சில ஆண்டுகள் பேராசிரியராகவும் துறைத்தலைவராகவும் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்று, சமூகநீதி சார்ந்தும், சனநாயகத்தன்மையோடும் மாணவர்களை நடத்தியிருக்கிறார் என்பதையே இந்நூல் உணர்த்துகிறது. கட்டுக்கோப்பான அரசியல் தொலைநோக்குள்ள ஒருவராலேயே இப்படியாக இயங்க முடியும் என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது.

**சமூகநீதியும் சுயமரியாதையும்**

ஏற்கெனவே தமிழ்நாட்டின் மாநில அளவில் சமூகநீதிக் கூறுகள் அனைத்து முனைகளிலும் வேரூன்றியுள்ளது என்ற போதும் பல்வேறு சமூகப் பின்புலத்துடன் இளங்கலைப் படிப்பை முடித்து சென்னை போன்ற பெருநகரத்தின் பல்கலைக்கழகத்திற்குள் முதுகலை பயில வரும் மாணவர்களின் சேர்க்கையை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கும், தன்னிடம் முனைவர் பட்ட ஆய்வை மேற்கொள்ளும் மாணவர்களை எப்படித் தேர்வுசெய்ய வேண்டும் என்பதற்கும் அவர் காட்டிய கூடுதல் கவனம் சமூகநீதிச் செயல்பாட்டுத் தளத்தில் அடையாளக்கல்லாக அமைந்திருக்கிறது.

பழைய குருகுல வர்ணாசிரம முறையியிலேயே இன்றைக்கும் பல ஆய்வு நிறுவனங்கள் இருக்கின்றன. அதன் நவீன வடிவமாகச் சாதியும் பணமும் இன்றைக்கு மாறியிருக்கின்றன. அதற்கு இந்த ஊழலில் ஊறி உப்பிய நிர்வாக அமைப்பு முறையும் காரணமாக இருக்கிறது. இதுகுறித்தும் ஊடிழைப் பாவாக இந்நூலில் பேசி-யிருக்கிறார். ஆய்வை நெறிப்படுத்துகிற நெறியாளர் தன்னுடைய சாதியைச் சார்ந்தவர்களை மட்டுமே சேர்ப்பது அல்லது ஒரு குறிப்பிட்ட சாதியினரைச் சேர்ப்பதில்லை என்றிருப்பது, பணத்திற்காக உதவித்தொகை பெறும் மாணவர்களை மட்டுமே சேர்ப்பது, பணம் கொடுத்தால் ஆய்வேட்டை ஒப்படைத்த பத்து நாளில் பொதுவாய்மொழித் தேர்வை நடத்துவது, ஆய்வேட்டை ஒப்படைத்துவிட்டுப் பணம் கொடுக்க முடியாது என்போருக்குச் சில ஆண்டுகள் கழித்தே பொதுவாய்மொழித் தேர்வை நடத்துவது என்கிற சூழலே இன்றைக்கு நிலவுகிறது.

இப்படியான சூழலில், உயர்கல்வி நிறுவனங்களில் அதுவும் ஆய்வுச் சூழலில் மாணவர்களை எப்படி அவர்களது சுயமரியாதையை உணரச் செய்வது?, அந்த அடைவோடு அவர்களை ஆய்வு அடிப்படையில் இயங்கவைக்க எப்படிச் சூழலை வடிவமைப்பது?, சமூக விஞ்ஞான அடிப்படையிலும் வரலாற்று ஓர்மையோடும் விமர்சனப்பூர்வமாக எப்படிப் பதிப்பு, தொகுப்பு சார்ந்து ஆர்வங்கொள்ள வைப்பது? என்பதிலெல்லாம் மிகுந்த அக்கறைகாட்டியவராக விளங்கி-யிருக்கிறார். முதுகலை முதலாண்டு மாணவர்களுக்கு வகுப்பறையில் பாடமெடுக்கத் தொலைநோக்கோடு தயாரிப்பதில் தொடங்கி அவருடைய கல்விப்புலச் செயல்பாடுகள் ஒவ்வொன்றுமே அடுத்த தலைமுறைப் பேராசிரியர்களுக்கான ‘ஓர்மைத்தடமாக’ இருக்கின்றன.

**தமிழ்ச் சமூக வரலாறே தமிழ்க் கல்வி**

யார் யாரெல்லாம் படிக்கும் வாய்ப்பை இன்றியமையாது பெற வேண்டும்?, அவர்கள் எவ்வெவற்றை, எந்தக் கண்ணோட்டத்திலிருந்து படிக்க வேண்டும்? என்கிற ஓர்மையோடு காத்திரமான பாடத்திட்டத்தை உருவாக்குவதிலும் தலையீடு செய்திருக்கிறார். அதில், தமிழ் இலக்கியப் பாடத்திட்டம் என்பது வெறும் மனப்பாடக் கல்வியாக அமைந்துவிட்டால் அது இறந்த காலத்தின் நீட்சியே ஆகும்; அதை ஒரு கால, இடப் பரிமாணத்தில் பொருத்தி அமைக்க வேண்டும் என மெனக்கெட்டிருக்கிறார். பேராசிரியர் ந.சஞ்சீவி, பேராசிரியர் தனிநாயகம் அடிகளார் ஆகியோரின் முன்னெடுப்புகளை உள்வாங்கி, பேராசிரியர் சிவத்தம்பி அவர்களுடன் சேர்ந்து தமிழ் இலக்கிய, இலக்கண மரபு, தமிழ்ப் பண்பாட்டு வரலாறு, ஊடக வரலாறு எனப் பன்முகத்தன்மையோடு தமிழ்ச் சமூக வரலாற்றின் ‘யாதுமாகி நிற்கும்’ தமிழியல் கல்வியாகப் புதுப்பிக்க முனைந்து பாடுபட்டிருக்கிறார். அதில் வெற்றியும் பெற்றிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். குறிப்பாக, புலம்பெயர் இலக்கியத்தையும், தமிழ்ஒளியின் படைப்புகளையும் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்திற்குள் கொண்டுவந்ததில் பேரா. அரசுவின் பங்கு முக்கியமானது.

பேரா.அரசு உருவாக்கிய பல்கலைக்கழகப் பாடத்திட்டமும், பேரா.சுதந்திரமுத்து, பேரா. மருதூர் அரங்கராசன் ஆகியோரோடு இணைந்து தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்காக உருவாக்கிய முதுநிலைத் தமிழியல் பாடத்திட்டமும் இந்நூலில் பின்னிணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ்க்கல்வி சார்ந்த பாடத்திட்டம் எப்படி அமைய வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இவை அமைந்துள்ளன. தமிழ் இலக்கியங்களோடு மொழி-யியல், மானிடவியல், நாட்டார் வழக்காற்றியல், தொல்லியல், சுவடியியல், கல்வெட்டியல் எனப் பல்வேறு புலங்களை இணைத்து கலப்புப் புல ஆய்வு நோக்கில் அமைத்திருக்கிறார். பொதுவாக தமிழியல் ஆய்வு என்பது பல்வேறு புலங்களையும் இணைக்கிறபோதே செழித்து வளரும் என்பதை இன்றைக்குப் பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். வெவ்வேறு புலங்களையும் பட்டயப் படிப்பாக அறிமுகம் செய்து முதுகலை பயில்கிற அதே கால எல்லைக்குள் ஒன்றிரண்டு பட்டயப் படிப்புகளையும் முடிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இவை அனைத்தும் இலக்கிய - இலக்கணங்களை வரலாற்றுச் சட்டகத்துக்குள் வைத்து அணுகுதல், ஒப்பாய்வை அடிப்படையாகக் கொள்ளுதல், மெய்யியல் மரபுகளை அவற்றோடு இணைத்தல், சமூகப் பண்பாட்டு வரலாற்றை வரம்பெல்லையாகக் கொண்டு பயிலுதல் - களம்புகுதல் - கோட்பாட்டாக்கம் செய்ய முயலுதல் ஆகிய நோக்கில் ஒரு கற்கைக்கொத்தாக அந்தக் கல்விக்களம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தொல்காப்பிய ஆராய்ச்சியை நிகழ்கால நோக்கில் எப்படி நீட்டிப்பது? அதன் தொடர்ச்சியை வரலாறாக எப்படிப் புரிந்துகொள்வது? செவ்வியல் வரையறையில் அதன் சமகாலத் தேவை என்ன? மொழியியல், மெய்யியலில் அதன் பங்கு என்ன? ஓர் இலக்கியக் கோட்பாடாக அதை எப்படிப் படிப்பது? மானிடவியல், சமூகவியல் நோக்கில் அதை எப்படிப் பொருள்கோடல் செய்வது என்கிற பன்முகநோக்கில் அவரால் தொல்காப்பியப் பாடம் உருவாக்கப்பட்டதும், அதற்குப் பழமைவாதத் தமிழ்ப் பேராசிரியர்கள் எப்படி எதிர்வினையாற்றினர் என்பதும், கல்விப்புலத்தில் தமிழ்க் கல்வியின் நிலையை விண்டுரைப்பதாகவே அமைந்துள்ளது.

**பார்வையை விசாலமாக்கியவர்**

வகுப்பறைகளுக்கு அப்பால் மாணவர்களின் படைப்பாக்கத் திறனை வெளிக்கொண்டுவரும் வகையில் ஒவ்வொரு மாதமும் ‘மேடை’ என்கிற நிகழ்வை நடத்தி, அதில் மாணவர்கள் அனைவரின் பங்கேற்பையும் உறுதிசெய்கின்றனர். இதனால் மேடை அச்சம் நீக்கப்பட்டு, கேள்விகளை எழுப்புமாற்றலும், எதிர்கொள்ளும் உரையாடல் திறனும் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது.

மாணவர்களை ஒவ்வொரு பொது, ஆய்வு நூலகங்களுக்கும் அழைத்துச் சென்று நூலகப் பயன்பாடு குறித்தும், எந்தெந்த அரிய நூல்கள், இதழ்கள் எந்தெந்த நூலகங்களில் இருக்கின்றன என்பது குறித்தும் அறிமுகப்படுத்தி நூலகப் பயன்பாட்டை அறிமுகம் செய்திருக்கிறார். நீட்சியாக, திருவல்லிக்கேணி பழைய புத்தகக் கடைகளில் வரும் அரிய நூல்களை வாங்குவதில் அவருக்கும் அவருடைய மாணவர்களுக்கும் இடையேயான போட்டி, பல்கலைக்கழக நூலகங்களிலிருந்து நூல்களை ‘எடுத்துச்’ சென்று அவரவர் வீடுகளில் நூலகம் அமைத்தல், பேராசிரியர்கள் அதைக் கண்டுபிடித்து நூல்களைத் திரும்பப் பெற்றல் போன்றவை மாணவர்களிடையே அவர் உருவாக்கிய புத்தக ஆர்வத்தை வெளிப்படுத்துபவையாக அமைந்துள்ளன. இந்த முன்னெடுப்பே அவருடைய மாணவர்களையும் அவரவர் வீடுகளில் நூலகம் அமைக்கும் வேட்கை கொள்ள வைத்துள்ளது. இதில் அக்கம் பக்கமாக வளர்ந்து கொண்டிருந்த சென்னைப் புத்தகக் காட்சி மிகப்பெரும் பங்கு வகித்திருக்கிறது என்பதையும் இந்நூல் உணர்த்துகிறது.

அதேபோல ‘கங்கு’ எனும் பெயரில் வெளியூர் பயணத் திட்டமிடல்களை மாணவர்களை வைத்தே ஒருங்கிணைத்து, அவர்களைக் களம்புகுந்து சிந்திக்கும் வகையில் ஒழுங்கு செய்திருக்கிறார். அதில் அந்தமான் பயணத்தை முடித்துத் திரும்பி வரும்போது அவர் செய்த செயல் என்பது பெரும் வியப்பைத் தருவதாக அமைந்துள்ளது.

**தமிழ்த்தேசிய நவீன நாடக மரபு**

தமிழ்க்கல்வி பயில்வோர் வெறும் இலக்கியக் கல்வியோடு நின்றுவிடக் கூடாது என்பதில் மிகுந்த முனைப்புக் காட்டிய பேரா.வீ.அரசு, ‘திரைவெளி’ என்கிற திரையிடல் நிகழ்வையும் நடத்தி, அதையொட்டி உரையாடல் மேற்கொள்ளவும் வாய்ப்பை உருவாக்கியிருக்கிறார். அப்படியான பல்துறைத் தேடலில் நவீன நாடக மரபு சார்ந்து ஆர்வமுள்ள மாணவர்களை உருவாக்கியது மிக முக்கியமானதாக இருக்கிறது. தீவுத்திடலில் நடைபெற்ற கூத்துப்பட்டறை நிகழ்வுகள், கூத்துகள் பற்றி அன்றைக்குச் சிற்றிதழ்களில் வெளிவந்த கட்டுரைகள், பேரா.சிவத்தம்பி வாயிலான இளைய பத்மநாதனின் அறிமுகம் போன்றவையே தமிழ் மரபு ஓர்மையுடன் கூடிய நவீன நாடகங்களை நோக்கி பேரா.அரசுவை மடைமாற்றியிருக்கின்றன. தமிழ்நாட்டின் வடமாவட்டங்களில் கூத்துகளும், தென்மாவட்டங்களில் நாடகங்களும் விளிம்புநிலை மக்கள் பண்பாட்டில் இன்றைக்கும் விரவிப்பரவி இருக்கின்றன. அதிலும் வடமாவட்டங்களைச் சார்ந்த கிராமப்புற மாணவர்களே சென்னைப் பல்கலையில் அதிகம் பயின்றதால் இலக்கியத்துறைக்குள் நிகழ்த்துக் கலை மரபு சார்ந்த நவீன நாடக முன்னெடுப்புகளும், அதையொட்டி கூத்து பற்றிய கல்வியியல் ஆய்வுகளும் தீவிரப்பட்டுள்ளன.

இந்நூலில் பேரா.வீ.அரசு, ‘‘பத்தண்ணா (இளைய பத்மநாதன்) இல்லாவிட்டால் மங்கை இல்லை. மங்கை இல்லாவிட்டால் இன்குலாப் நாடகம் இல்லை. இன்குலாப் நாடகங்களை இவர் செய்யாவிட்டால் இன்குலாப் ஒரு நாடகக்காரராக அறியப்படுவதற்கே வாய்ப்பில்லாமல் போயிருக்கும்’’ (ப.246) என்று குறிப்பிட்டிருக்கிறார். மேலும், ‘‘தமிழ்நாட்டுச் சூழலில் நான் ஒரு நாடகக்காரன் என்பது மங்கை மூலமாகவே வெளியில் தெரிந்தது. இல்லாவிட்டால் யாரும் ஏற்றுக்கொண்டிருக்க மாட்டார்கள். என்னைக் கவிஞன், கவிஞன் என்றே சொல்கிறார்கள். எனக்குச் சிறுவயதிலிருந்தே மிக ஆர்வமுடைய துறையாக நாடகத்துறையே இருந்தது’’ (ப.246) என்று மக்கள் கவிஞர் இன்குலாப் அடிக்கடிச் சொன்னதாக பேரா. அரசு குறிப்பிட்டிருக்கிறார். கவிஞர் இன்குலாப் அவர்களின் நாடகங்களோடு, நாடகம் - கூத்து - கானா பாடல்கள் என அவரும் பேரா.அ.மங்கை அவர்களும் இணைந்து நடத்திய அனைத்துச் செயல்பாடுகளுமே சமூக அக்கறையுடன் அமைந்திருக்கின்றன.

**கருவி நூல் பல உருவாகக் காரணமானவர்**


பேராசிரியர்களுக்கு ஆண்டுதோறும் நடத்தப்படும் புத்தொளிப் பயிற்சிகளுக்கு மாணவர்களையும் அழைத்துச் சென்றிருக்கிறார். தமிழ் இதழ்கள், 19, 20ஆம் நூற்றாண்டுத் தமிழியல், 10 - 20ஆம் நூற்றாண்டுத் தமிழியல் வரலாறு, ஆவணங்கள், செம்மொழித் தமிழ் ஆகிய பொருண்மைகளில் நடத்தப்பட்ட புத்தொளிப் பயிற்சிகளுக்கான கையேடுகளையும் மாணவர்களே வைத்தே உருவாக்கியிருக்கிறார்.

ஒரு பேராசிரியர் தன் மாணவர்களை ஆய்விதழ் நடத்தப் பயிற்றுவித்து, அதில் அவர்களையே எழுதவும் வைத்துக் 'கட்டியம், உயராய்வு, மாற்றுவெளி (15 சிறப்பிதழ்கள்)' போன்ற இதழ்களை நடத்தியிருக்கிறார். பதிப்பு நூல்களையும் தொகுப்பு நூல்களையும் வெளிக்கொண்டுவரத் தன் மாணவர்களை ஆற்றுப்படுத்தி வெளிக்கொண்டும் வந்திருக்கிறார். கங்கு, மாற்று வரிசை நூல்கள், நெய்தல், முல்லை, மருதம், குறிஞ்சி, பாலை, வெட்சி, கரந்தை, வஞ்சி போன்ற தொகுப்பு நூல்கள் அனைத்தும் பேரா.அரசுவின் மேற்பார்வையிலேயே வெளிவந்திருக்கின்றன. இவை அனைத்தும் இன்றைக்கு உயராய்வு நிறுவனங்களில் சடங்காகச் செய்யப்படும் கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்புகளைப் போலானவையல்ல. மாறாக, அனைத்துமே கருத்தியல் செறிவுள்ள காத்திரமான ஆய்வுப் பணிகள். இந்த இதழ்கள், நூல்கள் அனைத்துமே பிற ஆய்வுகளுக்கான கருவி நூல்களாகத் திகழ்கின்றன.

பேரா.அரசு அவர்கள் தன் இருப்பிடத்தில் உருவாக்கியிருக்கிற 'கல்மரம்' நூலகத்தை நேரில் பார்க்கிற ஒருவருக்குக் கண்டிப்பாக மனித செயலாற்றல் குறித்த வியப்பும் மலைப்பும் மேலிடும். அங்கிருக்கும் நூல்கள், இதழ்கள் அனைத்தும் ஒரு தனிமனிதருடைய ஐம்பது ஆண்டுகாலச் சேகரிப்புகள் ஆகும். ஆய்வாளர்கள் பயன்படுத்த வேண்டிய நூலகம். அரிய பல சேகரிப்புகளை உள்ளடக்கிய நூலகமாகவும் அமைந்துள்ளது. இந்நூலில் அந்த நூலகம் உருவான பின்புலம் விவரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த நூலகத்தில் உள்ள சேகரிப்புகளின் முக்கியத்துவத்தை உணர்த்த அது மட்டுமே போதுமானதாக இல்லை.

**வரலாறெழுதியலாக மாற்றியவர்**

இவற்றிற்கு அப்பால் பேரா.அரசுவின் ஆக்கங்கள் குறித்து மட்டுமே தனியாக ஒரு நூல் கொண்டுவர வேண்டும். ஏனெனில் அவருடைய ஆக்கங்கள் அனைத்துமே மார்க்சிய, பெரியாரியப் பார்வையில் வரலாற்று நிலையில் மிகத் தெளிவான அவைதீகத் தடத்தில் அமைந்தவை. பதிப்பு, தொகுப்பு, தனிநூல்கள் என ஒவ்வொன்றையும்




ஓர்மைத்தடம் | பேரா.வீ.அரசு: ஆசிரியம் - ஆய்வு - உரையாடல்கள் | தொகுப்பும் பதிப்பும்: அ.மங்கை
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
விலை ரூ.500/-

அப்படிச் சுட்டமுடியும். அவை அனைத்துமே மிகக் கடுமையான உழைப்பைக் கோருபவை. தத்துவ விவேசினி, ஜனசக்தி தலையங்கம் என இதழ்த் தொகுப்புகள், அத்திப்பாக்கம் வெங்கடாசலனார், வ.உ.சி., ப.ஜீவானந்தம், மயிலை சீனி.வேங்கடசாமி, தமிழ்ஒளி எனத் தனிநபர் ஆக்கங்களின் தொகுப்புகள், புதுமைப்பித்தன், விந்தன் முழுத் தொகுப்புகள், இருபதாம் நூற்றாண்டுச் சிறுகதை நூறு என நவீன இலக்கியத் தொகுப்புகள், அச்சுப் பண்பாட்டில் அவர் வைத்த மாற்றுப்பார்வை, சிற்றிதழ் மரபின் சநாதனத்தைத் தோலுரித்த சிறுபத்திரிகை அரசியல், 19 - 20ஆம் நூற்றாண்டுத் தமிழ்ச் சமூக வரலாறு சார்ந்து அவருடைய 'குறுநூல்கள்' முன்வைக்கும் எடுகோள்கள் என அவருடைய ஆய்வுப் பணிகள் குறித்து இந்நூலில் ஆங்காங்கே பேசப்பட்டாலும் பேரா.சதீஷ், தெ.மதுசூதனன் மற்றும் சீ.காண்டீபன் ஆகியோரின் இரண்டு நேர்காணல்களைத் தவிர்த்து வேறு எங்கும் அதுகுறித்து விரிவாகப் பேசப்படவில்லை என்றே தோன்றுகிறது.

ஏனெனில், கல்விப்புலம் சார்ந்து மட்டுமே விளக்கும் வகையில் பெரும்பாலான நேர்காணல்கள்

அமைந்துள்ளன. பேரா.அரசு அவர்களின் ஆய்வுப் பணிகளை எடுத்துரைக்க அவை மட்டுமே போதுமானதாக அமையவில்லை. இடதுசாரிப் பின்னணியிலும் திராவிட இயக்கப் பின்னணியிலும் அவர் தொகுத்த நூல்கள் ஒவ்வொன்றும் ஆய்வுக்களங்களுக்கான சாளரங்களை அகலத் திறந்துவிட்டவை எனலாம். பேரா.சிவத்தம்பியின் 'தமிழ்ப் பண்பாட்டின் மீள்கண்டுபிடிப்பு' கட்டுரை மிகச் சிறியதுதான். ஆனால் பேரா.வீ.அரசு அதன் ஒவ்வொரு கூறையும் பிற்காலத்தில் வரலாறெழுதியலாக மாற்றியவர். எனவே இதைப் பற்றி தனியாகவே எழுதலாம்.

### குறையைத் தீர்த்த பேரா.வீ.அரசு

குறிப்பாக, 'தெ.பொ.மீ., வையாபுரிப்பிள்ளை, கைலாசபதி ஆகியோர் குறித்த பேரா.அரசுவின் எழுத்துகள் எவ்வித விமர்சனங்களுமின்றி இருக்கின்றன' என்று எண்ணியதுண்டு. இந்நூலில், ''வையாபுரிப்பிள்ளையும், தெ.பொ.மீ.யும் தமிழ்ச் சமூகத்தில் வைதீகம், பார்ப்பனியம் என்று சொல்லக்கூடிய கருத்தியல் மனத்தொகுப்பிலிருந்து உருவாகி வளர்ந்து வருகிறார்கள். சமசுகிருதம், தமிழ் என்கிற இரண்டு மரபையும் ஒருநிலையில் பார்க்கவேண்டும் என்கிற தன்மையே இவர்களுக்குள் இருந்தது. சில இடங்களில் தமிழை உயர்த்திப் பேசுவார்கள், அவர்கள் அடிப்படையில் வைதீக மரபுகளைக் கொண்டாடுபவர்களாகவும் இருந்திருக்கலாம். குறிப்பாக தெ.பொ.மீ. அப்படி இருக்கலாம். வையாபுரிப்பிள்ளைகூட அந்த மரபுகளை மறுக்கவில்லை. பக்தி இலக்கிய ஆழ்வார்கள், நாயன்மார்கள், தாயுமானவர் இப்படி வருகிற ஆட்களையெல்லாம் அவர்கள் கிரிட்டிகலாகப் பார்க்கவில்லை. சமசுகிருதத்துக்குள் வரக்கூடிய அந்த மரபையும் தமிழில் இருக்கக்கூடிய மரபையும் ஒன்றாகப் பார்க்கிறார்கள். இந்த மரபு அவர்கள் பேராசிரியர்களாகச் செயல்படுகிற காலங்களில், அவர்களின் மரபிலேயே இருக்கிறது'' (ப.254) என்று விளக்கி அவரே அந்தக் குறையைத் தீர்த்து வைத்திருக்கிறார். ஆறுமுகநாவலர், சி.வை.தா., உ.வே.சா., குறித்த பார்வையையும் மிகச் சிறப்பாக எடுத்துரைத்திருக்கிறார்.

### திராவிட இயக்கங்களின் போதாமை

இந்நூலில், ''கடந்த பத்து ஆண்டுகளில் பெரியார் குறித்த மதிப்பீடுகள் மாறியுள்ளன. அவரை இடதுசாரிக் கண்ணோட்டத்தில் பார்க்கும் கோணம் முக்கியத் தேவையாகும். திராவிட இயக்கம் அப்படிச் செயல்பட வேண்டும் என்று நினைக்கிறேன்'' (ப.273) என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அதேபோல ''திராவிட இயக்கங்கள் இன்னும் கருத்தியல் ரீதியாக வலுவாக வேண்டும். சமூகநீதி என்கிற இடஒதுக்கீடு போன்ற நிலைப்பாடுகளில் திராவிட இயக்கத்தின் பங்களிப்புகள் முக்கியமானவை. ஆனால், இவை மட்டுமே போதுமானதல்ல. தமிழக அரசியலில் பெரியார், அண்ணா, காமராசர், கலைஞர் போன்றோர் ஏற்படுத்திய தாக்கங்கள் முக்கியமானவை. அரசியல் கருத்தாக்கங்களை மாணவர்களிடம் கொண்டுசெல்வதில் இன்றைய திராவிட இயக்கங்கள் பின்தங்கியே உள்ளன. இதுவே வளாகங்களில் மாணவர்கள் அரசியல் போதாமையுடன் இருக்கக் காரணம்'' (பக்.273 - 274) என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இன்றைய மதவாத பாசிச சூழலில் கல்விச் செயல்பாட்டில் இக்கருத்துகள் மிக முக்கியமான எடுகோள்களாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை ஆகும்.

பேரா.பழநியப்பன் அவர்கள், ''நான் அரசு அய்யாவின் நேரடி மாணவன் கிடையாது. ஆனால் அவருடைய பேச்சைக் கேட்ட பிறகே என்னுடைய ஒட்டுமொத்தப் பார்வையும் மாறியது'' என்று அடிக்கடிக் குறிப்பிடுவார். இப்படியான பல்வேறு மாற்றங்களைப் பலரிடம் உருவாக்கிய பேரா. அரசுவின் ஆய்வுத் தொடர்ச்சியை அவரே தொடரவும் செய்கிறார். இன்னபிற ஆய்வாளர்களும் தொடரவே செய்கிறார்கள். ஆனால் அதில் அவருக்கிருந்த / இருக்கும் அரசியல் ஓர்மை ஒப்படைப்பு உணர்வு (Commitment) அவரது அடுத்த ஆய்வுத் தலைமுறையிலும் தொடர்கிறதா என்பது மிகப்பெரிய ஒரு கேள்விக்குறியாகும். ஏனெனில் அவர் எந்த இடத்திலும் தான் கொண்ட கொள்கைக்கு மாறாகச் செயல்படாமல் வளர்ந்துகொண்டே செல்பவர். அவருடைய அகமும் புறமுமான அனைத்துச் செயல்பாடுகளையும் அரசியல் ஓர்மையுடனேயே கட்டமைத்திருக்கிறார். இயக்கவாதத்தன்மையின் ஊட்டத்தோடு கல்விப்புலத்தையும் ஆய்வுப்புலத்தையும் ஒருசேர அணுகியிருக்கிறார். அப்படியான பேரா. அரசு அவர்களின் ஒரு பகுதியை இந்நூல் சிறப்பாக எடுத்துரைத்திருக்கிறது. அவரது ஒட்டுமொத்தத்தையும் புரிந்துகொள்ள, அவரோடு பழகிய, அவரால் வளாகத்துக்கு வெளியே ஆய்வுப் பயன்பெற்ற, அரசியல் தெளிவுபெற்ற பல்வேறு கலை, இலக்கிய, அரசியல் ஆளுமைகளால் எழுதப்பெற்ற ஒரு தொகுப்பு நூல் வெளிவர வேண்டும் என்கிற எண்ணத்தை இந்நூல் மேலோங்கச் செய்கிறது.

●

கட்டுரையாளர், முனைவர் பட்ட ஆய்வாளர்,
மாநிலக் கல்லூரி, சென்னை.



20.06.2024 அன்று மதுரை மேலூரில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மதுரை கிளையின் சார்பாக 39 ஆவது தேசியப் புத்தகக் கண்காட்சியை மேலூர் நகர்மன்றத் தலைவர் முகம்மது யாசின் அவர்கள் தொடங்கி வைத்தார். இதில் மேலூர் நகர்மன்றத் துணைத் தலைவர் இளஞ்செழியன், மேலூர் அரசு கலைக்கல்லூரி தமிழ்துறைத் தலைவர் முனைவர் பா.சிங்காரவேலன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் தோழர் மெய்யர், என்சிபிஎச் முதுநிலை விற்பனைச் சீரமைப்பாளர் அ.கிருஷ்ணமூர்த்தி, மதுரை மண்டல மேலாளர் ஆர்.மகேந்திரன், மதுரை கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.




01.06.2024 அன்று வேலூர் கிளை சார்பாக நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் 74 ஆம் ஆண்டு தொடக்கத்தினை முன்னிட்டு கொண்டாடப்பட்டது. இதில் தொல்லியலாளர் இர.பூங்குன்றன், திருவாரூர் மாவட்ட குடவாயில் டாக்டர் புரட்சித் தலைவர் எம் ஜி ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் மாரிமுத்து, வேலூர் முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர். சிவக்குமார், வர்மக்கலை மருத்துவர் விஸ்வயோகி, திருவள்ளுவர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை பேராசிரியர் சிவகுரு, முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர் சிவக்குமார் மற்றும் என்சிபிஎச் வேலூர் கிளை மேலாளர் பாலசுப்பிரமணி ஆகியோர் கலந்துகொண்டனர்.







# புலியூர்க்கேசிகன்:

## எளிமையால் புறந்தள்ளப்பெற்ற புலமையாளர்

முனைவர் மா.பரமசிவன்

'புலியூர்க்கேசிகன் உரையைக் கையில் வைத்திருந்தாலே பாவம்' என்று கருதுகின்ற மனநிலைதான் இன்றுவரை தமிழ் இலக்கிய மாணவர்கள் மனதில் விதைக்கப்படுகிறது. அவரின் உரையைத் தழுவி எழுதப்பெறும் பிறர் உரைகள் இத்தண்டணைக்கு ஆளாவதில்லை. ஆனால், புலியூர்க்கேசிகன் மட்டும் தடை செய்யப்படுகிறார். 39 நூல்களுக்கு உரைகள், 9 திறனாய்வு நூல்கள், 8 சோதிட நூல்கள், ஆன்மிகம் முதலான நூல்களாக 6 என இத்தனை நூல்களை எழுதிய புலியூர்க்கேசிகன் இன்றுவரை புறக்கணிக்கப்படுவதன் காரணம் குறித்துச் சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது. புலியூர்க்கேசிகனைப் பற்றி நூல் வடிவ ஆவணங்களோ, இணையவழி ஆவணங்களோ இதுவரை இல்லை என்பதன்வழி, அவர் புறந்தள்ளப் பெற்றிருப்பதன் வலிமையினை உய்த்துணரலாம். 'அவர்தம் உரைகள் புலமைத்துவம் அற்றவை; அவற்றைப் பயிலக்கூடாது' என்றெல்லாம் புலமையாளர்களால் கருதப்பெற்ற சூழலில்தான் 2009இல் அவரது நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன. இதுமட்டுமன்றிப் பெரும்பாலான மக்களால் வாசிக்கப்பெறுவதால்தான் அவரது உரைகள் இன்றுவரை பல்வேறு பதிப்பகங்களின்வழி மறுபதிப்புகள் பலவற்றைக் கண்டுள்ளன. புலமையாளர்களால் புறந்தள்ளப்பெற்ற ஒருவரின் உரை நாட்டுடைமையாகி இருப்பது குறித்தும், மிகுதியான மறுபதிப்புகளைக் கண்டிருப்பதைக் கவனத்தில் கொண்டும், புலமைத்துவம் அற்றதாகப் பொதுநிலையில் கருதப்பெறும் ஓர் தெளிவுரை பரவலாக வாசிக்கப் பெற்றிருப்பது குறித்தும் சிந்திக்க வேண்டியது நமது கடமையாகும்.

### வாழ்வும் பணியும்

16.10.1923 முதல் 17.04.1992 வரை வாழ்ந்தவர் புலியூர்க்கேசிகன். திருநெல்வேலி மாவட்டம், புலியூர்க்குறிச்சி எனும் ஊரில் பிறந்து வளர்ந்த இவர், புலியூர்க்குறிச்சி K.Chockalingan என்பதன் சுருக்கமாகவே புலியூர்க்கேசிகன் (புலியூர் K.C.gan) என்பதைப் பயன்படுத்தினார்[1]. பள்ளிக்கல்வியை டோணாவூரிலும் இடைநிலை வகுப்பைத் திருநெல்வேலி, ம.தி.தா.இந்துக் கல்லூரியிலும் நிறைவு செய்த இவர் வடுகச்சி மலைப்பள்ளியில் மூன்று ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். மறைமலையடிகளாரின் மகள் நீலாம்பிகை அம்மையாரின் வழிகாட்டுதலினால் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் திருநெல்வேலிக் கிளையில் மேலாளராகப் பணியேற்றார். தொடர்ந்து கழகத்தின் சென்னை அலுவலராகப் பணியேற்றுச் செயல்பட்டு அருணா பப்ளிகேசன்ஸ், பாரி நிலையம், மாருதி

பதிப்பகம் ஆகியவற்றின் மேலாளராகவும் தம் பணியைத் திறம்படச் செய்தார்.

அவர் மேற்கண்ட பதிப்பகங்களில் பணியாற்றிய காலக்கட்டங்களில் பல்வேறு நூல்களுக்கு அவர் உரை எழுதியுள்ளார். தொல்காப்பியம் (1958), நற்றிணை (1966), குறுந்தொகை (1965), ஐங்குறுநூறு (1982, 1983), பதிற்றுப்பத்து (1974), பரிபாடல் (1962, 1971), கலித்தொகை (1958), அகநானூறு (1960, 1962), புறநானூறு (1958), பத்துப்பாட்டு (1960), திருக்குறள் (1969), பழமொழி நானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறப்பொருள் வெண்பாமாலை, திருவாசகம் (1964), திருப்பாவை (1959), நன்னூல், கலிங்கத்துப்பரணி, நளவெண்பா, திருக்குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு, தகடூர் யாத்திரை, காளமேகம் தனிப்பாடல்கள், ஔவையார் தனிப்பாடல்கள், கொக்கோகம், இல்லற ரகசியம், பெண்மையின் ரகசியம், சிங்கார நாயகிகள் என்பன அவை.

இந்த உரைகளைத் தாண்டித் திறனாய்வு நூல்கள், சோதிட நூல்கள், உலாநூல், யோகநூல், ஆன்மிகம், வரலாறு, தொகுப்பு நூல்கள் எனப் பல துறைகளிலும் முக்கியத்துவம் வாய்ந்த நூல்கள் பலவற்றை எழுதியுள்ளார். இந்நூல்களுள் பெரும்பாலானவற்றின் முதல் பதிப்புக் காலத்தைக்கூட இன்றுவரை அறிய இயலவில்லை. இவர்தம் சமகாலத்தில் செயல்பட்ட பிற அறிஞர்களின் படைப்புகள் காப்பாற்றப்பெற்ற அளவிற்கு இவர்தம் நூல்கள் காக்கப்பெறவில்லை என்பதை இதன்வழி அறியமுடிகிறது. பதிப்பியல் ஆய்வாளர்கள்கூடப் புலியூர்க்கேசிகனைக் கண்டுகொள்ளாமல் விட்டதுதான் வேதனையிலும் வேதனை. பதிப்பாசிரியர், உரையாசிரியர், மெய்ப்புத் திருத்துநர், இதழாளர், சோதிடர், எண்கணித வல்லுநர், சொற்பொழிவாளர் எனப் பன்முகத்திறன் கொண்ட இவரது நூல்கள் புறந்தள்ளப்பட்டதன் காரணம் குறித்துச் சிந்திக்க வேண்டியது அவசியமாகிறது.

### யாருக்காக உரை எழுதினார்?

பழந்தமிழ்ப் பனுவல்களுக்கு உரை எழுதிய பிற இலக்கண, இலக்கிய உரையாசிரியர்களிடம் காணப்பெறுகின்ற இயல்புகளான அருஞ்சொற்பொருள் குறித்தல் முதல் உள்ளுறை, இறைச்சி குறித்தல் வரையிலான அனைத்தும் இவர்தம் உரைகளிலும் காணப்பெறுகின்றன. பொருள் குறித்தலில் அடிப்படை மாற்றம் எதையும் இவர் செய்து விடவில்லை. பழந்தமிழ்ப் பொருள்கள் எவை என்பதை ஆய்ந்தும் தெளிவாக அறிந்துமே இவர் பொருள் குறிக்கிறார். ‘மரையா’ எனும் சங்கச் சொல்லுக்கான பொருளைத் தெளிவுபடுத்த முயற்சித்து உரையாசிரியர்களை அணுகியபோது, காட்டுக்குதிரை, மான் என்றெல்லாம் பொருள் குறித்த அறிஞர்களுக்கு மத்தியில் ‘மரையா’ என்பது இவ்விரண்டும் அற்ற ஓர் விலங்கு எனும் கருத்தியல் அடிப்படையில் ‘மரையா’ என்றே பொருள் குறித்த மிகச்சிலருள் இவரும் ஒருவர்[2]. அது காட்டுப்பசுவைக் குறித்தது என்று பின்னர் வந்த ஆய்வாளர்களாலேயே விளக்கப்பெற்றுள்ளது. இதுபோன்ற பல சான்றுகளை இவர்தம் உரையிலிருந்து காட்ட இயலும். இந்தளவிற்குத் தெளிவாகவும் கவனமுடனும் பொருள் குறித்த இவரது உரை புறக்கணிக்கப்பட்டதற்குக் காரணமே எளிமைதான் என்பது வேதனையிலும் வேதனை.

செவ்வியல் முதலான இலக்கண, இலக்கியப் பனுவல்களுக்கு எளிமையாகப் பொருள் குறித்து எளிய மக்களிடமும் இளந்தலைமுறையினரான மாணவர்களிடமும் அப்பனுவல்களைக் கொண்டு செல்ல முனைந்தவர் புலியூர்க்கேசிகன். அதற்கு அடையாளமாகவே அவர்தம் உரை நூல்களில் ‘மக்கள் பதிப்பு, தெளிவுரை’ எனும் கலைச்சொற்களைப் பயன்படுத்துகிறார். இந்தக் கலைச்சொற்களை இலக்கண, இலக்கியப் பதிப்புகளில் முதன்முதலில் பயன்படுத்தியவர் இவரே ஆவார். தற்காலப் பதிப்பு, வெளியீடுகள் இவரைப் புறக்கணித்துவிட்டு இவர் உருவாக்கிய இக்கலைச்சொற்களையும் இவர்தம் உரைநெறியையும் பயன்படுத்துகின்றன என்பது கவனத்தில் கொள்ளத்தக்கதாகிறது. இக்கலைச்சொற்களைப் பயன்படுத்தும் இக்காலப் பதிப்புகள் உண்மையில் மக்கள் பதிப்புகளாகவும் தெளிவுரைகளாகவும் இருக்கின்றனவா என்பது அந்தந்தப் பதிப்பகங்களுக்குத்தான் வெளிச்சம். ஆனால், புலியூர்க்கேசிகன் அதைத் திறம்படச் செய்தார்; வெற்றியும் கண்டார். எளிமையாக்கத்தைத் தம் பெயரிலிருந்தே தொடங்குகிறார் (புலியூர்க் குறிச்சி K.Chockalingan = புலியூர் K.C.gan) அவர். “இப்பதிப்புக்கள் பலவும் தமிழறிஞருக்கு மட்டுமே பயன்படக் கண்டு, தமிழார்வம் உடையவர் அனைவருமே விருப்பமுடன் எளிதாகக் கற்று மகிழும் வகையிலேயும், இத்தெளிவுரை அமைப்பு உருவாக்கம் பெற்றிருக்கின்றது”[3] என்று அகநானூற்று உரைநூலின் முகவுரையில் இவர் பதிவு செய்திருப்பதும் இதனை மெய்ப்பிக்கிறது.

### உரைகள் - தோற்றப் பின்னணி

புலியூர்க்கேசிகன் உரை எழுதத் தொடங்கிய காலக்கட்டத்தில் எளிய மக்களை மையப்படுத்திய பதிப்புகளோ, உரைகளோ தோன்றவில்லை. புலமையாளர்களை மையமிட்ட உரைகளே தோற்றம் பெற்றிருந்தன. அதேவேளை, எளிய மக்களை மையமிட்ட தெளிவுரைகள் தோன்ற வேண்டிய தேவையும் இருந்தது. 1938 தொடங்கித் தமிழ்நாட்டில் நிலவிய மொழிப்போர்ச் சூழல் அதற்கான அடிப்படைக் காரணமாக அமைந்தது. இவர்தம் உரைநூல்களுக்கான அடிப்படைக் காரணமும் அதுவேயாகும். 1938

முதல் 1967 வரையிலான காலக்கட்டங்களில் பல்வேறு கட்டங்களாக மொழிப்போர்ச் சூழல் தமிழ்நாட்டில் நிலவியமை அனைவரும் அறிந்த ஒன்றே. இக்காலக்கட்டத்தில் பலர் சிறை சென்றனர்; பலர் தம் இன்னுயிரைத் தியாகம் செய்தனர். இதனை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றமே ஏற்பட்டது. ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர் பேரறிஞர் அண்ணா முதலமைச்சரானதும் ஜனவரி 23, 1968இல் கொண்டுவந்த இருமொழிக் கொள்கை தீர்மானமே மொழிப்போரின் முடிவாக அமைந்தது.

இந்தியை எதிர்த்து நடந்த இம் மொழிப்போரில் தமிழின் தொன்மை குறித்தும் வளமை குறித்தும் எளிய மக்களிடமும் பேசி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய தேவை அக்கால அரசியல் இயக்கங்களுக்கு இருந்தது. அதற்குச் ‘செவ்வியல் பனுவல்களை மீட்டெடுப்பதே சிறந்த வழி’ எனும் கருத்தியல் ஆழமாக வேரூன்றியது. குறிப்பாக தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு, கலித்தொகை, சிலப்பதிகாரம் போன்ற நூல்கள் அரசியல் இயக்கத் தலைவர்களால் பரவலாகப் பொதுமக்களிடம் எடுத்துச் செல்லப்பெற்றன. அக்காலக்கட்டத்தில் இருந்த பெரும் புலமையாளர்களின் பதிப்புகள் அனைத்தும் தமிழறிஞர்களால் மட்டுமே வாசிக்கக் கூடியனவாக இருந்தன. இந்தச் சூழலில்தான் எளிய, உழைக்கும் மக்களையும் மொழிப்போராட்டத்தில் பெருமளவில் பங்குபெற்ற மாணவர்களையும் கருத்தில் கொண்டு செவ்விலக்கியங்களுக்கான வசன நூல்களும் தெளிவுரைகளும் உருவாக்கப்பெற்றன. வசன நூல்களின் உருவாக்கத்திற்கு ந.சி.கந்தையா முன்னோடி என்றால் மாணவர்களை மையமிட்ட தெளிவுரைகளுக்கு புலியூர்க்கேசிகன் முன்னோடியாகத் திகழ்கிறார். இந்தப் பின்னணியில்தான் இவர்தம் உரைகள் தோற்றம் பெறுகின்றன.

1948இல் நிகழ்ந்த இந்தி எதிர்ப்புப் போரில் நேரடியாகக் கலந்து கொண்டவர் புலியூர்க்கேசிகன். ஏற்கனவே அச்சகத்துறையில் இருந்த அவருக்குத் தெளிவுரைகள், வசனங்களின் தேவை குறித்த புரிதல் உருவாகியதில் வியப்பேதும் இருக்காது. இதனடிப்படையிலேயே, மொழிப்போராட்டக் கள அனுபவப் பின்னணியில் இவர்தம் தெளிவுரைகள் உருவாகியிருக்கின்றன. இவர் முதன்முதலில் வெளியிட்ட தொல்காப்பியம், கலித்தொகை, புறநானூற்றுத் தெளிவுரைகள் வெளிவந்த ஆண்டுக்குறிப்பும் (1958) இதனைத் தெளிவுபடுத்துகிறது. இப்பின்புலத்தை அறிந்துதான் அக்காலக்கட்டப் புலமையாளர்கள், ‘எளிமையாக எழுதுவது செவ்வியல் பனுவலின் ஆழத்தைக் குறைப்பதைப் போன்றது’ எனும் கருத்தியலை உருவாக்கித் திட்டமிட்டு இவர் உரையைப் புறந்தள்ளியிருக்கின்றனர்; இன்றுவரை புறந்தள்ள வைத்திருக்கின்றனர். பெரும்புலமையாளர்களின் செயல்பாடு எளிய மக்களை மையமிட்டு அமையாத சூழலில் இவர்தம் செயல்பாடுகள் எளிய மக்களையும் இளந்தலைமுறையினரையும் மையமிட்டதாக அமைந்ததே அதற்கான முதன்மைக் காரணம் எனலாம். மற்றொரு காரணத்தையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

அக்காலப் பெரும்புலமையாளர்கள் சமஸ்கிருதக் கருத்துகளோடு தமிழை ஒப்புமைப்படுத்தி, ‘சமஸ்கிருதக் கருத்தியல் போல் தமிழ்க் கருத்தியல் உள்ளது’ என்பதாகப் பேசும் இயல்புடையவராகவும் எளிய மக்களுக்குப் புரியாமல் எழுதுவதே நல்லது எனும் கருத்துடையவராகவும் பெரும்பாலும் திகழ்ந்தனர். இத்தகு இயல்புடையோருக்கு எளிய மக்களை மையமிட்டு உரை எழுதுவதென்பது எரிச்சலைத் தந்திருக்கத்தான் செய்யும். அச்சுப் பதிப்பியல் பின்புலத்தில் இருந்த புலியூர்க்கேசிகனுக்கு இது நன்கு புரிந்திருக்கும். அக்காலப் பெரும்புலமையாளர்களாகத் திகழ்ந்தவர்கள், எளிய மக்களுக்கும் மாணவர்களுக்கும் புரியும் வகையில் எளிய நடையில் தம் உரைகளை உருவாக்கி இருப்பார்களேயானால் புலியூர்க்கேசிகன் எனும் உரையாளர் தோன்றவேண்டிய தேவை இருந்திருக்காது. தெளிவுரையாளர் புலியூர்க்கேசிகனின் தோற்றத்திற்கு அடிகோலியது அக்காலப் பெரும்புலமையாளர்களின் செயல்பாடும் மொழிப்போராட்டமுமே என்றால் அது மிகையன்று. இந்தப் பின்னணியில்தான் எளிய நடையில் தம் தெளிவுரைகளை வெளியிடுகிறார் புலியூர்க்கேசிகன். எளிய நடையில் எழுதினாரே அன்றித் தம் புலமையைக் கைவிட்டாரில்லை. எளிமை, புலமை இரண்டும் இவர்தம் நெறிகளாயின. புலமைத்துவ உதவியுடன் எளிமையாக்கத்தைக் கருத்தில் கொண்டு, அனைவருக்கும் தமிழறிவை ஊட்டுவதைக் கருத்தில் கொண்டுதான், ‘இவர் உரை பிழையானது; தவறானது; படிக்கக் கூடாதது’ என்பன போன்ற கருத்துகள் பெரும்புலமையாளர்களால் திட்டமிட்டு உருவாக்கப் பெற்றிருக்க வேண்டும்.

எளிய மக்கள், போராட்டக்கள மாணவர்கள் எளிதில் தமிழறிவு பெறுவதை விரும்பாத இந்த நிலை அக்காலத்தில் இருந்ததை மற்றொரு சான்றுவழியும் விளக்கலாம். சந்தி பிரித்துத் தமிழ் இலக்கியங்களை வெளியிட்டவர் மர்ரே எஸ்.இராஜம். இவரின் பதிப்பு முயற்சிகளுக்கு உறுதுணையாய் இருந்தவர் பேராசிரியர் எஸ்.வையாபுரியார். எளிய மக்களையும் மாணவர்களையும் கவனத்தில் கொண்டு உருவாக்கப்பெற்ற அப்பதிப்புகளையும் அக்காலப் பெரும் புலமையாளர்கள் வெறுத்தனர்; எதிர்த்தனர். இதனை சிலம்புச் செல்வர் ம.பொ.சி. பின்வருமாறு பதிவு செய்கிறார்.

“மர்ரே அண்டு கம்பெனியார் சிலப்பதிகாரம், மணிமேகலைப் பதிப்புகளை வெளியிட்ட விழாவில் பேசிய பெரும்புலவர் ஒருவர் இந்த மாதிரி சந்திபிரித்து

வெளியிடும் பதிப்புகளைப் பார்க்கவே என் மனம் சங்கடப்படுகிறது என்றார். அவரது கருத்தை மறுத்து நான் பேசியபோது, இரண்டாயிரமாண்டுகளாக என்போன்ற சாமானியர்களைச் சந்தியில் நிறுத்திச் சங்கடப்படுத்தியது போதாதா? சந்திபிரித்து வெளியிட்டால்தானே சங்கதி புரிகிறது என்று கூறினேன். அவையில் பெருத்த கைதட்டல் ஆரவாரம் எழுந்தது. இதனால் சந்திபிரித்து வெளியிடுவதை மக்கள் வரவேற்கிறார்கள் என்பது மேடையிலிருந்த புலவர்களுக்குப் புரிந்தது."[4]

இப்பதிவு அக்காலச் சூழலில் நிலவியிருந்த எளிய முறைப் பதிப்பு, உரைகளுக்கான தேவையை வலியுறுத்துகிறது. இவற்றுள், எளிய முறையிலான மலிவு விலைப் பதிப்புகளை மர்ரே அண்டு கம்பெனியார் வெளியிட்டனர் என்றால், எளிய முறையிலான தெளிவுரைகளைப் புலியூர்க்கேசிகன் எழுதி வெளியிட்டார். இந்தப் பின்னணியில்தான் புலியூர்க்கேசிகன் உரைகள் தோன்றியுள்ளன. அவை புறந்தள்ளத்தக்கனவா என்பதை நாம்தான் முடிவு செய்ய வேண்டும்.

## உரை இயங்கியல்

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்குபெற்றவர், தனித்தமிழ் இயக்கத்தந்தை மறைமலையடிகளாரின் மகள்வழிப் பேத்தியைத் (நீலாம்பிகை அம்மையாரின் மகள் சுந்தரத்தம்மையார்) திருமணம் செய்து கொண்டவர், கவிமணி, ந.மு.வேங்கடசாமியார், மறைமலையடிகள், திரு.வி.கலியாணசுந்தரனார், மு.வரதராசனார் முதலானோரின் உதவிவழித் தமிழ்ப்புலமையை வளர்த்துக் கொண்டவர் எனத் தனித்தமிழோடு தொடர்புடைய இவர் உரையில் பிறமொழிக் கலப்பைக் காணமுடிகிறதே என்று கூறுவோரும் உண்டு. பிறமொழிக் கலப்பு அங்கொன்றும் இங்கொன்றுமாக இருப்பது உண்மைதான். அக்கலப்புகள் 'கதிரவன், ஆரவாரம், ஆபரணம்' முதலான எளிய மக்களுக்கு நன்கு புரியும் சொற்களாகவே அமைகின்றன. இவற்றையும் போகிறபோக்கில் எழுதுகிறாரே ஒழியத் திட்டமிட்டு அவர் எழுதவில்லை. இச்சொற்களை வேறுசில இடங்களில் தனித்தமிழ்ச் சொற்களாகப் பதிவு செய்வதையும் பார்க்க முடிகிறது.

புலியூர்க்கேசிகன் தெய்வ நம்பிக்கை உடையவர். ஆனால், வருணாசிரமத்திற்கு எதிரானவர். தம் உரைவழி அதையும் வெளிப்படுத்தி உள்ளார். அகநானூற்றுக் கடவுள் வாழ்த்துப் பாடலுக்குச் 'சிவபிரான் வாழ்த்து' என்று தலைப்பிட்டுத் தம் தெய்வ நம்பிக்கையைப் பதிவு செய்யும் இவர், "பசைகொல் மெல்விரல் பெருந்தோள் புலைத்தி" (அகம்.34:11) என்பதற்கு உரையெழுதும் போது, "ஆடை ஒலிப்பவள்" என்று பொருள் குறிக்கிறார். அவரின் சமகாலத்தில் வாழ்ந்த பெரும்புலமையாளரான சி.கணேசையரும் உ.வே. சா. பதிப்பின் வழி வெளியிடப்பெற்றுள்ள மயிலம் வே.சிவசுப்பிரமணியன் பதிப்பின் பொழிப்புரைகாரரும் இதற்கு, "ஆடை ஒலிக்கும் வண்ணாத்தி" என்று பதிவு செய்கின்றனர். இதேபோல், "வல்லோன் பொறியமை பாவையின்" (அகம்.98:19-20) என்பதற்கு ராஜகோபாலார்யனும் மயிலம் வே.சிவசுப்பிரமணியன் பதிப்பின் பொழிப்புரைகாரரும், "பொறியமைக்க வல்லவன் அமைத்த சூத்திரப்பாவை போல" என்று உரை குறிக்க புலியூர்க்கேசிகன், "வல்லோன் ஆட்டும் பொறியமைத்த பாவை போல" என்று பொருள் தருகிறார். இக்கருத்துகளுள் எது இயல்பானது? எது புறந்தள்ளத்தக்கது? என்பதை நாம்தான் முடிவு செய்யவேண்டும்.

இதுபோன்று எளிய மக்களின் பக்கம் நின்று தம் தெளிவுரையை அமைத்ததால்தான் அக்காலப் பெரும்புலமையாளர்களாகத் திகழ்ந்தவர்கள் இவர் உரையைப் பொருந்தாவுரை எனக் கூறி, அவ்வுரைகளின் வாசிப்பையும் பரவலாக்கத்தையும் தடை செய்திருக்கின்றனர். நாமும், 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்பதற்கேற்றவாறு குருட்டு நம்பிக்கையோடு இன்றுவரை அதைப் பின்பற்றித் தவறான கருத்துகளை, பொருள் புரியாது பரப்பிக் கொண்டிருக்கிறோம். இதில் வேடிக்கை என்னவெனில் தம்மை இடதுசாரிகளாகக் கருதும் பேறறிஞர்களும்கூட எளிய மக்களின் பக்கம் நின்ற புலியூர்க்கேசிகனை ஏற்பதில்லை. மேலும், எளிய மக்களைக் கருத்தில்கொண்டு, பொருள் மாற்றம் ஏதும் செய்துவிடாமல் செவ்வியல் பனுவல் முதலான அனைத்திற்கும் உரையெழுதிய அவர்தம் எழுத்துகளை, 'பரமார்த்த குருகதை போன்றவை' என்றும் எள்ளி நகையாடுவதும் வேதனைக்குரியதாகிறது. அவரின் நூற்றாண்டு நிறைவிலாவது, 'புலியூர்க்கேசிகன் உரை பொருந்தாவுரை; அதைப் புறந்தள்ள வேண்டும்' என்போரின் கருத்துகளைப் புறந்தள்ளி விழிப்புடன் செயல்படுவது நமது கடமையாகும்.

## குறிப்புகள்


1. லோகேஸ்வரன் ம., பரிபாடல் - பதிப்பு வரலாறு *(1918 - 2010)*, ப. Xi
2. பரமசிவன் மா., அகநானூறு: களிற்றியானை நிரை - உரைவேறுபாடு, ப. 94
3. புலியூர்க்கேசிகன் (உரை.), அகநானூறு - களிற்றியானை நிரை தெளிவுரை, ப. 3
4. முனீஸ்மூர்த்தி மு., உரையாசிரியர்களின் செவ்வியல் நோக்கு, ப. 73


●


கட்டுரையாளர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை.




# பண்டைய நோயறி நுட்பங்கள் - அறிமுகம்

**முனைவர் ஜா.திரிபுர சூடாமணி**

நோய் நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல் என்பது வள்ளுவர் வாக்கு. இதில் குறிப்பிட்டுள்ள நோய் நாடும் செயலே, மருத்துவரின் முதன்மையான பணியாகும். நோய் நாடுவதற்குப் பல முறைகள் இருக்கின்றன. நோய் நிதானம் என்ற நோய் நாடல் துறையில் சித்தர் அகத்தியர் இயற்றிய ஒரு தொன்மையான நூல் "சூடாமணி கயிறு சூத்திரம்" என்ற 'மணிக்கடை நூல்'. இந்த சாஸ்திரத்தில், ஒரு மனிதனின் விரற்கடையைப் (விரல்அளவு) பயன்படுத்தி எப்படி நோய்களைக் கணிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது .

ஒன்றை நான்காகப் பிரித்தால் அதில் நான்கில் ஒரு பங்கு கால் என்றும் பாதியாகப் பிரித்தால் அரை என்போம் அல்லவா? அதே போல் உடலின் கால் பாகத்திற்குக் கால் என்றும் அரைப்பகுதிக்கு அரை என்றும் எவ்வளவு நுணுக்கமாகப் பெயர் வைத்துள்ளனர் நமது முன்னோர்கள். தொல்காப்பியத்தில் அளவு குறித்தப் பெயர்களான தூணிப்பதக்கு, நாடுரி (நாழி, உரி) போன்ற அளத்தல் கருவிகளும், 'எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்' 'சாண் நீண்டால் தான் முழம் நீளும்'ஆற்றில் போட்டாலும் அளந்து போட வேண்டும் என்ற பழமொழிகளும், 'உண்பது நாழி உடுப்பவை இரண்டே' என்று வழங்கப்படும் இலக்கிய வரி வழங்கப்படுவதும் அளவு குறித்து பண்டைய தமிழர்களின் அளவு குறித்த அறிவு கருதத்தக்கது. தமிழர்களின் கணித அறிவு அபரிமிதமானது. கணக்கதிகாரம் என்ற நூல் தமிழில் உள்ளது. அதில் நம் முன்னோர்கள் கீழ்க்கண்டவாறு அளவைகளைக் குறித்துள்ளனர்

மேல்வாயிலக்கம் அலகுகள்
மேல் அரை. (அரை)
மேற் கால் கால்
மேல் அரைக்கால் அரைக்கால்
மேல் வீசம் வீசம்
¾ முக்கால்
½ அரைக்கால்
1/4 கால்
நாலு மா
3/16 மூன்று வீசம்
3/20 3 மா
1/8 அரைக்கால்
1/10 இருமா
1/16 மாகாணி (வீசம்)
1/20 ஒரு மா
3/64 முக்கால் வீசம்
3/80 முக்காணி
1/32 அரை வீசம்
1/40 அரைமா
1/64 கால்வீசம்
1/80 காணி
3/320 அரைக்காணி முந்திரி
1/160 அரைக்காணி
1/320 முந்திரி
கீழ்வாயிலக்கம் அலகுகள்
1/640 கீழரை
1/280 கீழ்க்கால்
1/2560 கீழரைக்கால்
1/5120 கீழ் வீசம்
1/102400 கீழ்முந்திரி
1/1075200. இம்மி
1/23654400. மும்மி
1/165580800. அணு
1/1490227200. குணம்
1/1451136000. பந்தம்
1/44706816000. பாகம்
1/312947712000. விந்தம்
1/5320111104000. நாகவிந்தம்
1/74481555456000. சிந்தை
1/489631109120000. கதிர்முனை
1/9585244364800000. குரல் வளைப் படி
1/575114661888000000. வெள்ளம்
1/57511466188800000000. நுண்மணல்

**எண் கூற்று வாய்ப்பாடு**

| | |
|---|---|
| ஒரு இம்மி. | 11 மும்மி |
| 11 மும்மி. | 7 அணு |
| ஒரு அணு. | 9 குணம் |
| ஒரு குணம். | 5 பந்தம் |
| ஒரு பந்தம் | 6 பாகம். |
| ஒரு பாகம் | 7 விந்தம் |
| 7 விந்தம் | 17 நாகவிந்தம் |
| ஒரு நாகவிந்தம் | 60 குரல்வளைப்படி |
| ஒரு குரல்வளைப்படி | 60 வெள்ளம் |
| ஒரு வெள்ளம். | 100 நுண்மணல் |

*இவற்றை நோக்கும்போது தமிழர்கள் அளவு குறித்த அறிவை எவ்வளவு நுணுக்கமாகப் பெற்றிருந்தனர் என்பதை அறியலாம்.*

*அளவைப்பற்றிய அறிவோடு மட்டுமல்ல, அளவினால் நம் உடலில் வந்துள்ள வரப்போகும் நோயைப் பற்றியும் அளக்கும் [அறியும்] அறிவியல் அறிவையும் பெற்றிருந்தனர். அதன் ஒரு அடையாளமே அகத்தியரால் எழுதப்பட்ட சூடாமணி கயிறு சூத்திரமாகும். இன்றைக்கு மனிதனின் நோயைக் கண்டுபிடிக்க எவ்வளவோ அளவை முறைகள் வந்துவிட்டன. ஆனால் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னே மிக எளிமையாக எடுத்துரைத்த பாங்கு சிறப்பிற்குரியது.*

**சொல் விளக்கம்;**

*மணி: மணிக்கட்டு கடை: அளவு நூல்: புத்தகம், மணிக்கடை அளவு பற்றி சொல்லப்படும் நூல் சூடாமணி: தலை சிறந்த மணி, மதிப்புமிக்க பொருள்.*

**கயிறு:**

*விரற்கடை அல்லது விரல் அளவு எடுக்க பயன்படுத்தும் நூல் / கயிறு.*

**சூத்திரம்:**

*விதிமுறை சாஸ்திரங்கள், நுணுக்கம். சூடாமணி கயிறு சூத்திரம் என்பது சித்த மருத்துவத்தில் ஒரு பழமையான நோயறிதல் மற்றும் முன்கணிப்பு முறையாகும். இந்த நூல் அளவீடுகளைப் (விரற்கடை) பயன்படுத்தி நோய்களைக் கண்டறியும் முறைகளை விளக்குகிறது.*

**இலக்கியத்தின் அதிகாரம்:**

*பாரம்பரிய குறிப்புகளின்படி, இந்த அறிவியலின் அறிவு, ஆதி குருவான சிவனிடமிருந்து முனிவர் அகத்தியருக்குக் கொடுக்கப்பட்டது. பரம்பரை பரம்பரையாக இது பகிரப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது. மிகு பழமையான சித்த வைத்தியத்தில் புகழ்பெற்ற முனிவரான அகத்தியர், மருத்துவம், ஜோதிடம், ரசவாதம், யோகம் மற்றும் ஆன்மீக அறிவியல், தற்காப்புக் கலை போன்ற 100க்கும் மேற்பட்ட வெவ்வேறு துறைகளில் பாடல்களை இயற்றியுள்ளதால் இவர் சித்த மருத்துவத்தின் தந்தையாகக் கருதப்படுகிறார்.*

**நூற் - குறிப்பு:**

*இந்த நூல் தனியாகக் கிடைக்கவில்லை, மேலும் சில பாரம்பரிய தமிழ் மருத்துவ நூல்களில் குறிப்பிட்ட*

பாடமாக சேர்க்கப்பட்ட சிறப்பு அத்தியாயமாக விவரிக்கப்பட்டுள்ளது. சூடாமணி கயிறு சூத்திர நூலில், சிவபெருமான் அகத்தியருக்கு உரைத்ததாக 30 பாடல்கள் அமைந்துள்ளன.

**இலக்கண நடை மற்றும் நூல் அமைப்பு:**

**யாப்பு - வடிவம்:**

நால்வகைப் பாக்களுள் மிகவும் பழமையானதும் இயல்பானதும் ஆன ஆசிரியப்பா வகையில் ஒன்றான நிலைமண்டில ஆசிரியப்பாவினால் இந்நூல் அமைந்துள்ளது. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று ஒவ்வொரு பாடலும் நான்கடியில் அமைந்து தம்முள் அளவொத்து வந்துள்ளது. ஒவ்வொரு பாடலிலும் அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி அடியெதுகை பெற்று வந்துள்ளது. பத்தாம் பாடல் மட்டும் இவ்வகையில் அமையாமல் இரண்டடியால் ஆக்கப்பட்டுள்ளது.

**இலக்கியத்தின் காலம்:**

சங்க இலக்கியத்திலேயே நிலைமண்டில ஆசிரியப்பா வகையில் பாடல்கள் அமைந்துள்ளன. தொல்காப்பியரும் பாவகை பற்றிக் குறிப்பிடும் பொழுது ஆசிரியப்பாவை முதலில் குறிப்பிடுகிறார். அதனால், அதற்கு முந்தைய காலத்திலேயே இப்பாவகைப் பயின்று வந்திருப்பதிலிருந்து இப்பாவகையின் பழமையை அறியலாம். பழமையான பாவகையில் இந்நூல் அமைந்துள்ளதால் இந்நூலின் காலமும் முற்பட்டதாக இருக்க வேண்டும்.

**நூலின் முக்கிய உள்ளடக்கம்:**

இந்த நூல் 5 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது, அறிமுகப் பகுதி, வழிமுறை, குணப்படுத்தக்கூடிய விரற்கடை அறிகுறிகள், குணப்படுத்த முடியாத விரற்கடை அறிகுறிகள் மற்றும் முடிவுப் பகுதி. அறிமுகப் பகுதியானது காப்பு எனப்படும் இலக்கிய வணக்கத்தை விவரிக்கும் இரண்டு செய்யுள்களைக் (பாடல்) கொண்டுள்ளது. இதில் வேடமுனியான சிவபெருமான் அகத்தியருக்கு அருள்செய்தது மணிக்கடை நூல் என்று குறிப்பிட்டுள்ளது. காப்புப் பாடலின் இரண்டாம் பாடல் சிவன் மகனான விநாயகப் பெருமான் இந்நூலிற்கு அருள வேண்டும் என்று வேண்டுவதாக அமைக்கப்பட்டுள்ளது. மூன்றாம் பாடலில் மணிக்கடை நூல் வாயிலாக எவ்வாறு நோய் அறிய வேண்டும் என்பதைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது. நான்காம் பாடலிலிருந்து இருபத்தியொன்பதாம் பாடல் வரை மணிக்கடையில் இருந்து நான்கு விரற்கடை தள்ளி அளக்கும்போது பதினொன்று விரற்கடையிலிருந்து நான்கு விரற்கடை வரை கால் கால் பகுதியாக பிரித்து அந்தந்த அளவுகள் வரும்போது ஒரு மனிதனின் உடலில் என்னென்ன நோய்க்கூறுகள் இருக்கும் என்பதை ஓரளவு அறிந்து கொள்ளலாம் என்பதைத் தெரிவிக்கின்றது. முப்பதாம் பாடலில் சிறப்புடைய சாஸ்திரத்தில் சூட்சுமமான இந்தச் செய்தியை உலகத்தில் உள்ளோர் நோய் குணங்களை அறிய வேண்டி சிவனே உரைத்ததாக அறிய வேண்டும் என்று நூலின் முடிவு கூறப்பட்டுள்ளது.

இந்நூலில் குறிப்பிடப் பெற்றுள்ள அளவைகள் குறித்துக் கீழ்க்காணும் அட்டவணை தெளிவாக விளக்குகிறது.

**தொற்று நோய்களைக் குறிக்கும் விவரங்கள்**

| S.No | விரற்கடை | நோய் குணங்கள் |
|---|---|---|
| 1 | 9 ½ | சுரத்துடன் மேக நோய் குறிகள் |
| 2 | 9 ¾ | புரைகள்,அரையாப்பு |
| 3 | 8 1/4 | பிரமியம், சுரம் |
| 4 | 8 ½ | வெட்டை ரோகம் |
| 5 | 73/4 | கண்டமாலை |
| 6 | 71/2 | எலும்புருக்கி நோய் |
| 7 | 7, 6 | கய நோய் (க்ஷயம் ) |
| 8 | 61/4 | மூல கிராணி |

**துணைநூல்கள்**


1. கந்தசாமி முதலியார். ஆத்ம ரட்சாமிர்தம்,வைத்திய சரசங்கிரகம் - பகுதி -1. இந்திய மருத்துவத் துறை மற்றும் ஹோமியோபதி துறை; 2010. 3 வது பதிப்பு,சென்னை
2. டாக்டர்.எம்.சண்முகவேலு. நோய் நாடல் நோய்முதல் நாடல் திரட்டு - பகுதி 1. இந்திய மருத்துவத் துறை மற்றும் ஹோமியோபதி துறை; 1 வது பதிப்பு 2009 ,சென்னை
3. டி.வி.சாம்பசிவம் பிள்ளை. தமிழ்-ஆங்கில அகராதி- பகுதி 2. தொகுதி 1-5, 2 வது பதிப்பு.1998 இந்திய மருத்துவத் துறை மற்றும் ஹோமியோபதி துறை சென்னை.
4. வேலுமணி, ஆசிரியப்பா=அகவற்பா இந்திய இலக்கியம் - பன்னாட்டு ஆய்விதழ் இலக்கியம்:1(1), 64-68.
5. கே.என். குப்புசாமி முதலியார். சித்த மருத்துவம்: பொது (தமிழ்). 1வது பதிப்பு. 2012: இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை;சென்னை
6. கணக்கதிகாரம், தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகம், 1998.


●


கட்டுரையாளர், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
தர்மமூர்த்தி இராவ்பகதூர்கலவல கண்ணன் செட்டி
இந்துக்கல்லூரி, பட்டாபிராம், சென்னை-72



KAAVYA TAMIL (QUARTERLY) April 2024 - September 2024
Regd No : TN TAM 8012 / 43610
2024 தமிழ்நாடு அரசின்
இலக்கிய மாமணி விருதும்
சிறந்த நூலுக்கான பரிசும்
பேராசிரியர் காவ்யா சண்முகசுந்தரம்
GOVERNMENT OF TAMIL NADU
தொடர்புக்கு
044 - 23726882
98404 80232
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
50&51
ஆடி
ஏப்ரல் 2024–செப்டம்பர் 2024
மலர் 13 இதழ் 2
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
விலை ₹ 200
காவ்யா
தமிழ்
கலை, இலக்கியம், பண்பாட்டு பன்னாட்டுக் காலாண்டிதழ்
பொதுவுடைமை ஒளி
தி.க.சி.
100
கி.ரா.
ஜெயமோகன்
திராவிட ஒளி
கலைஞர்
101
கவி. காமுஷெரீப்
கருவூர் கன்னல்
தமிழ் ஒளி
விசயரங்கம்
100
க.பஞ்சாங்கம்
கவிஞர் ரவிக்குமார்
புதுவை யுகபாரதி

கட்டுரை



# கவிதைகளில் சாதியத் தாக்கம்

முனைவர் இர.சாம்ராஜா

அதியன் ஆதிரையின் 'அப்பனின் கைகளால் அடிப்பவன்' எனும் இந்நூல் கடந்த பத்து ஆண்டுகளாக எழுதப்பட்ட கவிதைகளின் முழுத் தொகுப்பு என்பதை ஆசிரியரே முன்னுரையில் குறிப்பிடுவதன் மூலம் அறிய முடிகிறது. தலித் வாழ்வியலையும், விடுதலையை ஒரு தலித் படைப்பாளரே பேசுவது என்ற வகையில் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலின் தொடக்கத்தில், "உன் / கருப்பு நிறத்தை / ஒரு போர்வை போல் போர்த்தாமல் / ஒரு போர்க்கொடி போல் உயர்த்திப் பிடி" (ப.3) எனும் ஆப்பிரிக்கக் கவிதையை முத்தாய்ப்பாய்த் தந்திருப்பது கவிஞரின் போர்க்குணத்தை வெளிப்படுத்தியுள்ளது.

காலம் காலமாய்ச் சாமிகள் உருவாக்கப்படுவதைக் கவிஞர் தம் கவிதையின் வழியாகக் காட்டமாகவே வெளிப்படுத்தியுள்ளார். "சாராயம் / கருவாடு / சுருட்டு / ஆடு / மாடு / பன்னி / கோழியெனப் பலியிட்டு / இன்று / என்னைப் போலவே / நீயும் வணங்குகிறாய் / என் பாட்டன்களான / மதுரை வீரன் / இருச்சி / காத்தவராயன் / நந்தன் என / அன்று / உன் பாட்டனுக்கெதிராய் / அடங்க மறுத்து / அத்து மீறியதால் / பழிவாங்கப்பட்டவர்கள் / சாமிகளானார்கள் / இன்று கழுத்தறுந்தும் / மலம் தின்னும் / உன்னோடு / சண்டையிடும் / நாங்கள் யார் தெரியுமா / உன் / பிள்ளைகளின் சாமிகள்." (பக்.19,20)

அன்றும் இன்றும் ஆதிக்க சாதியினரால் கொலை செய்யப்படுபவர்கள் குலசாமியாய் மாறிப்போனதற்கு ஆறு.இராமநாதனின் 'இன்னொரு குலசாமி' சிறுகதை உள்ளிட்ட எத்தனையோ கதைகள் இன்றும் சாட்சிகளாய் இருப்பதை இக்கவிதை நினைவூட்டுகிறது. வானளாவிய நிலையில் அறிவியல் வளர்ச்சி அடைந்திருக்கும் இக்கால கட்டத்தில் சுடுகாடு இல்லாத நிலையை, "வான்வழி / தரைவழி / நீர்வழி / சண்டையிடும் உலகில் / வழியில்லாமல் தவிக்கிறோம் / சுடுகாட்டிற்கு." (ப.31) என்று சுடுகாடு இன்றி இன்றும் பல கிராமங்கள் உள்ள நிலையைக் கவிஞர் ஆதங்கத்துடன் பதிவு செய்கிறார்.

**சாதிய எண்ணம்**

சந்திரனைப் போலவே செவ்வாய்க்கும் மனிதன் சென்று வர முயற்சித்துக் கொண்டிருக்கும் இதே காலத்தில்தான் சாதியத்தால் சக மனிதனை நோகச் செய்யும் நிலையும் நிலவுகிறது. அப்பாவின் மீது குத்தப்பட்ட சாதி முத்திரை அதே பார்வையில் தன் மீதும் அதிகமாகவே குத்தப்படுகிறது என்கிறார் கவிஞர். "எப்போதாவது / ஒரு முறைதான் / நீயே / என்னை அடிப்பாய் / ஆனால் / நீ / அடிக்கடி அடிப்பது / என் / அப்பனின் கைக்கொண்டுதான்." (ப.17) என்பதில் தலைமுறை தலைமுறையாக சாதியம் ஏற்படுத்தும் பாதிப்பை கவிஞர் முதற் கவிதையிலேயே வெளிப்படுத்தியுள்ளார்.

ஒரு மனிதன் எந்தச் சாதியைச் சேர்ந்தவன் என்பதை அறிந்துகொள்ள சாதிய எண்ணம் கொண்ட மனிதர்கள் எவ்விதமாகப் பேசுவர் என்பதைத் தம் கவிதையில் வெளிப்படையாகக் கவிஞர் பதிவு செய்கிறார். "பெயரையும் / ஊரையும் / சொன்ன பிறகும் / நீ / துரைச்சாமிக் கவுண்டருக்கு / என்ன வேண்டும் / வேலு முதலியாருக்குப் / பக்கத்து வீடா / தேரடிக்கு எதிர்த் தெருவா / அல்லிக் குளத்திற்கு மேல் தெருவாயெனக் / கேட்ட / அனைத்துக் கேள்விகளுக்கும் / இல்லையென்றதும் / முகத்தைச் சுருக்கி / நீ / அப்போ என நீளும் / அவன் ஆய்விற்கு / முற்றுப்புள்ளியாய் / பறச்சேரி யென்றேன்." (ப.34) தற்போதும் இதுபோன்ற கேள்விகளை எழுப்புபவர்களுக்கு பட்டென்று நெற்றிப் பொட்டில் அடித்தது போல் கவிஞர் பதில் அளித்துள்ளார் என்றே இக்கவிதையைக் கொள்ளலாம்.

பல்வேறு இன்னல்களுக்குப் பின் நகரத்தில் வாழ முற்படும் மனிதர்கள் சாதியத்தைப் பொருத்திப் பார்க்கும் நிலைக்குச் சான்றாக நிகழ்வொன்றைக் கவிஞர் கவிதையாக்குகிறார். "முன்புபோல் / அடிக்கடி வர முடியாமல் போன / பக்கத்து வீட்டுக்காரர்களைப் / பற்றி அறிய / காரணங்கள் பல இருந்தும் / முதற் காரணம் / இப்படித்தான் தோன்றுகிறது / தெரிந்து இருக்குமோ / என் சாதி." (ப.35) என்பதில் சாதியால் மனிதனுக்குள் ஓடும் எண்ணவோட்டம் புலப்படுத்தப்பட்டுள்ளது.

**தீண்டாமையும் அடிமைநிலையும்**

அடிமை என்னும் சொல்லிற்கு சிறை, தொண்டன் எனப் பொருள்கள் கூறப்படுகின்றன. தீண்டாமை என்பது அடிமை முறையின் இந்திய வடிவம் என்றார் அம்பேத்கர். இது இந்தியநாடு குறித்த அம்பேத்கரின் பார்வையைக் காட்டுகிறது. அடிமைநிலை குறித்து ஆ.சிவசுப்பிரமணியன் தன் கருத்தைப் பின்வருமாறு பதிவு செய்துள்ளார். "அமிஞ்சி, அடிமை, அடியான், மூப்படியான், படியாள், பண்ணையாள், குடிப்பறையன், கொத்தடிமை எனப் பல்வேறு பெயர்களில் தமிழர்களில் ஒரு பிரிவினர் அடிமைகளாய் அல்லல்பட்டு ஆற்றாது அழுது மடிந்த துயர நிகழ்ச்சிகள் மறக்க முடியாத வரலாற்றுண்மைகளாகும். இத்தகைய வரலாறு இன்னும் முடிந்துவிடவில்லை. இன்றும் புதிய வடிவில் பல்வேறு தொழில்களில் அடிமைநிலை நீக்கமற நின்று நிலவுகிறது." (ஆ.சிவசுப்பிரமணியன்.2005)

கோயிலில் நுழைந்ததால் கொலை செய்யப்பட்ட கந்தசாமி பற்றியும், கால் மேல் கால் போட்டு அமர்ந்ததால் கால்கள் தாக்கப்பட்டு நொண்டியாக்கப்பட்ட கோவிந்தன் பற்றியும், குளத்தில் தண்ணீர் எடுத்ததற்காக அடிகள் வாங்கி ஊரை விட்டே ஓடிப்போன பெரியத்தாய் குப்பன் பற்றியும் போகிற போக்கில் கவிஞர் சொல்லிச் செல்கிறார். அம்பேத்கர் காலம் தொட்டு பள்ளி வகுப்பறைகளில் நிலவிய சாதியப் பாகுபாடு கவிஞரின் பள்ளிக் காலத்திலும் நிகழ்ந்துள்ளது என்பதைக் கவிதையின் வழி அறிய முடிகிறது. குறிப்பாக, நாராயணசாமி வாத்தியார் உணவு முறையின் வழி சாதி குறித்து ஏளனமாகப் பேசியதும், தெருவைக் குறிப்பிட வைத்து வேதாச்சலம் வாத்தியார் ஏளனப்படுத்தியதும், சங்க இலக்கிய பரத்தையர் வீட்டை இன்றைய பறைச்சி வீடு என இலட்சுமி அம்மாள் கேவலமாகச் சித்தரித்ததும் வகுப்பறையின் பாகுபாட்டு அவலங்களாகும். இக்கவிதையை நடுநிலைத்தன்மையுடன் அணுகும் எந்தவொரு வாசகனுக்கும் கோபம் பீறிட்டு எழவே செய்யும்.

ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலை பெற்று 70 ஆண்டுகள் கடந்த நிலையிலும், சேரிகளுக்குள் சாதியத்தால் இன்றும் சுதந்திரமற்ற அடிமை நிலையே நிலவுகிறது என்ற அவலத்தை இறப்பின் வழியாகக் கவிஞர் காட்சிப்படுத்துகிறார். "ஊர்த் திருவிழா அன்னைக்குச் / செத்துப் போன / மொட்டை நாக்கு / தாத்தா பொணத்தை / சாமிக்குத் தீட்டுன்னு / சீக்கிரம் / புதைக்கச் சொன்ன / ஊரையும் / சேரியையும் சேர்த்து / புதைக்க முடியாதுடா / நான் ஒப்பாரி வைத்து என் மக்க / ஆடிப் பாடித்தான் / என் மாமனைப் புதைப்பன்னு / சொன்ன / நாவம்மா பாட்டியின்

பிணத்தை / ஊருக்குக் கட்டுப்படாதவனு / ஒதுக்கி வைச்சாங்க / பம்பாய்க்கு / கால்வாய் வெட்டப் போன / மக வரும் வரை / நாறிக் கிடந்த நாவம்மா பாட்டி / பொண நாத்தம் / இன்னும் வீசுகிறது / சேரியின் சுதந்திரக் காற்றாய்." *(பக்.41,42)*

இறப்பில் மட்டும் அல்லாமல் திருவிழா போன்ற கொண்டாட்ட காலங்களில் சேரியின் நிலை எவ்வாறு உள்ளது என்பதையும் கவிஞர் பதிவு செய்துள்ளார். "எங்க ஊர்த் திருவிழா / பதினெட்டு நாள் பாரதம் / ஐந்து நாள் கூத்து / ஆறாம் நாள் தீமிதி / சுத்துப்பட்டு / எல்லா சனமும் / வந்து சேரும் / கூட்டம் கூட்டமாய் / தொலைந்து போகாமல் இருக்க / ஒருவர் கையை / ஒருவர் பிடித்து நிற்போம் / சேரிக்காகக் / குறுக்கே / கயிறும் மயிறும் / இருப்பதை மறந்து." *(பக்.43,44)* என்பதில் தீண்டாமை நிலையினைக் குறிப்பிடும்போது, கவிஞர் தம் உணர்வெழுச்சியால் வசவுச் சொல்லை வெளிப்படுத்தியுள்ளார் என்றே கொள்ளமுடிகிறது.

சாதியத்தால் அம்மா - அப்பா இருவரும் அடிமைகளாக நடத்தப்படுவதை மகனின் நிலையிலிருந்து கவிஞர் காட்சிப்படுத்தியுள்ளார். "வேலைத் தலங்களில் / அம்மாவிற்கு ஏற்படும் / அவமானத்தையும் / உடல் வலியையும் / அப்பாவைப் போய் / ஞாயம் கேட்கச் சொல்வாள் / தினமும் அம்மாவின் முறையிடல் முறையில் / கோபம் / அதிகரித்துக் கொண்டே இருக்கும் / அம்மா / உணர்வதுமில்லை / அப்பா / உணர்த்துவதுமில்லை / செட்டியார் மனைவிக்கு / அப்பாவும் அடிமையென்று." *(ப.60)* தாம் அடிமையாக நடத்தப்படுகிறோம் என்பதை உணராத அம்மாவின் நிலையையும், அதை உணர்ந்தும் ஆணாதிக்க மனோபாவத்தால் உணர்த்த முன்வராத அப்பாவின் சிக்கலான நிலையையும் பதிவு செய்துள்ளார்.

**தாத்தாவும் பறையும்**

பறை எனும் சொல்லிற்குச் சொல்லுதல், அறிவித்தல் எனப் பல பொருள்கள் கூறப்படுகின்றன. இசைக் கருவி என்ற வகையில் பலவகையான தோற்கருவிகளின் பொதுப் பெயராகச் சுட்டப்படுகிறது. மருதையன் குறிப்பிடுவதைப் போல, "முதலில் வினைச் சொல்லாகவும், பின்னர் இசைக் கருவியைக் குறிப்பிடும் பெயர்ச் சொல்லாகவும் இருந்த பறை, சமூக உறவுகளின் இலக்கண விதி மாறியபோது - தீண்டாமை நுழைந்தபோது - பெயர் உரிச்சொல்லாகவும் மாறியது. இழிவு, அழுக்கு, கருப்பு என்ற பொருள் தரும் சொல்லாகவும் பறை மாறியது." *(மருதையன், 2000)* இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் 'பறை இசைக்கருவி - ஓர் ஆய்வு' நூலில் மு.வளர்மதி குறிப்பிடுவதைப் போல, "இந்தியா, இலங்கை தவிர வேறு எந்த நாட்டிலும் பறை எனும் கருவியை இசைத்த மக்கள் தீண்டத்தகாதோர் ஆக்கப்பட்டவில்லை."




அப்பனின் கைகளால் அடிப்பவன்,
அதியன் ஆதிரை, நீலம் பதிப்பக வெளியீடு,
சென்னை.
விலை ரூ. 150

எனவேதான் பறை தம்முள் ஏற்படுத்திய தாக்கம் அதியன் ஆதிரையின் கவிதைகளில் அதிகமாகவே வெளிப்பட்டுள்ளது.

இரவில் ஊரை நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது கேட்கும் பறை ஒலியில் இறந்து போனது யாராக இருக்கும் என்ற பயம் கலந்த எண்ணம் எல்லோருக்கும் ஏற்படுவதைப் போலவே கவிஞருக்கும் ஏற்படுகிறது. அவ்வாறான பயம் மனதைக் கவ்வியதை கவிதைப்படுத்தியுள்ளார். "சிறு சிறு / தூறல்களுக்கிடையே / அதிர அதிர / ஒலித்துக்கொண்டேயிருக்கிறது / பறை / ஈர இருட்டில் / ஊருக்கு வெளியே / தனித்து வரும் எனக்கு / அடுத்தடுத்து விழும் / தூறல்களுக்கிடையே / வந்து விழுகின்றன / முகங்கள்." *(ப.18)* இக்கவிதையின் முடிவில் தூறல் விழுவதைப் போல 'வந்து விழுகின்றன முகங்கள்' என்று கவித்துவமாகச் சொற்கள் விழுந்துள்ளன.

கவிஞரின் தாத்தாவிற்கும் ஆயாவிற்கும் இடையிலான உறவில் பறையும் முக்கியப்பங்கு வகிக்கிறது. பறை வாசிக்கப் போன இடத்தில்

பறை வாசித்தலில் நடந்த அடவுப் போட்டியை அறியாத ஆயாவின் நிலையை கவிதைப்படுத்துகிறார். "பள்ளிக்கூடத்தில் / மாட்டுப் போட்டியில் / பரிசு பெற்று வந்த நாளில் / வெளியூருக்குப் / பறையடிக்கப் போன தாத்தா / ஊர்வலத்தில் / தனக்கும் / வெளியூர்க்காரனுக்கும் / நடந்த / அடவுப் போட்டியை / போதையில் / உளறிக்கொண்டேயிருந்தார் / இப்போட்டியை உணராமலே / கடைசிவரை / மௌனமாய்ச் சென்ற பல பிணங்கள் போலவே ஆயாவும் இருந்தாள்." *(ப.25)* என்பதில் ஆயாவின் பறை குறித்த புரிதலின்மையை அறிய முடிகிறது.

ஆதிமனிதன் இசைத்த கருவியான பறையை அடிப்பதற்காகவே தம் வாழ்வின் பெரும் பகுதியைக் கழித்த தாத்தாவைப் பாட்டி திட்டியதையும், அதற்கான பதிலாக அவரின் உறக்கத்திற்கு முந்தைய உளறலையும், இருவருக்கும் நடுவராக இருந்த பெயரனான கவிஞர் அழகாய்க் கவிதையின் வழி நினைவு கூர்ந்துள்ளார். "எங்கனா / சாவுன்னா போதும் / மோளத்தை தூக்கிகீனு / நாக்கத் தொங்கவுட்டுக்கீனு / கிளம்பிடுறியே / அத குடிக்கிறதை விட / அவன் மூத்திரத்தைக் குடி என்றாள் / குபிர்னு / எழுந்த / தங்கையின் / சிரிப்புக்கிடையில் / பறையை தலைகாணியாய் வைத்துத் / தூங்கிப் போகும் முன் / தாத்தாவின் உளறல் / மங்கலாய்க் / கேட்டுக் கொண்டே இருந்தது / பறையைத் தடவியபடியே / சாராயத்துக்காவடி போறன் / சாராயத்துக்காவடி போறன்னு." *(பக்.46,47)*

மற்றொரு கவிதையில் தாத்தாவின் ஒரே சொத்தாகப் பறை இருந்தது எனக் கவிஞர் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக, என் தாத்தாவிற்கு ஒரு வீடு இருந்தது, யானை இருந்தது, குதிரை இருந்தது, நாற்காலி இருந்தது எனக் கதைகளின் தலைப்பைப் படித்தபோது, கவிஞருக்கு நினைவு வந்ததைப் பின்வருமாறு பதிவு செய்துள்ளார். "என் / தாத்தாவிற்கு இருந்தது / நினைவுக்கு வந்தது / ஒரு / மயிர் புடுங்கிய மாட்டுத்தோலும் / முறுக்கிக் காய்ச்சிய / ஒத்த பறையும்." *(ப.65)*

மேலும் ஒரு கவிதையில் பறை இசைக் கலைஞரான தாத்தா பறை இசைக் கருவியை உருவாக்கும் விதத்தையும், அதற்குத் தாம் செய்த ஒத்தாசையையும் கவிதையின் மூலம் கவிஞர் அழகுறப் பதிவு செய்துள்ளார். "இரத்தம் சொட்டச் சொட்ட / கொண்டு வருவாங்க / செத்த மாட்டுத் தோலை / சின்னச் சின்னதாய் / குச்சி சீவி / இழுத்து அடித்து / அடுப்புச் சாம்பலைத் தூவிவிட்டா / காயும் ரெண்டு நாளைக்கு. / சூரிக் கத்தியால் / முடியெல்லாம் சொரண்டி / வட்டமாய் அறுத்து / தோலை ஊறவைத்தா / ஊறும் பகலெல்லாம் / தினமும் பள்ளிக்கூடம் முடிந்ததும் / நான் ஏரிக்கரையில் / பொறுக்கி வந்த / புளியங்கொட்டையை / வறுத்துக் குத்தி / கூழாய்க் கொதிக்க வைத்து / உதிரித் தோலில் / கயிறு திரித்து / தன் சகாக்களோடு / கதை பேசியபடியே / பறை மூடுவார் / இரவெல்லாம். / மூன்று நாள் கழித்துக் / கொஞ்சம் கொஞ்சமாய்த் / தீயில் காய்ச்சி / உரசி / உரசிப் பதம் பார்த்துக் / கண்கள் பிதுங்க / உடல் முறுக்கேற / மண்ணதிர / அடவு போட்டுப் பிறக்கும் / புதிய பறை. / தன் நினைவு தெரிந்த / நாளில் இருந்து / பறையோடு வாழ்ந்ததாய்ச் / சொல்வாள் ஆயா. / தாத்தா செத்த பிறகு / கோவணமும் சாராயமும் / கறிச்சோறும் / நடு வீட்டில் படைத்தார்கள் / எல்லோரும் கடைசி வரை / மறந்தே போனார்கள்... / பறையை." *(பக்.73-75)* இவ்விதமாகப் பறையை உருவாக்கியும் பறை அடித்தும் வாழ்ந்து மறைந்த தாத்தாவுக்கும் பறைக்குமான உன்னத உறவைக் கவிஞர் தம் கவிதைகளில் வடித்திருப்பதை காணும்போது, தன் வாழ்வனுபவ நிலையில் தாத்தாவும் பறையுமே கவிஞருக்கு அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதை அறிய முடிகிறது.

### சுழியத்திற்குக் கொண்டு வருதல்

தலைமுறை தலைமுறையாக ஆதிக்க சாதியினரை எதிர்த்து நிகழும் போரைக் கவிஞர் கவிதையின் வழி நிகழ்த்துகிறார். "என் அப்பனும் / பாட்டனையும் போலவே / உனக்கெதிரான போரை / சுழியத்திலிருந்தே தொடங்குகின்றேன் / எனக்கான வெற்றியென்பது / உன்னைக் / கொல்வதில் அமைவதில்லை / மீண்டும் / சுழியத்திற்கே / உன்னைக் / கொண்டு வருவதிலேயே / அமைந்து இருக்கிறது." *(ப.52)* என்பதில் ஆதிக்க சாதியின் மீதான கோபமானது தீவிரமாகவே வெளிப்பட்டுள்ளது. இக்கவிப்போரில் ஆதிக்க சாதிக்கு எதிரான போரைச் சுழியத்திலிருந்து தொடங்கி, ஆதிக்க சாதியையும் சுழியத்திற்குக் கொண்டு வருவதே தன் உண்மையான வெற்றி என்கிறார். குறிப்பாக, சுழியத்திற்குக் கொண்டு வருதல் என்பது, சிங்களவர்கள் தமிழரை நோக்கிக் கூறி இனப்படுகொலை புரிந்ததையும், தமிழகம் உட்பட இந்தியாவின் பிற மாநிலங்களிலும் இன்று வரை நிகழ்வதை நினைவு கூர்வதாகவே உள்ளது.

### சாதியமற்ற சமூகம்

கவிஞர் அதியன் ஆதிரையின் மனம் சாதியமற்ற சமத்துவ சமூகத்தைக் காண விரும்பும் மனமாக இருக்க, மறுபுறம் இயற்கையின் அழிவு மீதான அக்கறை உள்ள அளவிற்கு சாதிய ஒடுக்குமுறை குறித்த அக்கறை எள்ளளவும் இல்லை என்பதைக் கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார். மரம் / ஆடு / மாடு / மண் / செடி / கொடிகள் அழிவதைப் பற்றிக் / கவிதை எழுதிவர / சொன்னவனிடத்தில் / சேரிகள் / பற்றி எரிவது பற்றிய / கவிதையைக் கொடுத்தேன் / தலைப்புக்குள் / அடங்காது என்றான் / போடா மசுரு / அனைத்தும் அடங்கும் / சேரிக்குள் என்றேன்." *(ப.54)*

தந்தை மகனுக்குச் சாதிய வலிகளைக் கைம்மாறாக அளிப்பதைக் கவிதையின் வழி ஆதங்கத்துடன்

கவிஞர் கூறியுள்ளார். "உன் ஒவ்வொரு / பிறந்த நாளின்போதும் / எனக்குள் / நீ / இனி வாழப்போகும் / நாட்களைப் பற்றிய / எண்ணங்கள் பிறக்கின்றன. / தினம் தினம் / நீளும் / அரசு சமூக அதிகார வன்முறையில் / நான் / அனுபவித்த வலிகளை நிராகரிப்புகளை / உனக்கு ஒன்றுகூட குறையாமலே / கை மாற்றியே விட்டுச் செல்கிறேன் / உன் தகப்பனாய் / உன் உற்ற தோழனாய் / நீ / மருத்துவராகவோ / பொறியாளராகவோ / அரசு அதிகாரியாகவோ இருக்க / துளியும் விருப்பமில்லை / எனக்கு. / என்னைப் போல் / நீயும் / உன் பிள்ளைக்கு / இவ்வலிகளைக் கை மாற்றாமல் / சக மனிதர்கள் மீது / பேரன்பு கொண்டு / சமூக அவலங்கள் உடைய / பதாகைகளை ஏந்திக் / களமாடும் தோழனாய் / இருப்பாயா என் தோழனே." (பக்.104,105) ஒரு தந்தையாகத் தான் வாழ்ந்த வாழ்வு போல் சாதிய வலியுடன் தன் மகன் வாழாமலும், தன்னைப் போலவே அவனது மகனுக்குக் கைமாறாகச் சாதிய வலிகளைக் கைமாற்றாமல் போராட்ட குணத்துடன் வாழ வேண்டும் என்று சமூக மாற்றத்தை விரும்பும் கவிஞரின் மனதை இக்கவிதையின் வழி காணமுடிகிறது.

**முடிவுரை**

அதியன் ஆதிரை தம் 'அப்பனின் கைகளால் அடிப்பவன்' கவிதை நூலின் வழி, சாதிய அடையாளத்தால் இச்சமூகம் தனக்கு ஏற்படுத்திய பாதிப்பினைப் பெரும்பாலும் கவிதைகளாகப் பதிவு செய்துள்ளார். குறிப்பாக இறப்பில் கொட்டப்படும் பறை பற்றிப் பெரும்பான்மையாகப் பேசுகிறார். தனது தாத்தாவிற்கும் பறைக்குமான பிடிப்பினை நான்கு கவிதைகளில் பதிவு செய்துள்ளார். சாதியம் பல தலைமுறைகளாக அளித்து வரும் வலி தம்மோடு ஒழிந்து, தன் மகன், எல்லோரும் சமமாக வாழும் சமத்துவ சமூகத்தில் வாழ வேண்டும் என்ற வேட்கை கவிதையில் புதைந்துள்ளது. சொல்ல நினைத்த கருத்தினைக் கவிதையின் வழி துணிந்து சொல்லும் திறம் கவிஞரிடம் இயல்பாகவே உள்ளது. அதனால்தான் அப்பனின் கைகளால் அடிப்பவனைக் கவிதைகளின் வழி எதிர்த்து அடிக்கவும், அவன் கைகளை ஒடிக்கவும் துணிந்துள்ளார்.

**துணை நூல் பட்டியல்**


1. சிவசுப்பிரமணியன்.ஆ, தமிழகத்தில் அடிமை முறை, 2005, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.
2. மருதையன், புதிய கலாச்சாரம், ஜனவரி 2000.


●


கட்டுரையாளர், உதவிப் பேராசிரியர், மொழிகள் துறை, பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்), வல்லம், தஞ்சாவூர்.




1.06.2024 அன்று கோவை நேரு ஸ்டேடியத்தில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் 74 ஆம் ஆண்டு அமைப்பு தினம் கொண்டாடப்பட்டது. இதில் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாவட்ட செயலாளர் ப.பா.ரமணி, முன்னாள் மாவட்டத் துணை ஆட்சியர் புருஷோத்தமன், ஆர். சந்திரசேகர், எழுத்தாளர் புகழேந்தி, அமரந்தா, இஸ்கப் மாவட்ட செயலாளர் எம்.வி.ராஜன், சுஜாதா பாலன், பேராசிரியர்கள் ராமலிங்கம், குமாரசாமி, வேணுகோபால், ஏ.பி.மணிபாரதி, நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மண்டல மேலாளர் ரங்கராஜன் மற்றும் கிளை மேலாளர் குணசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கட்டுரை



# சங்கப் பாடல்களில் – இக்கால பெண் கவிஞர்களின் பாடுபொருள் ஒப்பீடு

ப. நீலாவதி
&
முனைவர். இரா.கௌரி

சங்கப் பாடல்களின் கூறுகளை உள்வாங்கிய இக்காலக் கவிஞர்களின் கவிதைப்போக்கு அதன் பாடுபொருள் பற்றிய விரிவான பார்வையும், ஒப்பீடு சார்ந்து கவிதையின் வகைமைகள், பெண் எழுத்துக்களின் எல்லை, விமர்சனம் இவற்றின் ஊடான கருத்துக்களை முன்வைத்து இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

தமிழிலக்கியத்தின் நீண்ட நெடிய பரப்பில் சங்க இலக்கியம் முக்கியத்துவம் வாய்ந்த செவ்வியல் படைப்பாக அமைந்துள்ளது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பான படைப்பாக்கத்தில் பெண் படைப்பாளிகளின் பங்களிப்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஆண் புலவர்களுக்கு இணையான புலமையோடும் படைப்பாற்றலோடும் பெண் புலவர்கள் படைப்புத் தளத்தில் தங்களின் முத்திரையைப் பதித்துள்ளனர். சங்க நூல்களில் சுமார் நாற்பது பெண் கவிஞர்கள் பாடல்கள் பாடியுள்ளனர். அவ்வை என்னும் பாடினி வீரார்ந்த கவிதை மொழியை பேசும் தன்மையை அறிய முடிகிறது. சங்கப் பெண் கவிஞர்களின் கவிதைகள் நேரடியான உணர்ச்சித் தளத்தில் ஆணுக்குப் பெண் நிகராக வெளிப்பட்ட மொழியை காண முடிகிறது. ஆனால், தொடர்ந்து உருவான தமிழ் இலக்கிய உருவாக்க மரபில் பெண் கவிஞர்கள் மரபு காணாமல் போய்விட்டது. இதற்கான காரணங்களை இருபத்தியோராம் நூற்றாண்டில் மீண்டும் உருப்பெற்றிருக்கும் வளமான பெண் கவிஞர்களின் கவிதைகளில் அறிய முடிகிறது. மேலும் சங்க காலத்திற்குப் பிறகு தற்காலத்தில் புதுக்கவிதைப் படைப்பு சார்ந்தே மிகுதியான பெண் படைப்பாளிகள் இயங்குகின்றனர் தமிழுக்கு அறிமுகமான இலக்கிய வகை உருவம், உள்ளடக்கம் சார்ந்து பல்வேறு பரிசோதனை முயற்சிகளை மேற்கொள்ள இடம் அளித்தது. இந்நிலையில் பெண்கள் தங்களின் விளிம்பு நிலை வாழ்க்கையை, இரண்டாம் பாலினமாகப் பார்க்கும் சமூக மதிப்பீடுகளை முன்வைத்து கவிதை தளத்தில் பெண் படைப்பாளிகள் இயங்கத் தொடங்கினர்.

**வகைமைகள்**

இலக்கிய வகைகளை அகம், புறம் என்ற அடிப்படையில் இலக்கியத்தை வகைப்படுத்திக் காட்டுகிறது. பல்வேறு இலக்கிய வகைகள் அமைவதற்கு வடிவம், பாடுபொருள் முதலியன அடிப்படையாக அமைவது இலக்கிய வகைமையின் கோட்பாட்டு முறைகள் ஆகும். சங்க இலக்கியத்தில் முதல், கரு, உரி என்ற இம்மூன்றனுள் உரிப்பொருளே சிறப்பானது. ஏனெனில், முதற்பொருள் பயின்றுவராத, கருப்பொருள் காணப்படாத பாக்களைக் கூட காணலாம், ஆனால் உரிப்பொருளற்ற கவிதை ஒன்றையும் காண இயலாது. இதே தன்மையில் இக்கால கவிஞர்கள் கவிதையில் உரிப்பொருள் இடம்பெற்று இருப்பதை உணரலாம்.

**அகவகைமை - கூறுகள்**

- சங்க இலக்கியத்தில் அகத்திணை பற்றிய பொதுவான செய்திகளை அறியலாம்.
- அகம் சொல்லாய்வு, பொருளாய்வுகளைப் பற்றியும் அகத்திணைச் சிறப்புப் பற்றியும் தெறிந்து கொள்ளலாம்.
- சங்க அக இலக்கியங்கள் நாடகப் போக்கில் அமைந்துள்ள பாங்கையும் உளவியல் பாங்கையும் உள்ளுறை, உவமம், இறைச்சி போன்ற நுணுக்கத் திறன்களையும் விரிவாக அறியலாம்.
- அக இலக்கியங்களின் வளர்ச்சி பற்றியும் அதன் வழி தற்காலம் வரை அவை விரவியுள்ளதையும் மிக விரிவாக புரிந்து கொள்ள முடிகிறது.

**புறவகைமை - கூறுகள்**

- சங்க இலக்கியத்தில் புறப்பொருளில் அடங்கிய போரியல், அரசியல், சமூகவியல், சமயவியல், வாழ்வியல் ஆகியன பற்றி அறிந்து கொள்ளலாம்.
- புறப்பொருள் சிறப்பு - போர்க்குரிய காரணங்கள் - தலைமைக்குரிய தகுதி - வெற்றியையும் புகழையும் அரச குடியினர் விரும்பியமை ஆகியன பற்றியும் தெரிந்து கொள்ளலாம்.
- அரசியல் நெறி - சமயம் - உலகியல் வாழ்வு.
- கொடை - அறவுணர்வு

**சங்க காலம் தற்காலம் பாடுபொருள்**

சங்க இலக்கிய காலத்தில் பெண்கள் ஆணின் உடைமையாகவே பார்க்கப்பட்டனர். பெண்களின் அழகே முன்னிருத்தப்பட்டு பாடல்கள் புனையப்பட்டன. இருப்பினும் சங்க இலக்கியத்தில் பெண்பாற் புலவர்களும் அகப்பொருள் பற்றிச் சுதந்திரமாகப் பாடியமை காண முடிகிறது. பின்னர் தோன்றிய பக்தி இலக்கிய காலத்தில் பல பெண்பாற் புலவர்கள் இறைவனைப் பாடி இருக்கின்றனர், ஔவையார், ஆண்டாள், காரைக்கால் அம்மையார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர். அக்கால பெண்பால் கவிகளின் பாடுபொருள் இயற்கை இறைபக்தி, நன்னெறி கூறுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது. சங்க காலத்தைப் போன்று பிற்காலத்தில் பெண்கள் சுதந்திரமாக தன் உள்ளத்தைப் பாடுவதை, அகப்பொருள் இலக்கியம் படைப்பதை ஏற்றுக்கொள்ளாத நிலையையே காண முடிகிறது. நவீன இலக்கிய காலத்தில் சமூகம், வாழ்வியல் நெறி, பெண்ணியம், காதல், இறைவழிபாடு என்று பல தளங்களிலும் பெண் கவிஞர்கள் கவிதை படைத்துள்ளார்கள்.

சங்க காலச் சமூகத்தில் பெண்கள் வீட்டு வேலை, கதிரறுத்தல், தினைப்புனம் காத்தல், போன்று குடும்பம் சார்ந்த தொழில்களில் மட்டுமே ஈடுபட்டநிலை இருந்தது. பெண்கள் பொருளீட்ட வெளியில் செல்லும் நிலை காணப்படவில்லை. சமூக வளர்ச்சியில் பங்கேற்றதையும் காண முடியவில்லை. தற்காலத்தில் பெண் சமூகம், வீட்டு வேலைகள், அலுவலக வேலைகள், குடும்பம் குழந்தைப்பேறு, வளர்ப்பு நிலை என்று பல நிலைகளில் தன்னை ஈடுபடுத்தி வருவதும், அதனோடு படைப்பு உலகில் கால் பதிப்பதும் பெரும் சவாலாக உள்ளது. பெண் தன் உள்ள உணர்வுகளை வெளி-யிடுவதற்கு சமூகம் அனுமதிப்பதில்லை. இயல்பான இத்தகைய செயல்பாடுகளை கருத்துக்களைப் பெண் தனக்குள்ளாகவே மிக இறுக்கமாகப் பொத்தி வைக்கச் சமூகம் கற்பிக்கிறது. பிறப்பினால் உண்டான உடல் ரீதியான வேறுபாடு தவிர்த்து பிறவற்றில் ஆணுக்கு இணையானவளே பெண், எனினும் பெண்ணுக்கான எல்லை வரையறைக்கு உட்பட்டதாக உள்ளது.

**பெண் எழுத்துக்களில் ஏக்கம் எல்லை**

பெண் என்ற பாலினம் இயற்கை கலாச்சாரம் சார்ந்த ஆணின் ஆளுகையின் கீழ் வாழ்தல் என்ற மரபுப் பார்வையை விடுத்து வாழ முயற்சி செய்ய வேண்டும். ஆணின் ஆதிக்கம் ஒரு கட்டமைப்பாக உருவாக்கப்பட்டு இருக்கிறது. இந்த ஆதிக்கப் பரப்பில் தனது வெளியைத் தீர்மானிக்க முடியாத பெண் ஆணின் அடக்குமுறைக்கு எதிராக கலகக்குரல் எழுப்புகிறாள்.

“கீரைக்காரி வந்தாள்
அம்மாவை கூப்பிடவும்
செய்தித்தாள் வந்தால்
அப்பாவிடம் கொடுக்கவும்
யாரும் சொல்லித் தராமலேயே
கற்றுக் கொள்கிறது குழந்தை”

(அ வெண்ணிலா)

இன்றைய பாடப் புத்தகங்களிலும் குடும்பம் பற்றி வரும் பாடங்களில் ஆண் குரல்தான் பதிவாகியுள்ளது என்பதை கவிதை விவரிக்கிறது.

**காமம் வெளிப்படுத்துதல் கூடாமை - தகர்த்தல்**

மொழி, உடல், மனம் ஆகிய மூன்றும் தலைவன் பிரிவால் காமத்தின் விளைவால் படுகின்ற பாட்டைக் கூறும்போது பெண் மொழி பிறக்கிறது. ஆண் மொழியைப் புறக்கணித்து எழுதும் எழுத்துக்கள் பெண்மைக்கான அடையாளங்களை முற்றிலும் மாற்றுக் கோணத்தில் பார்க்கப்படுகிறது.

“கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்தும் உக்கா அங்”

(குறுந் 27)

தலைவன் பிரிவைத் தாங்காது துயருறும் பெண் கூற்று நல்ல ஆவினது இனிய பால் ஒன்று கன்றுக்கு பயன்பட வேண்டும் பின் கரக்கும் கலத்தினில் விழ வேண்டும். இரண்டுமே இல்லாமல் மண்ணில் சிந்தினால் என்ன பயன்? அதைப்போல அல்குலில் நடந்த பசலையாகிய மணிநிற அழகு எனக்கும் பயன்படாமல் என் தலைவனுக்கும் இன்பம் பயக்காமல் பசலை படர்ந்து அந்த அழகினை உண்ணுதல் என்ன நியாயம்? என கேட்கிறார். பெண்கள் பேசக்கூடாதென்று என்று விலக்கப்பட்ட காமவுணர்வை வெளிப்படையாக எடுத்துரைக்கும் போது பெண்மொழி உருவாகிறது. ஆண் பெண்ணுக்கு வகுத்த வன்முறைச் சட்டத்தைத் தகர்த்துக் கொண்டு வெளிப்படுகிறது.

புதுக்கவிதை தோற்றத்தின் எழுச்சியாக சல்மா அவர்களின் தீராதது எனும் தலைப்பில் இதே தன்மையை உணர முடிகிறது.

“நேற்று விருப்பமொன்றில்
வெட்கம் நிரம்பியிருக்க
அதன் தகிப்புகளைப் புறக்கணித்துப்
பாதிவழியில் கைவிட்டு
இரவின் வர்ணத்தில்
என் தாபங்களைக்
கரைத்தபடி ...

..........................................................

சற்று முன்
கைவிடவோ கட்டுப்படுத்தவோ இயலாது
வெளிப்பட்ட என் ஏகங்களின் மீது
நாய் ஒன்று சிறுநீர் கழித்து போகிறது”

(சல்மா பச்சை தேவதை 25)

தன் காமத்தின் தகிப்பை கவிதையின் வழியாக வெளிப்படுத்தியதோடு ஏக்கங்களாய் தொடரும் இரவில் நாய் ஒன்று சிறுநீர் கழித்துப்போகிறது, மேலும் பயனற்றை இவ்வுடலின் தாபங்களை எப்படி சுமப்பது என்ற ஒரு வினாவையும் வைத்துச் செல்கிறார்.

**மௌனத்தின் அதிர்வுகள் - விமர்சனங்கள்**

மௌனத்தின் உரத்த குரல் தனிக்கையையும் மீறலும், பெண் கவிஞர்கள் - பெண் மொழி என்கிற நிலையில் மேலைநாட்டில் பெண்ணியம் தோன்றி வளர்ந்த வரலாறு இந்தியாவில் பெண் விடுதலை இலக்கியங்களில், செயல்பாடுகள், பெண்மொழி உருவாக்கம் மற்றும் பயன்பாடு, பெண் கவிஞர்களின் கவிதைகளில் காணப்படும் பெண்மொழி ஆகியன புதுக்கவிதை வழியாக மிக பரவலாக பேசப்பட்டது. நவீன பெண் கவிஞர்கள் பெண்களின் உடல் பற்றியும் உடல் ரீதியான உணர்வுகள் பற்றியும் உடலின் பட்டுணர்வு பற்றியும் வெளிப்படையாக எழுதியது, ஆண் அதிகாரத்தின் வேர்களை அகற்றி விட்டது. அதனால் பெண் கவிஞர்கள் மீதான விமர்சனம் அவர்களின் கவிதைகளின் தரம் பற்றியதாகவோ அதன் கவித்துவம் பற்றியதாகவும் இல்லாமல் அவர்களைத் தனிப்பட்ட முறையில் தாக்கும் விமர்சனங்களாக உள்ளன.

கவிதையில் குறிப்பிடத் தகுந்தவராக இருப்பவர் எழுபதுகளில் எழுதிய இரா. மீனாட்சியாவார். வேறு சிலரும் அக்காலத்தில் எழுதினார்கள். எண்பதுகளில்தான் பெண் கவிஞர்கள் பலர் எழுத முன் வந்தனர். ஈழத்துப் பெண் கவிஞர்களின் தாக்கமும் தூண்டுகோலாய் அமைந்தது. பெண்களின் எழுத்து கருக்கொள்வ-திலிருந்து உருக்கொள்வது வரை மனதளவிலும் குடும்பக் கட்டமைப்பிலும் ஏகப்பட்ட தடைகளையும், சிக்கல்களையும் சந்தித்து வெளிக் காட்டாத நிர்பந்தம், அதையும் மீறி எழும்போது பணியில் குடும்பம் இழுத்துப் போட்டுக் கொண்டு அசதியை மிச்சமாய் கொடுக்கிறது. கவிதை எழுதுவது பெண்களுக்கு கனவாகிப் போகிற சூழலையும் காண முடிகிறது.

கமலாதாசின் கவிதையொன்றை இங்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

“உன்னை நான் காணும்வரை
கவிதை எழுதினேன், ஓவியம் தீட்டினேன்
தோழிகளுடன்
உலவி வந்தேன்
இப்போது நான் உன்னை காதலிக்கிறேன்
என் வாழ்க்கை ஒரு நாயைப் போல
ஒடுங்கி சுருண்டு கிடக்கிறது
உன்னில் மன நிறைவை கண்டு”

இக்கவிதை மூலம் பெண்களுக்கு எழுதவே நேரம் இல்லாத போது சுதந்திரமாக எழுதுவது எப்படி? என்ற ஏக்கத்தை முன்னிறுத்தி இக்கவிதை மௌனத்தின் அதிர்வுக்குள் அங்கலாய்க்கிறது.

**பெண்மொழி - வெளி:**

சங்க இலக்கியப் பாடல்களில் பிரிவுத் துயரைப் பாடக்கூடிய பாடல்களை மிகுதி தலைவரின் பிரிவை

*எண்ணி தலைவி வருந்தும் நிலையினை பல புலவர்கள் பாடியுள்ளனர். எனினும், பெண் புலவர்கள் இவ்வுணர்வை மிக காத்திரமாக புலப்படுத்தி உள்ளனர்.*

"சேறும் சேறும் என்றலின், பண்டைத்தம்
மாயச் செலவாகச் செத்து மருங்கு அற்று
..................................................................

(குறுந்: 325)

*நன்னாகையார் என்ற பெண் புலவர் பாடியுள்ள இப்பாடல் தலைவியின் பிரிவுத் துயரைப் புலப்படுத்துகிறது.*

*புதுக்கவிதை தளத்தில் இயங்கும் பெண் படைப்பாளியின் கவிதை*

"சதுப்பு நிலக் குமிழிகள்
முலைகள்
ஒரு நிறைவேறாத காதலில்
துடைத்தகற்ற முடியாத
இரு கண்ணீர்த் துளிகளாய்த்
தேங்கித் தளும்புகின்றன."

(குட்டி ரேவதி - முலைகள் :13)

"ஆங்காங்கே அழுக்குச் சுவர்களும்
வாசலில் வெற்றிலைச் சுண்ணாம்பு
தடவிய தூண்களும்
பாசிப்படர்ந்த கிணற்றடியும்
சிவப்புப் பூ பூக்கும் அரளியும்."

(கனிமொழி - கருவறை வாசனை)

*இதில் இளைஞன் தூண்கள், கிணற்றடி, அரளி மரம் ஆகியவை எந்த மற்றொன்றுடனோ அல்லது வேறு மனிதர் எவருடனோ உறவற்றிருக்கின்றன.*

**காமம் - தேடல் - இருப்பு**

*பெண் தன் உணர்வுகளை உடலைக் கொண்டாடப்பட வேண்டும். ஆண் மொழியால் வரையறுக்கப்பட்ட பெண் இருப்பை எதிர் அரசியலால் சிதைத்தல், பெண்மொழியைக் கையாளுதல், பெண்ணின் வாழ்வை, வெளியை, மொழியை, காதலை, காமத்தைக் கொண்டாடி பெண்ணின் பன்முகப்பாட்டை படைத்தல் என்பதே நவீன பெண் படைப்பாளிகள் மேற்கொண்டுள்ளனர்.*

*சங்க இலக்கியத்தில் பெண் தன் காம உணர்வை மிக உச்சமாய் கூறும் பாடல்கள் உள்ளன.*

"முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?
ஓரேன், யானும், ஓர் வெற்றி மேலிட்டு
..................................................................

(குறுந் - 28)

*காம உணர்வினால் தான் பாடும் வேதனை அறியாத இவ்வூரிலுள்ள அனைவரும் உறங்கிவிட்டனர் என்று தனித்திருக்கும் தலைவி புலம்புவதாக இப்பாடல் அமைந்துள்ளது.*

*இதே நிலையை சுகிர்தராணி கவிதையில்*

"இரவு
ஆடைகளைக் களைத்து விட்டு
நிர்வாணமாய் வீற்றிருக்கிறது
ஒரு மாயக்காரியின் புன்னகையைப்போல்
இம்முறையேனும்
வெட்கக் கனி புசித்த வாயால்
உன்னை அழைக்க முற்படும்போது
எங்கிருந்தோ வெளிப்படும் உன்கை
தாபம் மேலிட்ட ஸர்ப்பமாய்
முயக்கிச் சாய்க்கிறது என் புனைவுகளை
கடைசி நிகழ்வின்
விரகம் எரித்த தாம்பத்தியப் புகை
ஒருவழிப் பாதையில்
நுழைந்து நுழைந்து வெளியேறி
இளைப்பாறுகிறது.
என்னை இழுத்துப் போர்த்திய
இருளின் நிழலில்".

( சுகிர்தராணி - இரவுமிருகம் - 26)

*இதன் தொடர்ச்சியாக இருபத்தியோராம் நூற்றாண்டு கவிஞர்களின் கவிதை - நுட்பம்.*

*பிரியும் பொழுது எனும் தலைப்பில் சல்மா அவர்களின் கவிதை*

"உன்னை விட்டுப் பிரியும் முன்பாகக்
காண நினைத்திருந்தேன் என்னுள்
வேட்கையின் விதை தூவி
என் வீட்டு முற்றத்தில் பதிகிற
மாலை உன்னிடத்திலும்
உன் வீட்டிலும் அப்படித்தான் விழுகிறதாவென"

*ஒரு நற்றிணைப் பாடல்*

"இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
இளங்குவளை நெகிழ்த்த கலங்கு அஞர் எள்ளி
நகுவது போல, மின்னி
ஆர்ப்பது போலும்இக் கார்ப்பெயர் குரலே".

(நற்றி - 214)

*தலைவன் பல மலைகளையும் கடந்து பொருளைக் கொண்டு வருவதற்காக விரைந்து பிரிந்தனர். அவர் பிரிவு தாங்காது என் தோள்கள் மெலிந்தன. இத்துன்பத்தைக் கண்ட மேகம் என்னைப் பரிகசிப்பது போல மின்னலிட்டு ஆரவாரித்து மழை பொழிகின்றது - இம்மழையின் ஒலியினைத் தலைவர், அவர் சென்றிருக்கும் நாட்டில் கேட்கமாட்டாரோ என்று தலைவி கூறுவதாக சங்க இலக்கியப் பாடல்களிலும் கவிதை நுட்பம் தெளிவாகிறது.*

**முடிவாக சில**

- *சங்க இலக்கிய பாடல்களில் பெண்பாற் புலவர்கள் உடல், மனம் சார்ந்த உணர்வுகளை வெளிப்படையாக எழுதும் காலமாக சங்க காலம் இருந்துள்ளது. ஆனாலும் பெண்பாற்புலவர்கள்*

சமூகம் சார்ந்த பார்வையில் பாடல்கள் எழுதப்பட்டதாக அறிய முடியவில்லை.

- இக்காலப் பெண் கவிஞர்கள் உடல், மனம், சமூகம், பொருளாதாரம், பெண்ணியம் என பல்வேறு தளங்களில் கவிதைகள் படைக்கின்றனர். மிக முக்கியமாக பெண் எதிர் கொள்ளும் சிக்கல், வலி, ஆதிக்க சமூகத்தில் இடர்களையும் அதற்கான தீர்வையும் முன்வைத்து கவிதைகள் படைக்கின்றனர்.
- தற்காலப் பெண் கவிஞர்களின் கவிதைகளில் சங்கப் பாடல்களில் இடம் பெற்ற பல்வேறு உடல் சார்ந்த ஏக்கம், தேவை, தீவிரம், இருண்மை நிலை போன்ற யதார்த்தமான பதிவுகளை சங்க மற்றும் இக்கால கட்டத்திலும் விவரிக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. சங்க இலக்கியத்தின் தொடர்ச்சியும் அதன் சாரத்தை உள்வாங்கிய பல்வேறு கவிதைகள் இக்காலப் பெண் கவிஞர்களின் படைப்புகளில் இடம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

**நெறித்துணை நூல்கள்:**


1. நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, அகநானூறு, பரிபாடல், கலித்தொகை, ஐங்குறுநூறு, மூலமும் உரையும் கோவிலூர் மடாலயப் பதிப்பு.
2. பெண்: மொழி - வெளி தமிழகப் பெண் கவிஞர்களின் கவிதைகள் குறித்த உரையாடல் - தொகுப்பு: ஏ.தீபா, சா. மரியரீகன், ர. குமார்.
3. ஆக்கமும் பெண்ணாலே: பெண் படைப்பாக்க ஆளுமைகளின் உரையாடல் -முனைவர் ஏ. ராஜலட்சுமி.
4. பச்சை தேவதை - சல்மா
5. ஒரு மாலையும் இன்னொரு மாலையும் - சல்மா
6. அகத்திணை - கனிமொழி
7. குறியியல் ஒரு சங்கப் பார்வை - முனைவர் மொ. இளம்பரிதி
8. முலைகள் - குட்டி ரேவதி
9. இரவு மிருகம் - சுகிர்தராணி
10. கருவறை வாசனை - கனிமொழி
11. மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் - பெண் உலக தமிழராய்ச்சி நிறுவனம்.



*கட்டுரையாளர்கள்:*

ப. நீலாவதி,
முனைவர்பட்ட ஆய்வாளர்
மற்றும்
முனைவர். இரா. கௌரி
உதவிப் பேராசிரியர் தமிழாய்வுத்துறை
(அண்ணாமலை பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்றது)
ஏ.வி.சி.கல்லூரி (தன்னாட்சி) மன்னம்பந்தல் – மயிலாடுதுறை.



## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!








**ஜூன் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3711 | 3705 | 1886 | 2828 | 7783 | 966 |
| 7692 | 3712 | 8967 | 2826 | 7784 | 3703 |
| 7693 | 3714 | 8966 | 2827 | 7785 | 2557 |

**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

தனி இதழ் ₹ **45.00**
ஆண்டு சந்தா ₹ **540.00**
மாணவர்களுக்கு ₹ **500.00**,
ஆயுள் சந்தா ₹ **5400.00**
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ **4050.00**
*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

கட்டுரை




# கவிதைகள் முன்வைக்கும் பசுமை அரசியல்

ப. நவசக்திவேல் &
முனைவர் க. புவனேஸ்வரி

உலகளாவிய பிரச்சினையான சூழலியல் பிரச்சினைகள் குறித்து பசுமை அரசியல் தளத்தில் கவிஞர் கோ.கலியமூர்த்தி அவர்களால் எழுதப்பட்டுள்ள ‘‘கீழ் வானத்துக்கு தீ மூட்டும் எரி நட்சத்திரம்’’ என்ற தலைப்பில் அமைந்த கவிதைகள் வெளிப்படுத்தும் "பசுமை அரசியல்" பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

தொகுப்பிலுள்ள கவிதைகள் தமிழ்நாட்டிலுள்ள சூழலியல் சார்ந்த பிரச்சனைகளை பசுமை அரசியலோடு அணுகியுள்ளது.

**அணுஉலையும் சூழலியல் பிரச்சினையும்:**

அணுஆயுதப் பயன்பாடு இரண்டாம் உலகப்போர் காலத்தில் ஏற்பட்டதாகும். பிறகு அதன் பயன்பாடு நிறுத்தப்பட்டது. பேரழிவுகள் தந்த அணு ஆயுதத்தை பல்வேறு உலக நாடுகள் எதிர்க்கின்றன. அதைப் போலவே அணுமின்சாரம் உற்பத்தி செய்யும் அணுமின்னுலையும் ஆபத்தானதே.

இதற்கு ஆகும் செலவும் சூழலியல் சீர்கேடும் அதிகம். இந்நிலையில் இத் திட்டம் தேவையில்லை என்ற கருத்தினை ‘ஏன் கவிதை எழுதுகிறேன்’ என்ற தலைப்பில் அமைந்த கவிதையில்

"நதிகளைப் பருகி
நிலங்களைப் புசித்து
அணுஉலை சிரிக்கும் எம்
விஷமூட்டப்பட்ட நிலத்தில்"

*என்ற வரிகள் அணுமின் நிலையங்களில் அதிகமாக நீர் பயன்படுத்துவதனால் அதீத நீர் செலவும் அதிலிருந்து வெளிவரும் கழிவுகள் நதிகளை நஞ்சாக்குகிறது. மேலும் அணுக்கழிவுகளால் நிலங்கள் விஷமாக மாறுகின்றன என்பது உணர்த்துகின்றன.*

*''கவிதைகள் அல்ல உயிர்களே முக்கியம்'' எனும் தலைப்பில் அமைந்த கவிதையில்*

"இரவெல்லாம் கதறும் அலைகளின் துயரம்
கடலின் வலியைத்தான் பாடுகிறது
கரையில் முளைத்திருக்கும் அணுஉலைகள்
கடலின் இதயத்தின் புற்றுக்கட்டிகள்"

*என்ற வரிகள் அணுஉலைகள் கடல்பகுதிக்கு அருகே கட்டப்பட்டுள்ள்ளன. அணுஉலைகளின் கழிவுகள் கடலில் கலக்கின்றன. இதனால் கடல் மாசுபடுகிறது. பெரும்பாலும் இவை பூமியை பாழ்படுத்தும் புற்றுக்கட்டிகள் போல கடலையும் சூழலையும் கொல்லும் என்கிறார்.*

*''அழகியல் கவிதைகளின் காலம் முடிந்துவிட்டது'' எனும் தலைப்பில் அமைந்த கவிதை நேரடியாக பசுமை அரசியல் பேசுகின்றது*

"திட்டங்களால் சட்டங்களால்
சதிகளால் மசோதாக்களால்
அணுஉலைகளால் நியூட்ரினோவால் மீத்தேனால்
சூறையாடப்படுகிறது எமது நிலம்
வேட்டையாடப்படுகிறார்கள் எம் மக்கள்
நீண்ட எம் நெய்தலின் நெடுங்கரை தோறும்
அன்றாடம்
செத்துக் கரையொதுங்கும் திமிங்கிலங்கள்
எதிர்காலம் குறித்த ஆருடம் சொல்கின்றன"

*என்ற வரிகள் தமிழ்நாட்டின் சூழலியல் பிரச்சனைகளை கூறுகின்றன. பசுமை அரசியலின் முக்கியமான தன்மை இயற்கையும் மனிதமும் காக்கப்பட வேண்டும் என்பதாகும். ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது அந்நாட்டின் மக்களை அச்சுறுத்தாத திட்டங்களினால் உருவாக்கப்பட வேண்டும். அரசு, அதிகார மையங்களால் உருவாக்கப்பட்ட இத்திட்டங்கள் உயிர்களுக்குக் கேடானவை என்பதை அணுஉலைக் கழிவு, கடல் உயிரியான திமிங்கிலங்கள் இறப்பது கடல் இறப்பதற்கு சமம் ஆகும். ஏனெனில் திமிங்கிலங்கள் ஆழ் கடலில் வசிப்பவை. எனவே அணு நஞ்சானது அதிகளவில் பரவியுள்ளதை இது உணர்த்துகின்றது.*

*''துடிக்கூத்து'' எனும் தலைப்பில் அமைந்த கவிதை*

"ஒவ்வொருவராய் கொல்ல நீட்
ஒட்டுமொத்தமாய்க் கொல்ல
அணுக்கழிவு மேலாண்மை
மையம் நியூட்ரினோ ஆய்வகம்"

*மற்றும்*

*கண்ணீர்த்தீ எனும் தலைப்பில் அமைந்த கவிதை*

"மேற்குத்தொடர்ச்சி மலைகளின் முகில்களும்
வீழ்த்தப்படுமோ
விரைவில்
அணுவுலை அமைத்தது போதாதென்று
அணுக்கழிவுத் தேக்கமும் அமைத்து எமது
நிலத்தை வீழ்த்தும் பயங்கரவாதம்
இனத்தை வீழ்த்தும் சதியல்லவா"

*என்ற கவிதை வரிகள் பன்மிய உயிர்ச் சூழல் விளங்குகின்ற மேற்குத் தொடர்ச்சி மலை ஆய்வு என்ற பேரில் அழிக்க நினைப்பதை விளக்குகின்றது.*

**நிலம், நீர், காற்று மாசுபாடு:**

*சூழலியலின் அடிப்படியான நிலம் (Lithosphere), நீர் (Hydrosphere), காற்று (Atmosphere) என்பவை உயிர்ச்சூழலுக்கு (Biosphere) அடிப்படையாக விளங்குபவை ஆகும். ''சூழலைப் பேணுதல் என்பது உயிரினங்கள் வாழ்வதற்கு அவசியமான நீர், நிலம், காற்று இவற்றைப் பாதுகாப்பது. நீர் இல்லையென்றால் எவ்வுயிருக்கும் இவ்வுலகில் வாழ இயலாது. அதனால் நீரைக் காப்பது மிகமிக அவசியம்.'' (ரேவதி, பல்லுயிர் ஓம்புதல், ப.68)*

*இவை மனித நடவடிக்கைகளால் சேதமுறும் போது வாழுமிடமாகிய பூமி சேதமுறுவதை ''வெய்யில் மிகவும் கோபமாயிருக்கிறது'' எனும் தலைப்பில் அமைந்த கவிதையில் நீர் வறட்சியினை*

"இத்தனை நீர்நிலைகளைப் பருகித்தீர்த்தும்
தீராதிருக்கிறது கோடையின் தாகம்
கெஞ்சும் வாளியை வெறுமையாய்
திருப்பியனுப்புகிறது
கருணைதீர்ந்த கிணறு
..........................................................
நீர்மை அனைத்தையும்
பறிகொடுத்துவிட்டு நிர்கதியாக நிற்கிறது பூமி"

*என்ற வரிகள் புவி வெப்பமயமாதலை உணர்த்துகின்றன.*

*அதே கவிதையில்*

"அலைகள் கதறும் நள்ளிரவில்
காற்று பெருமூச்சைப்போல் பற்றிளரிகிறது

மேற்கு மலைகளின் மேகக்கூட்டம்
கார்பன் மோனாக்சைடால்
மலடாகிவிட்டது."

என்ற வரிகள் காற்று மாசுபட்டினை உணர்த்துகின்றன

காலநிலை மாற்றத்தால் மழையானது பொய்த்துப் போனது. மழைக்காகக் காத்திருக்கும் பூமியைப்பற்றி 'களைத்த நிலம்' எனும் கவிதையில்

"கதிர்களை கருக்கிவிட்டுக்
கலைகளைச் செழிக்க வைக்கும்
வெறிகொண்ட கோடையின்
வேட்டைக் காடு நம் நிலம்
மேற்கு மலைத்தொடர்கள் மெல்லக்
கருணைகொண்டு
ஊறுகிற மழைக்கும்
அனுப்புகிற காற்றுக்கும்
காத்திருக்கிறது நம்
களைத்த நிலம்"

(கீழ்வானத்துக்குத் தீமூட்டும் எரிநட்சத்திரம் ப.29) என்ற வரிகள் உணர்த்துகின்றன.

**மணல் கொள்ளை:**

பசுமை அரசியலின் மையப்புள்ளியாக விளங்குவது மணல் கொள்ளையாகும். இன்று "உலகமயமாக்கலினால் தொழில் உற்பத்தி, வாணிபப் பெருக்கம், அங்காடி விரிவு, நுகர்வு அதிகரிப்பு, நாகரிக வளர்ச்சியின் மிகைமிஞ்சிய போக்கு, அயல்நாட்டு மோகம் ஆகியவை அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. எனவே சுற்றுப்புறச் சூழலில் உள்ள பொருட்கள் மிக அதிகளவில் பயன்படுத்தப்பட்டுச் சுரண்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றன." (ராஜகுமாரி, மா, மூன்றாம் உலகப்போர் நாவலில் சூழலியல் விழுமியங்கள் ப.89)

இயற்கை வளங்களை சுயநலப் போக்கிற்காக பயன்படுத்தும் மக்களும், அரசுகளும், அரசாங்கங்கள் இருக்கும் வரை ஆற்று மணல் கொள்ளைகள் இருக்கும்.

"தண்ணீரையும் மட்டுமின்றி செழிப்பான வண்டலையும் மணலையும் ஆறுகள் அள்ளித் தருகின்றன. அளவுடன் பயன்படுத்தினால் தொடர்ந்து இந்த வளங்கள் நமக்குக் கிடைக்கும். ஆனால், தற்போது தண்ணீரும் மணலும் வணிகப்பொருளாகிவிட்டன. என்பதை (பழ.கோமதி நாயகம் ப.66)

"லாரிகளேறிப் பயணம் போன
நதியின் பிரேதம் என்ன ஆனது

என்ற வரிகள் மணல் கொள்ளைப்பற்றியும், சூழலியல் சீர்கேட்டினையும் எடுத்துரைகின்றது.

**திட்டங்களும் வீழ்ச்சியும்:**

வேளாண்மை நிலங்களில் எரிவாயுக் குழாய்களை பதிப்பதற்கு எதிர்ப்புகள் வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து வந்தது. இருந்தபோதும் தொடக்க நிலையில் அரசும் அதிகாரிகளும் உணவிடும் மக்களின் துயரினை அறியாத போது ஏற்பட்ட அவலத்தை

"கதறும் உழுகுடிகள் கண்ணெதிரே
பிரம்மாண்ட கெயில் குழாய்கள் வயல்களை
வன்புணர்கையில்
மக்களின் அச்சத்தை கிஞ்சித்தும் மதியாமல்
பெட்ரோகெமிக்கல் மண்டலமாக மருதத்தை
அறிவிக்கையில்
குளமிழந்த தவளையின் கதறலாகிறேன்
பாம்புகள் வெறி பிடித்தலைகின்றன"

மேலும் ஸ்டெர்லைட் ஆலையைப் பற்றி

முத்து நகரத்தின் கண்ணீர்த்துளி முத்தாகவில்லை எனும் கவிதையில்

"அதிகார வலிமைமுன் வாலாட்டி நிற்கும்
அடிமைவம்சத்தின் துப்பாக்கி குண்டுகளுக்கு
துரோகத்தின் வலிமை"

என்ற வரிகள் அதிகார மையங்கள் சூழலியலுக்கு எதிராக விளங்கும் தன்மையை உணர்த்துகின்றன.

**துணைநூற்பட்டியல்**

1. ராஜகுமாரி. ம. "மூன்றாம் உலகப்போர் நாவலில் சூழலியல் விழுமியங்கள்" சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்,
2. ரேவதி. பல்லுயிர் ஓம்புதல். நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம் மாத இதழ்

●

*கட்டுரையாளர்கள்*

ப.நவசக்திவேல்,
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),
&
முனைவர் க.புவனேஸ்வரி,
ஆய்வு நெறியாளர், உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, தேசியக்கல்லூரி தன்னாட்சி,
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன்
இணைவுபெற்றது), திருச்சிராப்பள்ளி - 620001

கட்டுரை



# சங்க இலக்கியத்தில் களிற்றுக் கொடை

இரா.சுசில்குமார்

சங்க இலக்கியத்தில் ஒரு வேந்தனின் சிறப்பைப் பாடுவதற்கான முதன்மைப் பாடுபொருள்களாக வீரமும் கொடையும் திகழ்ந்துள்ளன. வேளிர், வேந்தர் காலங்களில் வழங்கப்பட்ட பல்வேறு கொடைப் பொருள்களில் தவிர்க்க முடியாத இடத்தைக் களிறு பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. இரவலர்களாகிய புலவர், பாணர் மற்றும் அவர் சார்ந்த குழுவினர் தம் வறுமையையும் வயிற்றுப் பசியையும் போக்கிக் கொள்வதற்காகவே புரவலரைத் தேடிச் சென்றுள்ளனர். இரந்து வருவோருக்கு உணவு, உடை வழங்குவதிலும் பொன்னால் ஆன பொருள்கள் வழங்குவதிலும் பயனும் ஒரு பொருளும் உண்டு. உணவு உடனடித் தேவையையும் பொன்னால் ஆன பொருள்கள் வரும் நாட்களுக்கான தேவையையும் நிறைவு செய்வனவாகும். ஆனால், இரவலர் வாழ்வியலோடு தொடர்பற்ற களிறு ஏன் வழங்கப் பெற்றது என்ற கேள்வி பொதுவாக எழுகிறது. இரவலருக்குக் களிறுகள் கொடையாக வழங்கப்பட்ட செய்திகள் சங்க இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இரவலர் வாழ்வியலோடு களிற்றுக்கான உறவு என்ன? களிற்றை அவர்கள் எவ்வாறு பயன்படுத்தினர் என்ற செய்திகள் சங்க இலக்கியங்களில் எங்கும் இடம்பெறவில்லை.

சங்க இலக்கிய காலத்தில் புரவலரால் இரவலருக்குக் களிறுகள் ஏன் வழங்கப்பட்டன. களிற்றுக் கொடையினால் இரவலர் பெற்ற பயன் என்ன என்பதனை மானிடவியல் நோக்கில் ஆராய இக்கட்டுரை முயல்கிறது.

**புரவலன் வழங்கிய களிற்றுக் கொடைகள்**

சங்க இலக்கியத்தில் மொத்தம் "இருபத்தொன்பது இடங்களில் களிற்றுக் கொடை குறித்த குறிப்புகள் இடம்பெற்றுள்ளதாக" *(கைலாசபதி.க., 2021: 317)* கைலாசபதி குறிப்பிட்டுள்ளார். நாஞ்சில் வள்ளுவனைப் பாடிய ஔவையார் (புறம்.140:2-7), நாங்கள் மனையின் பக்கத்தில் பறித்த கீரைக்கு மேலே தூவுவதற்காகச் சிறிது அரிசி வேண்டினோம். புரவலன் எங்கள் வறுமையைப் பார்க்காமல், தன்னுடைய மேன்மை நோக்கி மலைபோன்ற யானையை எங்களுக்கு அளித்தான் எனப் பாடியுள்ளார். இப்பாடலில் புரவலன் தன்னுடைய மேன்மையினால் அன்றைய தேவைக்கான அரிசியை மட்டும் வழங்காமல் எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு மலைபோன்ற யானையை வழங்கியிருக்கிறான் என எண்ணத் தோன்றுகிறது.

கண்டீரக் கோப் பெருநள்ளி தான் முயன்று சேகரித்த நல்ல அணிகலத்தைக் களிற்றொடு வழங்கினான் என வன்பரணர் (புறம்.148:1-4) பாடியுள்ளார். இப்பாடலில் களிறு என்னும் சொல்லோடு 'ஒடு' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு சேர்ந்து 'களிற்றொடு' என வருகின்றது. ஆதலால் அணிகலங்களைவிட களிற்றுக்கு முதன்மை அளிக்கப்படுகிறது.

அஃதை எனும் இனக்குழு தலைவனும் (அகம்.113:3-4), நன்னன் எனும் வேளிர் தலைவனும் (அகம்.152:11-12) ஆகிய புரவலர்கள் இருவரும் யானையை இரவலருக்கு அளிப்பதனால் இன்புறுகின்றனர் எனப் பாடப்பட்டுள்ளது. இவற்றையும் விட உயர்வாக, பாடுகின்ற இரவலர்கள் வேண்டினால் வெளியன் வேண்மான் ஆஅய் எயினன் வெள்ளிய கொம்பினையுடைய தனது தலைமை யானையை வழங்கி மகிழ்வான் எனப் பரணர் (அகம்.208:1-5) பாடியுள்ளார்.

முற்கூறிய இரண்டு பாடல்களிலும் களிறுகளை வழங்குவதால் புரவலன் மகிழ்வான் எனப் பாடப்பட்டுள்ளது. ஆனால் இப்பாடலில் தனது தலைமை களிற்றினையே ஆய் வழங்கி மகிழ்வான் எனப் பாடப்பட்டுள்ளது. புரவலர்களே மகிழ்கிறார்கள் எனில் இரவலர்களுக்கு இக்கொடையினால் ஏற்படும் மகிழ்வு என்னவாக இருக்கும் என்ற வினா ஏற்படுகிறது.

புரவலன் போரில் புண்பட்ட யானைகளின் புண்களை ஆற்றி அவற்றின் துயர் நீக்கினான். அந்த யானைகளை இரந்தவர்களுக்கு வறுமை நீங்கி வாழுமாறு கொடுத்தான். பொதுவாகக் களிற்றுக்கொடை உயர்வாகவும், புரவலன் சார்ந்தும் பாடப்பட்டுள்ளன. ஆனால், பதிற்றுப்பத்தில் (பதிற்.76:6-8) யானைகள் இரவலர்கள் வாழ்வதற்காக வழங்கப்பட்டதாக நேரிடையாகப் பாடப்பட்டுள்ளது.

**இரவலன் விரும்பிய களிற்றுக் கொடைகள்**

உயர்வான கோடினையுடைய கொல் யானையைப் பெறினும் நேராகப் பார்க்காமல் தரும் பரிசிலைக் கொள்ளேன் எனப் பெருஞ்சித்திரனார் (புறம்.159:22-23) பாடியுள்ளார். இப்பாடலில் கோடுடைய யானை உயர்ந்த பரிசாகப் புலவரால் பாடப்பட்டுள்ளது. மற்றொரு பாடலில், மேகம் எவ்வாறு கடலிலிருந்து நீரை முகறாமல் மீளாதோ, அவ்வாறே தேருடன், களிறு இன்றிப் பரிசிலர் கூட்டம் பெயராது எனப் பெருஞ்சித்தனார் (புறம்.205:11-14) பாடியுள்ளார்.

போர்க்களத்தில் வெற்றிபெற்ற யானையைப் பாவலர்க்கு மிகக் கொடுப்பவனாகக் குமணனைப் பெருஞ்சித்திரனார் (புறம்.165:6-9) பாடியுள்ளார். வெற்றி பெற்ற யானை போரில் காயம் அடைந்திருக்கும்; அது மீண்டும் போரில் ஈடுபடுத்த இயலாத நிலைக்கு மாறியிருப்பதால் புரவலன் இரவலனுக்கு வழங்கியிருக்கக்கூடும். பதிற்றுப்பத்தில் (பதிற்.76:6-8) இருந்தும் இக்கருத்தினையே பெறுகிறோம். இவ்வாறான யானைகள் இரவலனின் பயணத்திற்கும் பாதுகாவலுக்கும் பயன்பட்டிருக்கலாம்.

சேரன் செங்குட்டுவன் பகைவரை வேரோடு பொருதழித்தும் அதனோடமையானாயினான். அதனால் அவன் பகவரை நாடிச் சென்று பொருந் தோறும், பரிசில் மாக்கள் களிறு பல பரிசிலாகப் பெற்றும் அமையாது அவன் போர்ச்சிறப்பைப் பாடுதலே செய்வாராயினர். போர்ச் சிறப்பை மீண்டும் மீண்டும் பாடுதல் என்பது பரிசிலரின் மிகுதியான தேவை களிறு என்பதைப் பதிற்றுப்பத்துக் (பதிற்.47:1-2) காட்டுகிறது.

போர்க்களத்தில் எதிரிகளை அழிக்கும் ஆற்றல் கொண்டதும், அதோடு வேண்டுந் தொழில்களைச் செய்தற்கு விரும்பும் விருப்பத்தினை உடையதுமான யானைகள் பலவற்றை நார்முடிச் சேரல் (பதிற்.40:21-31) போர்க்களத்தின் வழங்குவன். ஆதலால் செல்வாயாக எனப் பாணன் விறலியை ஆற்றுப்படுத்துகிறான். அதாவது போர்க்களத்தில் பகைவர்களை அழிப்பதனையும், சொல்வதனையும் கேட்பதாகிய இரு செயல்பாடுகளையுடைய களிறுகளைப் புரவலன் வழங்குவான் எனப் பாடப்பட்டுள்ளது.

இரவலனின் முதல் விருப்பம் களிறு என்பதை உணரமுடிகிறது. களிறு வேண்டுந் தொழில்களைச் செய்யும் வல்லமையுடையது. இதனால் காடு மலைகளைக் கடந்து பயணிக்கும் அலைகுடிகளாகிய இரவலர்களுக்குப் பாதுகாப்பாகவும் பொருள்களைச் சுமந்து செல்வதாகவும் யானைகள் இருக்கும் என்பதனால் யானையைப் பரிசில் பொருளாக அவர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

புறநானூற்றுப் (புறம்.164:1-8) பாடலில் இரவலர் பெருஞ்சித்திரனார் தன்னுடைய குடும்ப வறுமை நிலையைப் பாடியுள்ளார். தன் வறுமையைப் பாடிய பெருஞ்சித்திரனாரே, மற்றொரு புறநானூற்றுப் (புற.162) பாடலில் கொடை வழங்காத புரவலனின் காவல் மரத்தில் களிற்றைக் கொடையாகக் கட்டி வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார். இவரின் இச்செயல்

வழி இரவலனின் வாழ்வியலுக்குக் களிற்றுக்கொடை இன்றியமையாததாக இருந்ததனையும் களிறு வழங்குதலே பெருவழக்காக இருந்ததையும் காணமுடிகிறது.

### குடிமக்களின் பண்டமாற்றில் யானைத் தந்தம்

வேடுவர்களோ மறவர்களோ போர் வீரர்களோ யானைக் கன்றுகளையும், பெரிய யானையின் கோடுகளையும் பண்டமாற்றாகப் பயன்படுத்திய செய்தி சங்க இலக்கியத்தில் (குறுந்.258:3-5), (அகம்.83:3-9), (அகம்.61:7-13), (அகம்.245:8-13), (குறுந்.100:3-5), (பதிற்.30:10-13) பரவலாகக் காணக்கிடைக்கின்றன. இச்செய்திகள் யானையும் யானைத் தந்தங்களும் மானிடர்களின் வாழ்வியலுக்குப் பயன்பட்டிருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துகின்றன.

### இரவலர் பண்டமாற்றுக் குறிப்புகள்

இரவலர்கள் தூண்டிலில் பிடித்த மீன்களை விற்றுப் பிழைத்துள்ளதாகச் சில இடங்களில் கூறப்பட்டுள்ளது. இரவலர்கள் மீனுக்கான பண்டமாற்றுப் பொருள்களாகப் பருப்பு (ஐங்.47:1-3), வெண்ணெல் (ஐங்.48:1-3), நெல் (ஐங் 49:1-2), மற்றும் பழையநெல் (அகம்.126:7-12) போன்றவைகளைப் பெற்றதாகச் சங்க இலக்கியப் பாடல்கள் கூறுகின்றன.

தாமான் தோன்றிக்கோனைப் பாடிய ஐயூர் முடவனார் தூண்டிலாற் பிடித்த மீனை விற்று கிணைமகள் சமைத்த புளிங்கூழ் உணவையுடையேன் (புறம்.399:15-17) என இரவலன் நிலையைப் பாடுகிறார். இரவலன் என்பவன் தன் வறுமையையும், புரவலனின் கொடை மற்றும் வீரத்தையும் மட்டுமே பாடக் கூடியவனாகவே சங்க இலக்கியம் முழுமையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளான். இரவலர்கள் பண்டமாற்று செய்யக் கூடியவர்கள் என்பதனை மேற்கூறிய பாடல்கள் உறுதிப்படுத்துகின்றன. ஆனால் அவர்கள் கொடையாகப் பெற்ற களிறுகளை என்ன செய்தார்கள் என்ற கேள்வி எழுகிறது.

இரவலர்கள் பெற்ற களிறுகள் அல்லது பெற விரும்பிய களிறுகள், 'ஏந்திய கோடு, வெண்கோடு, உயர்ந்த மருப்பை உடைய யானை, குன்று போன்ற யானை, கொல் களிறு......' எனச் சுட்டப்படுகின்றன. ஒன்றிரண்டு இடங்களில் மட்டுமே இளங்களிறுகள் (அகம்.113:3-4), (புறம்.135:10-13) வழங்கியதாகப் பாடப்பெற்றுள்ளன. இதே போன்றுதான் வேடர்கள், மறவர்கள், போர் வீரர்கள் பண்டமாற்று செய்த யானைகள், யானைக் கோடுகள் (அகம்.83:3-9), (அகம்.61:7-13), (அகம்.245:8-13), (குறுந்.100:3-5), (பதிற்.30:10-13), (பதிற்.68:9-11) குறித்தும் பாடப்பட்டுள்ளன. இதனால், இரவலர்களும் களிறுகளைப் பண்டமாற்றினாலோ விற்றோ தங்கள் வாழ்வியலுக்குப் பயன்படுத்தியிருக்க வேண்டும் எனக் கூறமுடிகிறது.

இரவலர்கள் புரவலர்கள் வழங்கிய களிறுகளைப் பண்டமாற்று செய்ததற்கான பாடல்கள் சங்க இலக்கியத்தில் எங்குமே இல்லை. காரணம், இரவலர்கள் தங்கள் வறுமை நிலையையும், புரவலர்களின் பெருமைகளையும் பாடுவதற்கு உரிமையுடையவர்கள். புரவலர்கள் வழங்கிய களிற்றுக் கொடையைப் பண்டமாற்றியோ விற்றோ பிழைப்பு நடத்தினோம் எனப் பாடுவது புரவலர்களை இழிவு படுத்துவதற்கு சமமாகும். எனவே, இரவலர்கள் பெற்ற கொடைப் பொருள்கள் குறித்தான பண்டமாற்றுப் பாடல்கள் சங்க இலக்கியங்களில் எங்கும் இடம்பெறவில்லை எனலாம்.

### முடிவுரை

சங்க இலக்கியத்தில் புரவலர்கள் வழங்கிய கொடைகளிலும், இரவலர்கள் விரும்பிய கொடைகளிலும் களிறு தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்துள்ளதைக் காணமுடிகிறது. இளம் யானைகளும், யானைகளின் உயர்ந்த கோடுகளும் பண்டமாற்றுப் பொருள்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பண்டமாற்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ள இளம் யானைகளும், யானைகளின் உயர்ந்த கோடுகளுமே புரவலன் வழங்கிய, இரவலன் விரும்பிய களிற்றுக் கொடைகளில் கூறப்பட்டுள்ளன. எனவே, இரவலர்களும் தாங்கள் பெற்ற களிற்றுக் கொடைகளை பண்டமாற்றுக்குப் பயன்படுத்தியிருக்கலாம். அதோடு தங்களின் வழித்துணையாகவும் பொருள்களைச் சுமந்து செல்வதற்காகவும் யானைகள் பயன்பட்டிருக்கிறன என்பதைச் சங்க இலக்கிய பாடல்களின் வழி உணரமுடிகிறது.

### துணை நின்ற நூல்கள்


1. அகநானூறு, துரைசாமிப்பிள்ளை. ஔவை சு. (உ.ஆ.), தமிழ்மண் அறக்கட்டளை,சென்னை - 17.
2. ஐங்குறுநூறு, துரைசாமிப்பிள்ளை. ஔவை சு. (உ.ஆ.), தமிழ்மண் அறக்கட்டளை,சென்னை - 17.
3. குறுந்தொகை, சோமசுந்தரனார். பொ.வே. (உ.ஆ.), 2007, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 18.
4. தமிழ் வீரநிலைக் கவிதை, கைலாசபதி.க., பாலசுப்பிரமணியன். கு.வெ. (மொ.பெ.), 2021, குமரன் புத்தக இல்லம், கொழும்பு - 6.
5. நற்றிணை, துரைசாமிப்பிள்ளை. ஔவை சு.(உ.ஆ.), தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை - 17.
6. பதிற்றுப்பத்து, துரைசாமிப்பிள்ளை. ஔவை சு. (உ.ஆ.), தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை - 08.
7. புறநானூறு, துரைசாமிப்பிள்ளை. ஔவை சு. (உ.ஆ.), தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை- 17.


●


கட்டுரையாளர், முனைவர் பட்ட ஆய்வாளர்,
சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்,
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி.

நூல்
அறிமுகம்




புகையிலை வரலாறும் வழக்காறும்
இரா.காமராசு, உயிர் பதிப்பகம்
நூலின் விலை: 200 | Mob:9080514506

# புகையிலை குறித்த காட்சி சித்திரம்

எச்.ஹாமீம் முஸ்தபா

அன்புக்குரிய தோழமை இரா.காமராசிடமிருந்து தமிழுக்குக் கிடைத்திருக்கும் புதுவரவு புகையிலை வரலாறும் வழக்காறும் என்னும் நூல்

என்னுடைய சிறுவயது பருவத்தில் பலசரக்குக் கடைகளில் ஒரு சரக்காக வெத்தலை பாக்கு விற்பனையும் இருக்கும். கடையின் முன்னர் இருக்கும் தூணில் சுண்ணாம்பு டப்பா கட்டிப் போடப்பட்டிருக்கும். யாழ்ப்பாண புகையிலையை வெட்டிக்கொடுக்க முரட்டு கத்தரிக்கோல் ஒன்று இருக்கும்.

புகையிலையின் நிறத்தைவிடவும் அடர்த்தி நிறைந்ததாக அதன் நிறம் இருக்கும். கிராமங்களில் தெருவில், ஊரடையில் அருகிலிருக்கும் வீடுகளில் வெத்தலைப்பாக்கு இரவல் கேட்கும் வழக்கம் பரவலாக இருந்தது.

பெரும்பாலும் சுண்ணாம்பு மட்டும் இரவில் இரவல் கொடுப்பதைத் தவிர்த்துவிடுவார்கள். அப்படியே கொடுத்தாலும் கத்தி போன்ற உலோ கங்களில் எடுத்துக் கொடுப்பார்கள். இரவுக்கும் சுண்ணாம்புக்கும் மனிதர்களுக்கு தொந்தரவு கொடுக்கும் பெண் தெய்வங்களுக்கும் இடையிலான உறவு குறித்த அழுத்தமான நம்பிக்கை பரவலாக இருந்தது.

எங்கள் பெற்றோர்க்கு வெற்றிலை வழக்கம் இருந்ததால் சிறுவயது பருவத்தில் என்னுடைய கரங்களில் அதிகம் புழங்கிய ஒன்றாக புகையிலை இருந்தது. அதிலும் எங்களுடைய தந்தையார் வெற்றிலையுடன் யாழ்ப்பாண புகையிலை சேர்த்துக்கொள்வார். தாயார் அங்கு விலாஸ் புகையிலை சேர்த்துக் கொள்வார். எனவே இரண்டும் நன்கு அறிமுகம். இரண்டின் வாசனையும் அதுபோல.

இந்தக் குறிப்பினை எழுதும்போது யாழ்ப்பாண புகையிலை வாசனையும் அங்குவிலாஸ் புகையிலையின் வாசனையும் நாசிக்குள் வந்து செல்கின்றன. யாழ்ப்பாண புகையிலையின் வாசமே ஒருவிதமான போதை ஏற்படுத்தும். இதற்கு நேர் எதிர்நிலையில் அங்கு விலாஸ் புகையிலை வாசனை. ஒருவிதமான ஒவ்வாமையை சிலருக்கு ஏற்படுத்தும். புகையிலையின் சேர்மானப் பொருட்கள் தரும் வாசனையும் புகையிலையைப் பொதிந்திருக்கும் வாழைத்தடையின் வாசனையும் கலந்துகட்டிய மணம் அங்குவிலாஸின் மணம். தட்டை புகையிலை என்றுதான் குறிப்பிடுவார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் திக்கணங்கோடு என்னும் ஊர் இருக்கிறது. அரிஷ்டம் தயாரிக்கும்

இடம். அரிஷ்டம் என்பது சாராயம் இல்லை. கள்ளும் இல்லை, டாஸ்மாக் அயிட்டமும் இல்லை. கிட்டத்தட்ட அவற்றோடு ஒப்பிட்டு பேசப்பட்டாலும் அரிஷ்டம் முற்றிலும் வேறானது. போதை சார்ந்தது என்றாலும் மருத்துவ குணம் கொண்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரசவித்த பெண்களுக்கு கொடுக்கும் ஒன்றாக அரிஷ்டம் இருந்தது. எளிய உழைக்கும் மக்களின் போதையின் தேவையை அரிஷ்டம் ஓரளவுக்கு நிறைவு செய்தது. அங்குவிலாஸ் புகையிலையின் மணம் கிட்டத்தட்ட அரிஷ்டத்தின் மணத்தை ஒத்திருக்கும்.

கடைகளில் போய் யாழ்ப்பாண புகையிலை வாங்கும் போது கடைக்காரர் முரட்டு கத்தரி கொண்டு நறுக்கித் தரும்போது தலைமுழுவதும் சடை பிடித்திருக்கும் பெண்ணின் சடையில் ஒரு துண்டை வெட்டித் தருவதுபோல் இருக்கும். புகையிலையின் இடையில் இருக்கும் நட்டு இன்னும் வித்தியாச மானது. காய்ந்த சுக்குபோல் இருக்கும் நட்டு வயதான பாட்டிகளுக்கு விருப்பமானதாக இருந்தது என்று நினைவு.

இரா.காமராசு அவர்களின் புகையிலை வரலாறும் வழக்காறும் என்னும் நூலை வாசிக்கும்போது இந்த நினைவுகள் எல்லாம் மீண்டும் மேலெழும்பி வந்தன. பண்பாடு தொடங்கி நன்றும் தீதும் வரை ஏழு இயல் களில் காமராசு அவர்கள் விரிவாக புகையிலை குறித்த காட்சி சித்திரத்தை வாசகன் மனக்கண்ணில் வரைந்து காட்டுகிறார். தாவர வழக்காறுகள் என்னும் வரையறுக்குள் நின்றுகொண்டு புகையிலை குறித்த பல்வேறு தரவுகளைத் தருகிறார். புகையிலையின் தாவரக்குணம், அதன் குடும்ப வரலாறு என்று ஆரம்பிக்கும் நூலாளர் புகையிலை நாகரிகச் சமூகம் அறிந்து கொண்டது. நாகரிகப்படுதலுக்கு முந்திய சமூகம் அதனை எப்படி தன்னுள் ஒன்றாகக் கொண்டிருந்தது. நாகரிகப்பட்ட மனித சமூகம் புகையிலையை பொருள்மதிப்புக்குரிய ஒன்றாக மாற்றியது என்பது பற்றி எல்லாம் விரிவாகப் பேசுகிறார்.

ஐரோப்பிய காலனிய மயமாக்கத்தில் எப்படி புகையிலையும் காலனியப்பட்டது, தமிழ்நாட்டுக்கு புகையிலையின் வருகை அதன் பயிர் உற்பத்தி முறை அதற்கான தட்பநிலை என்று அமைகிறது. புகையிலையை சந்தைப்படுத்த மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளையும் நூலில் விவாதிக்கிறார். குறிப்பாக திண்டுக்கல் அங்குவிலாஸ் நிறுவனத்தார் மேற்கொண்ட விளம்பர முறை தனித்துவமாக இருக்கிறது.

நூலின் மற்றொரு பகுதி இலக்கியம் சார்ந்தும், வழக்காறுகள் சார்ந்தும், நாட்டார் வழிபாடுகள் சார்ந்தும் புகையிலை சார்ந்த பதிவுகளை தொகுக்கிறார். குறிப்பாக சிற்றிலக்கிய வகைமை உருவானபிறகு அதன் பாடுபொருள்களுள் ஒன்றாக புகையிலை மாறியதைப் பதிவு செய்கிறார். பாரதியார், பாரதிதாசன் வரையிலும் அது எப்படி நீடித்துவந்தது என்பதும் நூலில் பதிவாகியுள்ளது. ‘பொடி போட்டு வாழ்வாரே வாழ்வார்’ என்று சிறுவயதில் கேட்ட குறள் சார் ஒலிக்குறிப்பும் இப்போது நினைவில் வருகிறது.

பொடி, சிகரெட், பீடி, சுருட்டு என்று புகையிலையுடன் தொடர்புடைய பல்வேறு உபப்பொருட்களை நூலில் விவரிக்கிறார். மிக நீண்ட கடற்கரையைக் கொண்ட குமரி மாவட்டத்தில் மீனவர்கள் மத்தியில் சுருட்டு பிடிக்கும் வழக்கம் அதிகமாக இருந்தது. எங்கள் ஊரில் வயதான பெரிய வர்கள் சுருட்டு பிடித்தார்கள் .பொடி போடும் வழக்கம் ஆண்களிடமும் பெண்களிடமும் இருந்தது. பெண்கள் வாயிடுக்கில் பொடியை அழுத்தி வைப்பார்கள். நூற்றில் ஐம்பது ஆண்களுக்கு பயன் படுத்தும் கைக்குட்டையில் பொடிவாசம் அடிக்கும்.

சிகரட்டைப் பொறுத்தவரை வேறொரு அனுபவம் எங்களுக்கு இருந்தது. உள்ளூரில் கிடைக்கும் சிஸ்ஸர்,பனாமா, கோல்டு பிளாக், வில்ஸ், சார்மினார், பாசின்ஷோ பிராண்டுகள் போக வெளி நாடுகளின் ரோத்மென்ஸ், 555 சிகரெட்டுகளும் அந்தக் காலத்தில் நன்கு அறிமுகம். எங்களூரில் பகுதிக்குப் பகுதி ஆண்கள் அப்போது சிங்கப்பூர் வாசிகளாக இருந்தது இதற்கான பெருவாய்ப்பாக அமைந்தது. வெளிநாட்டு சிகரெட்டுகளில் இருந்து வெளியேறிய புகையின் மணத்தை இப்போது யோசிக்கும்போது காமராசு அவர்கள் நூலில் குறிப்பிடும் விர்ஜினியா புகையிலை ஓர்மைக்கு வருகிறது. அந்த சிங்கப்பூர் சபராளி மேனியில் பூசியிருக்கும் அத்தரின் வாசனையும் அவர் உபயோகிக்கும் வெளிநாட்டு சிகரெட் புகையின் வாசனையும் கலந்த மணம் அலாதியானது.

கேரளத்துடன் நெருக்கமாக இருக்கும் காரணத்தாலோ என்னவோ கன்னி யாகுமரி மாவட்டத்தின் கல்குளம் விளவங்கோடு வட்டாரத்தில் பெண்கள் பீடி வலிக்கும் வழக்கம் குறிப்பாக முஸ்லிம் சமூகத்து வயதான பெண்கள் பீடி வலிப்பார்கள். தீப்பெட்டி, லைட்டர் அதிகம் புழக்கப்படாத அந்தக்காலத்தில் அடுப்பு நெருப்பில்தான் பாட்டிகள் பீடி பற்றவைப்பார்கள். முன் வீட்டிலிருந்து அடுக்களை வரை சென்று பீடியைப் பற்றவைக்க சோம்பல் பட்ட பாட்டிகள் பெயர்த்திகளிடம் பீடியை கொடுத்து பற்ற வைத்துக்கொண்டு வரச்சொல்வார்கள். இந்த இடைவெளியில் பெயர்த்திகளும் பீடியை இரண்டு வலிப்பு வலிப்பார்கள்.

●

கட்டுரையாளர், எழுத்தாளர்.

கட்டுரை



# திருக்குறளும் மநுதரும சாஸ்திரமும் சித்திரிக்கின்ற பெண் பற்றிய மதிப்பீடுகள்

முனைவர் ஆ. நளினி சுந்தரி

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சங்க காலத்திலே வைதிக சமயமும், அவைதிக சமயங்களான சமணமும், பௌத்தமும் கருத்தியல்ரீதியில் சமூக வாழ்க்கையில் அறிமுகமாகி விட்டன. அன்றைய காலகட்டத்தில் இனக்குழுச் சமூக வாழ்க்கைச் சூழல் சிதைவடைந்து, குறுநில மன்னர்களுடன் மூவேந்தர் ஆதிக்கம் செலுத்துகிற அரசியல், பரவலாகிக்கொண்டிருந்தது. தமிழ் மொழியினால் அடையாளப்படுத்தப்படுகிற நிலவெளியானது விரிவடைந்து, அரசியலுடன் தொடர்புடையதாக மாறியது. தாய்வழிச் சமூக அமைப்பு சிதலமாகி, குடும்ப நிறுவனத்தை வலியுறுத்திடும் சங்கப் பாடல்கள், பெண் பற்றிய புதிய சொல்லாடல்களை உருவாக்கின. புறத்தில் நிலமும் அகத்தில் பெண்ணுடலும் ஆணின் துய்ப்புக்களாக உருவாக்கப்பட்ட சூழலில், பெண்ணுக்கான இலக்கணம் தனியாக வகுக்கப்பட்டது. குடும்ப அமைப்பு முன்னிலைப்படுத்தப்பட்டபோது, புதிதாக உருவாக்கப்பட்ட பெண் பற்றிய வரையறைகளும் பிம்பங்களும் தனித்து விளங்கின. அதேவேளையில் அரசியல் அதிகாரத்திற்குச் சார்பான உடல்களைத் தயாரிக்க வேண்டிய சூழலில் அறம் என்ற பெயரில் புதிதாக உருவாக்கப்பட்ட விதிகளும், தண்டனைகளும் வலியுறுத்தப்பட்டன.

அன்றைய மாறிவரும் அரசியல் சூழலில் தமிழர் வாழக்கையைச் செம்மைப்படுத்துவதற்காக எழுதப்பட்ட அற நூல்களில் திருக்குறள் தனித்துவமானது. அற நூல் என்று கொண்டாடப்படுகிற திருக்குறள் விதிக்கிற அறங்களின் பின்னர் பொதிந்திருக்கிற அரசியலைக் கண்டறிய வேண்டியுள்ளது. அதேவேளையில் இந்தியா முழுவதும் அறம் என்ற பெயரில் மநு தருமம் முன்வைத்துள்ள கருத்துகள், ஒப்பீட்டு நிலையில் ஆய்விற்குரியன. வைதிக சநாதனத்தை வலியுறுத்துகின்ற மநு தரும சாஸ்திரம், அரசியல்ரீதியில் முக்கியமான பிரதியாகும். சநாதன தர்மத்தை முன்னிறுத்தி, பிறப்பின் அடிப்படையில் உயர்வு, தாழ்வு கற்பித்து, பால் அடிப்படையில் பெண்ணுடலை இழிவாகக் கற்பிக்கிற வைதிக சநாதனம், பார்ப்பனர்களைச் சமூக அடுக்கின் உச்சியில் வைத்திருக்கிற அரசியல், இன்றளவும் தொடர்ந்திட மநு தருமம் அடிப்படையாக இருக்கிறது. திருவள்ளுவர் மனிதர்களின் மேம்பாடு குறித்து அக்கறைகொள்ள, மநுவோ பிறப்பு, பால் அடிப்படையில் வருணாசிரம சநாதன சமூக மேலாதிக்கம் நிலவிட வழி வகுத்துள்ளார்.

திருக்குறள், மநு தருமம் ஆகிய இரு வேறுபட்ட அற நூல்களின் பின்புலத்தில் செயல்படுகிற அரசியல் அதிகாரத்தைக் கட்டுடைத்துக் கண்டறிந்திடும் முயற்சி, இன்றைய காலகட்டத்தின் தேவையாகும். குறிப்பாகப் பெண் பற்றிய மதிப்பீடுகளில் திருக்குறளும் மநு தரும சாஸ்திரமும் சித்திரிக்கின்ற விவரணைகள், ஒப்பீட்டளவில் தமிழர்களுக்கும் வைதிக சநாதனவாதிகளுக்கும் இடையில் நிலவுகின்ற ஒற்றுமை வேற்றுமைகளைச் சுட்டுகின்றன.

சங்க காலத்திற்குப் பிந்தைய நூலான திருக்குறள், பண்டைத் தமிழர் சமூகரீதியில் நெறியான வாழ்க்கை வாழ்வதற்கான அறங்களைக் குறிப்பிடுகின்றது. இன்றைய சட்டங்களின் தொகுப்புபோலத் திருவள்ளுவர் வரையறுக்கப்பட்ட இறுக்கமான விதிகளை வலியுறுத்தவில்லை. சராசரியான மனிதன் முயன்றால் அன்றாட வாழ்க்கையில் பின்பற்ற முடிகின்ற ஒழுங்குகள்தான் குறள்களாக வெளிப்பட்டுள்ளன. மனித சமுதாயம் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் எனத் திருவள்ளுவர் தொகுத்துத் தந்துள்ள கருத்துகள், காலந்தோறும் தமிழர் வாழ்க்கையைச் செம்மையாக்கிட முயன்றுள்ளன. திருக்குறள், தமிழரின் சட்ட நூல் என்பதைவிட அறம் சார்ந்த கருத்துகளை மக்களிடம் பரப்பி, மனமாற்றத்தை ஏற்படுத்த முயன்ற நூல் என்பதுதான் சரியானது.

வைதிக சநாதன மரபிலான நெறிகளை வலியுறுத்தும் மநு தருமம், இறுக்கமான விதிகளைக் கொண்டுள்ளது. திருக்குறளும் மநு தருமமும், அடிப்படையில் எதிரெதிர் நோக்கங்களைக் கொண்டவை. திருக்குறள் தமிழர்களின் நலன்களை முன்னிறுத்துகிறது. மநு தருமம், மக்களை வருண அடிப்படையில் பார்ப்பனர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என நான்கு பிரிவுகளாகப் பிரித்து, பார்ப்பனர்களின் நலன்களுக்கு மட்டும் முன்னுரிமை அளித்துளது. இந்தியாவெங்கும் வைதிக சநாதனத்தின் சமூக மேலாதிக்கத்தை வலுவாக நிறுவிட முயன்ற மநு தருமம், பருண்மையான வைதிக சமய அடிப்படை அரசியல் பின்புலமுடையது. இந்தியா என்ற தொன்மத்தை உருவாக்கியதுடன், அதனை நிலை நிறுத்திடும் வழக்காறுகளை வடிவமைத்ததில் மநு தருமத்தின் பங்குக் கணிசமானது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் வடிவமைக்கப்பட்டதில்கூட, மநு தருமம் நுண்ணிய பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக இந்து சமயம் என்ற பெயரில் குறிப்பிட்ட ஆகமங்கள், சாஸ்திரங்கள் போன்றனவற்றை நடைமுறைப்படுத்திட மநு தருமம் குறிப்பிட்டுள்ள விதிகள், இன்றளவும் உச்ச நீதிமன்றத்தினால் வலியுறுத்தப்படுவது கவனத்திற்குரியது.

பண்டைக்காலத்தில் வைதிக சமயத்தின் ஆதிக்கம் ஏற்படுவதற்கு வழி வகுக்கும் வகையில், பிறப்பு, பால் அடிப்படையில் மக்கள் பிரிக்கப்பட்டனர். இதனால் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வான சமூகத்தினை நியாயப்படுத்துமாறு வர்ணம், ஆசிரம தருமங்கள் எழுதப்பட்டன. இத்தகைய தருமங்களைத் தொகுத்தவர் மநு ஆவார். சமூக அடுக்கில் பார்பனர்களின் உச்சநிலையையும் ஆதிக்கத்தையும் பிற சமூகத்தினர் ஏற்றுக்கொள்வதற்கான பின்புலத்தினை மநு தொகுத்த மநு தரும சாஸ்திரம் உருவாக்கியது. இந்தியாவை ஆண்ட பெரும்பாலான மன்னர்கள் மநு தருமம் வகுத்த விதிகளின்படி அரசாண்டனர். பிறப்பின் அடிப்படையில் மேல்-கீழ், சுத்தம்- அசுத்தம் என விதிகளை வகுத்துத் தீண்டாமையைக் கற்பித்ததில் மநு தருமத்தின் பங்குக் கணிசமானது. சாதிய உயர்வுதாழ்வு இன்றுவரை இந்தியாவில் ஆதிக்கம் செலுத்துவதற்கு மநு தருமம் முக்கியக் காரணியாக விளங்குகிறது. ஒருவகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் போலவே மநு தருமம், கடந்த நூற்றாண்டின் முற்பகுதியிலும் இந்தியாவில் ஆதிக்கம் செலுத்தி வந்தது.

மநு தரும சாஸ்திரமானது ஆசாரப் பகுதி, விவகாரப் பகுதி, பிராயச்சித்தப் பகுதி ஆகிய மூன்று பெரும் பகுதிகளைக் கொண்டது. மேலும் அது படைப்பும் அதன் பான்மையும், கல்வியும் கடமைகளும், இல்லறவியல், பொருளியலும் தனிமனித ஒழுகும், உணவு, சுத்தி மற்றும் மாதர், வானப்பிரஸ்தம், அரச நீதி, நீதி நெறியும் சட்டமும்,

ஆண் பெண்களின் அறம், கலப்பு ஜாதிகள்- ஆபத்து தருமம், குற்றங்களின் கழுவாய், வினைப்பயன் எனப் பன்னிரண்டு இயல்களாக விரிந்துள்ளது.

சமூகத்தில் பெண்களின் நிலை, மதிப்பீடு குறித்த கருத்துகள், அறம் அல்லது நீதியைப் போதிக்கின்ற நூல்களில் அற நூல்கள் முக்கிய இடம் பெறுகின்றன. பால் அடிப்படையில் பெண்ணை இரண்டாம் தரத்தினவளாகக் கருதுகின்ற பொதுப்புத்தியைப் பொதுவாக நீதி இலக்கியம், காலந்தோறும் நகலெடுக்கின்றது. அதில் பெண் எப்பொழுதும் ஆணின் கண்காணிப்பிற்குள் இருக்கப்பட வேண்டியவள் என்ற பார்வை வலியுறுத்தப்படுகின்றது. திருக்குறளும் மநு தருமமும் உருவாக்கியுள்ள பெண் பற்றிய மதிப்பீடுகள், இன்றைக்கும் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

பெண் பற்றி அரசியல்ரீதியில் கருத்தியலைப் பொதுப்புத்தியாக வடிவமைத்ததில் மநு முதன்மையானவர். பெண்ணின் இயல்புகளாக மநு விவரிக்கும் கருத்துகள் முக்கியமானவை. அவை: "மாதர்க்குப் பிறவியைத் தூய்மையாக்கும் சம்ஸ்காரங்கள், மந்திரப்பூர்வமாகச் செய்தல் யாதுமில்லை. இவர்களுக்கு வெள்ளை உள்ளமும் இல்லை. பாவம் நீக்கும் மந்திர உபதேசமும் கிடையாது. எனவே பொய்யைப்போல மாசு வடிவினராக மாதர் இயன்றிருக்கின்றனர். *(மநு.இ.9:17)* மநு தருமம் பெண்களின் தனிப்பட்ட அடையாளத்தையும் சுயமான செயல்பாடுகளையும் ஏற்கவில்லை.

"பெண் இளமையில் தந்தையாலும் பருவகாலத்தில் கணவனாலும் முதுமையில் மகனாலும் காக்கப்பட வேண்டியவர். ஆதலால் பெண் எப்பொழுதும் தன்னிச்சையாக இருக்கக் கூடாதவர்'' *(மநு.இ.9:3)*. பெண், தனித்து இயங்கும் திறன் அற்றவள் என்ற நிலையில் எப்பொழுதும் ஆணைச் சார்ந்திருக்க வேண்டும் என வலியுறுத்துவது, பால் அடிப்படையில் ஒடுக்குவதாகும்

பெண்களை ஒழுக்கக்கேடானவர்களாகவும் மயக்கும் குணம்கொண்டவர்களாகவும் மநு தருமம் சித்தரிக்கிறது. பாலியல்ரீதியில் ஒழுக்கக்கேடு நடந்தால் அதில் ஆணுக்குப் பொறுப்பு எதுவுமில்லை என்பது போல விவரிக்கும் மநு தருமம், பெண்களை இழிவுபடுத்துகிறது.

''தங்கள் அலங்காரத்தால் மனிதரைக் கவரும் தன்மை பெண்களின் இயல்பாகையால் அறிந்தோர் பெண்களிடம் கவனக்குறைவாக நடந்துகொள்ள மாட்டார்கள்.''*(மநு.இ.:2:213)*.

''எந்தப் பருவத்தினளாயினும் தனது இல்லறத்திலேகூட எந்தப் பெண்ணும் தன்னிச்சையின்படி எச்செயலும் செய்யக்கூடாது'' *(மநு. இ.5:147)*

''புலன்களை அடக்கியவனாயினும் அறிவிலியாயினும் அவர்களைத் தங்களது தொடர்பால் காமக்குரோதமுள்ளவனாகச் செய்வர் பெண்கள்''. *(மநு.இ.2:214)*.

''பெரும்பாலும் பெண்கள் கற்பிலார் என்றே பெரிதும் பல நூல்களிலும் கூறப்பட்டிருக்கிறது.'' *(மநு. இ.9:19)*

பெண்கள் கற்பிலாதவர்கள் என்பதும் அப்பாவியான ஆண்களை மயக்கிக் காமத்தில் சிக்க வைக்கும் இயல்புடையவர்கள் என்ற மநுவின் கூற்று, வக்கிரமானது. பெண்களை மனித உயிராகக்கூட மதிக்காத மநு தர்மம், கணவன் -மனைவி ஆகிய இருவருக்கும் இடையில் நிலவ வேண்டிய உறவு பற்றி பெண்களுக்கு மட்டும் அறிவுரை வழங்குகிறது. ஆணின் இழிவான நடத்தை குறித்துக் கள்ள மௌனம் காக்கிறது. குறிப்பாகப் பெண் தனித்து இயங்கிடும் ஆற்றல் மிக்க மனித உயிர் என்றும் அவள் தன்னிச்சையாகச் செயல்படும் திறன் மிக்கவள் என்ற நிலையில் பெண்ணின் மனதை முற்றிலும் புறக்கணிக்கிறது.

"கணவன் சூதாடுகிறவனாயினும் குடிகாரனாக இருந்தாலும் நோயாளியாயினும் மனைவி அவனுக்குச் செருக்குற்றுப் பணி புரியாமலிருந்தால் அவளுக்கு அழகு செய்தல், ஆடை, படுக்கை இவற்றை மறுத்து மூன்று மாதம் விலக்கி வைக்கவும்''.*(மநு.இ.9:78)*

"இழிநடத்தை, பரத்தையர் தொடர்பு, நற்குணமின்மை இவற்றையுடையவனாயினும் கற்புடைய பெண் தன் கணவனைத் தெய்வமாகப் பேணுக.''*(மநு. இ.5:154)*

கற்புடைய பெண், கணவன் சீரழிந்த பொறுக்கியாக இருந்தாலும், அவனைத் தெய்வமாகப் போற்ற வேண்டும் என்ற மநுவின் அறிவுரை, பெண் பற்றிய அன்றைய சமூக மதிப்பீட்டின் வெளிப்பாடாகும்

நான்கு வருணப் பாகுபாடுகள் சமூகத்தில் நிலவ வேண்டியது அவசியம் என வலியுறுத்தும் மநு, பார்ப்பனர் சமூக அடுக்கினில் பெறுகின்ற உயர்ந்த இடத்தை உறுதி செய்வதற்குப் பெண்களின் யோனித் தூய்மையை முன்னிறுத்துகின்றார். வருணக் கலப்பு ஏற்பட்டு, சாதியின் தனித்துவம் சிதலமானால், வருணாசிரமம் இல்லாமல் போய்விடும் எனக் கருதுகின்ற மநு, பெண்கள் இப்படித்தான் இருக்க

வேண்டும் என்ற ஒழுக்க விதிகளை வகுத்துள்ளார். பெண்களை நம்ப முடியாமல் தவிக்கின்ற ஆணின் தவிப்பு, மநுவின் குரலாக வெளிப்பட்டுள்ளது. வேறு வருணத்துப் பெண்ணுடன் உடலுறவு கொள்கின்ற ஆணுக்கு மநு விதித்துள்ள தண்டனைகள் நிலவும் அமைப்பினைக் காப்பதற்கான வழிமுறைகள் ஆகும். “பிறன்மனை விரும்புவோரை, அவர்கட்கு அச்சம் உண்டும் பண்ணும் பொருட்டு உதடு, மூக்கு முதலியன கொய்து அடையாளம் செய்து, அரசன் ஊரை விட்டு விரட்டுக” *(மநு.இ.7:351)* குடும்பத்தைப் பாதுகாப்பதுபோல மநுவின் வாசகம் தோன்றினாலும், பெண்ணை மையமிட்ட வருணாசிரமம் தொடர்ந்து நிலவுவதற்கான பின்புலத்தை மநு தண்டனைகள் மூலம் நிறுவுகின்றார்.

திருக்குறள் பால் பேதமற்ற பிரதி என்ற கருத்தினுக்குப் பின்வரும் குறள் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஆண் உடலையும் பெண்ணுடலையும் சமமாகப் பாவிக்கிற மனநிலை, திருவள்ளுவருக்கு இயல்பிலே இருந்தது.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமையான்**

மநுவின் பார்வையில் வெளிப்படும் பெண்ணுடல் பற்றிய கருத்தியலுக்கு மாற்றாகத் திருவள்ளுவர் பிறப்பின் அடிப்படையில் எல்லா உயிர்களும் ஒன்று என்று வலியுறுத்துவது, பெண்ணிய வாசிப்பில் முக்கியமானது. உடல்கள் பற்றிய பேதங்களை முன்வைத்திடாமல், இரு உடல்களும் சமம் என்ற பார்வை, சநாதனத்திற்கு எதிரானது. மநுவின் பார்வையில் வெளிப்படும் பெண்ணுடல் பற்றிய கருத்தியலுக்கு முற்றிலும் எதிராகப் பிறப்பின் அடிப்படையில் எல்லா உயிர்களும் சமம் என்ற வள்ளுவரின் குரலில், வைதிக சமயம் புனைந்திட்ட பிறப்பு, பால் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுக்கு எதிரான கருத்து, அழுத்தமாக வெளிப்பட்டுள்ளது. இன்று இந்துத்துவா அரசியல் வலியுறுத்துகின்ற மத அடிப்படைவாதத்திற்கு எதிரான கருத்து, குறளில் நுட்பமாக வெளிப்பட்டுள்ளது. இன்னொருபுறம் இன்றளவும் சாதியத்தின் விளைவான தீண்டாமையின் காரணமாக நடைபெறுகிற ஆணவக் கொலைகள் குறித்தும், பெண்ணுடல் காரணமாக அத்துமீறப்படும் பாலியல் வன்முறைகள் குறித்தும் உருவாகியுள்ள பொதுப்புத்திக்கு எதிரான மனோபாவத்தை இளைய தலைமுறையினரிடம் உருவாக்கிடப் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற திருக்குறள் வரிகள், அடித்தளமாக விளங்குகின்றன.

கல்வி என்பது இரு பிறப்பாளராகக் கருதப்படுகின்ற பிறப்பினால் உயர் சாதியில் பிறந்த பார்ப்பனர்களுக்கு மட்டும்தான் உரித்தானது என்று மநு தருமம் நுட்பமாக வலியுறுத்துகின்றது. வருணத்தால் தாழ்த்தப்பட்டவர்கள், பெண்கள் போன்றோரின் கல்வி குறித்து, மநுவிற்கு அக்கறை இல்லை. பார்ப்பனர் வருணத்தைச் சார்ந்த இளைஞர்களின் குருகுலக் கல்வி குறித்து மநு விரிவாக விளக்கியுள்ளார். கல்வியைப் பிறப்பு, பால் அடிப்படையில் அளித்திடுவதற்கு விதிகள் செய்த மநுவிற்கு எதிரான நிலையினைத் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார். பிறப்பின் அடிப்படையிலான வருணக் கோட்பாட்டினை மறுத்து எல்லோருக்கும் கல்வியை வழங்கிட முயலும் திருவள்ளுவரின் கருத்தில் பெண் கல்வியும் இடம் பெற்றுள்ளது.

**மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்**
**கற்றார் அனைத்துஇலர் பாடு(குறள்:409)**

கல்லாதார் உயர்சாதியில் பிறந்திருந்தாலும், கீழான சாதியில் பிறந்தவர் கற்றவர் எனில் அவருடன் ஒப்பிடுமளவு பெருமை இல்லாதவர் என்று வள்ளுவர் பிறப்பினால் உருவாக்கப்படும் உயர் சாதி- கீழ் சாதி பற்றிய புனைவைக் கல்வியை முன்வைத்துக் கேள்விக்குள்ளாக்கியுள்ளார். மனிதன் கல்வியினால் மட்டும் முழுமை அடைவான் என்ற நோக்கத்துடன் கல்வியின் சிறப்பினைக் குறிப்பிட்டுள்ள திருவள்ளுவர், சநாதன தருமத்திற்கு எதிரானவராக விளங்குகிறார். கல்வி, கல்லாமை பற்றிய இரு அதிகாரங்களிலும் வள்ளுவர் குறிப்பிட்டுள்ள கருத்துகள், இன்றையப் பெண் கல்வியில் முக்கிய இடம் வகிக்கின்றன.

திருக்குறள் என்பது பால் பேதமற்ற பிரதி; ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாகக் கற்பினை வலியுறுத்துகின்றது; காலங்காலமாக ஒடுக்கப்பட்ட பெண்களுக்குச் சார்பான அறக்கருத்துகளை முன்னிறுத்துகிறது என்று அழுத்தமான நம்பிக்கை தமிழரிடையே உள்ளது. தமிழ்ப் பெண் குறளின் வழி நடந்தால், குடும்ப வாழ்வில் சிறக்கலாம் என்று தமிழறிஞர்கள் வாழ்த்திக் கொண்டிருக்கின்றனர். மநு விதித்துள்ள பெண் பற்றிய விதிகள், தண்டனைகளுடன் ஒப்பிடும்போது, திருவள்ளுவர் குறிப்பிடும் பெண் பற்றிய அறக் கருத்துகள், மேன்மையானவை. ஆனால், பெண்ணியவாதிகள் திருவள்ளுவரின் பெண் பற்றிய சில மதிப்பீடுகளைக் கடுமையாக விமர்சிக்கின்றனர். ‘பெண்வழிச் சேரல்’ அதிகாரம் முன்னிறுத்தும் கருத்துகள் ஆய்விற்குரியன. திருவள்ளுவர் ஒப்பீட்டளவில் பெண்ணுக்கு முக்கியத்துவம் தந்தாலும், அவருடைய பார்வை, ஆண் மையமிட்டதாகவே உள்ளது. பெண்ணுக்குப் பணிந்து நடத்தல், பெண்ணின் பேச்சைக் கேட்டுச் செயல்படுதல், பெண்ணின் விருப்பத்தை நிறைவேற்றுதல் போன்றவற்றைச்

செய்கின்ற ஆண்களின் செயல்களைத் திருவள்ளுவர் கண்டனம் செய்கின்றார்.

**அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்**
**பெண்ணேவல் செய்வார்கண் இல்(குறள்:909)**

பெண்ணுடன் தனது கருத்துகளைப் பகிர்கின்ற ஆண், அறச்செயல்களைச் செய்ய முடியாது: அவனுடைய பிறவிக்கு நன்மை இல்லமல் போகும் என்ற வள்ளுவரின் வாதத்தில் பெண்ணின் அறிவையும் ஆற்றலையும் மறுக்கின்ற போக்கு உள்ளது.

பெண்ணின் பேச்சைக் கேட்டு நடத்தல், பெண்ணுடன் தனது கருத்துகளைப் பகிர்ந்துகொள்கிற ஆணினால் அறச்செயல்களைச் செய்யவியலாது. அவனுடைய பிறவிக்கு நன்மை செய்ய முடியாது; அவனுக்குச் செயல்திறன் இல்லாமல் போகும்; பெண்ணின் அறிவுத்திறனையும் ஆற்றலையும் மறுக்கும் போக்கைத் திருக்குறளில் காணமுடிகிறது. திருவள்ளுவரின் குரலில் ஆண் மையவாதம் அழுத்தமாகப் பொதிந்துள்ளது. 'பெண் சொல் கேளேல்' என்பதை அறமாக முன்வைக்கும் திருவள்ளுவரின் கருத்தியல், சமூகத்தில் பெண்ணின் இருப்பை மறுப்பதுடன் அவளுடைய மனத்தையும் புறக்கணிக்கிறது.

பிறன்மனை நயத்தல் கூடாது என வலியுறுத்துகின்ற குறள்கள், தனிமனித ஒழுக்கம் என்ற நிலையில் ஆண் மேலாதிக்கத் தன்மையுடன் அமைந்துள்ளன

**பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு(குறள்:148)**

பெண்ணுடலைப் பிற ஆண்களிடமிருந்து காத்து, புனிதமான உடலாக மாற்றி, எப்பொழுதும் கணவனின் அதிகாரத்திற்குட்பட்டிருக்குமாறு பெண் மனதை மாற்றிடும் நுட்பமான பணியைக் கற்பு என்ற சொல்மூலம் திருவள்ளுவர் செய்துள்ளார். பிற பெண்ணின் கணவனை நோக்காத 'பெரும் பெண்மை' என்ற சொல்லாடலை ஏன் வள்ளுவர் முன்வைக்கவில்லை என்ற கேள்வி தோன்றுகின்றது. பெண்ணுக்குக் காவல் என்பதனால் பயன் இல்லை என்ற விஷயத்தில் வள்ளுவரும் மநுவும் ஒத்த கருத்துடையவர்கள். சிறை காக்கும் காப்பு என்ற கருத்தியலின் பின்னர் பெண்ணுடைய பாலியல் வேட்கையைக் கட்டுப்படுத்த இயலாது என்ற அவநம்பிக்கை பொதிந்துள்ளது.

ஆண்களுக்கான அறமாகத்தான் பிறன்மனை நயத்தல் கூடாது என்ற வள்ளுவரின் அறிவுரையைப் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. கணவன்-மனைவி என்ற சிறிய குடும்ப நிறுவனத்தினை முன்னிறுத்தும் நிலையில், பாலியல் அறமானது முழுக்கப் பெண்ணை நோக்கியே வள்ளுவரால் முன்மொழியப்பட்டுள்ளது. தனிமனித ஒழுக்கம் என்ற லட்சிய நோக்கிலான அறமும் பெண் குறித்த ஆண் மேலாதிக்கத்தன்மையுடன் அமைந்துள்ளது. வள்ளுவர் சித்திரிக்கும் ஆணின் ஒவ்வொரு அசைவும் செயலும் பெண்ணின்மீதான அவனது அதிகாரத்தைச் சுற்றியே இயங்குகின்றது. பெண்ணுடலைப் பிற ஆண்களிடமிருந்து காத்து, புனித உடலாக மாற்றி, கணவனுடைய ஆதிக்கத்தின்கீழ் இருக்குமாறு பெண் மனத்தை மாற்றிடும் நுட்பமான பணியைக் 'கற்பு' என்ற சொல்லாடலின்மூலம் அறநூல்கள் முயன்றுள்ளன. இந்நிலைக்கு திருக்குறளும் விலக்கு அல்ல.

'வரைவின் மகளிர்' அதிகாரத்தில் பொருளுக்காகப் பெண்ணுடலை ஆணின் துய்ப்புக்களமாக்கிடும் பெண்களைப் பற்றி இழிவான மொழியில் விவரித்திடும் அறக்கருத்துகள் கவனத்திற்குரியன. பொருட் பெண்டிருடனான பாலியல் உறவை இருட்டறையில் பிணம் தழுவியதென்று கண்டிக்கின்ற திருவள்ளுவரின் கருத்து, ஏற்புடையது. அதேவேளையில் பொருட்பெண்டிர் நிலவுகின்ற சமூகச் சூழல் குறித்தும் பொருட் பெண்டிராகப் பெண்கள் மாற்றப்பட்ட பொருளாதாரச் சூழல் குறித்தும் வள்ளுவருக்கு அக்கறை எதுவுமில்லை. சமூக ஒழுங்கு என்பது முழுக்க ஆணை மையமிட்டதாக விரிந்திடும் சூழலில் பெண்ணின் ஒழுங்கு குறித்த பார்வை அன்றைய சூழலில் இல்லை என்றுதான் கருத வேண்டியுள்ளது.

வள்ளுவரின் ஆண்-பெண் பாலுறவு குறித்த பார்வை காமத்துப்பாலில் துல்லியமாக வெளியிடப்பட்டுள்ளது. காமத்துப்பால் முழுக்க ஆணின் மொழியிலமைந்த பிரதியாகும்; பெண்மொழிக்குச் சிறிதும் இடமில்லை. 'கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலனும் ஒண்டொடி கண்ணே உள' என்ற குறள், ஆண் மையப் பாலியல் விவகாரத்தைச் சார்ந்தது. இக்குறளில் ஆணின் பாலியல் வேட்கை மட்டுமே முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. பெண் தனக்காக பாலியல் விழைவை அடைதல் அல்லது துறத்தல் பற்றி வள்ளுவருக்கு அக்கறை எதுவுமில்லை. பெண் எனப்படுபவள் ஆணினால் அறிந்துகொண்டு அனுபவிக்கப்பட வேண்டிய பொருள் என்ற அணுகுமுறையில் பால் வேட்கையானது ஆணின் பாலியல் தொழில்நுட்பமாக மாற்றப்படுகின்றது. இத்தகைய ஆண் மையப் பார்வைதான் எல்லாவகையான பாலியல் அத்துமீறல்களுக்கும் வன்முறைக்கும் அடித்தளமாகும். ஒருநிலையில் பெண்ணுடலைப் போகப்பொருளாக மாற்றித் துய்ப்பிற்கான தளமாக்கும் வள்ளுவர், இன்னொரு நிலையில் பெண்ணுடலை

உரிமைகொள்ளும் அதிகாரத்தையும் அறத்தின் பெயரால் ஆணுக்கு வழங்குகிறார். பெண்ணை முன்னிறுத்திக் காதலி அல்லது மனைவி என்ற அடையாளத்துடன் பாலியல் கொண்டாட்டத்தினை முன்மொழியும் காமத்துப்பால், ஒருவகையில் ஆண்டான் அடிமை உறவின் வெளிப்பாடுதான். பெண் தனது உடலை முழுமையாக ஆணிடம் ஒப்படைத்துவிட்டுப் பேச்சற்று இருக்கும் வரை 'காமம்' பற்றிய புனைவுகள் பொங்கிப் பெருகும்.

சங்கப் பாடல்கள் சித்திரிக்கின்ற பெண் பற்றிய பிம்பம், ஒப்பீட்டளவில் தனித்துவமானது. பெண் என்ற உயிர் இப்படித்தான் இருக்க வேண்டுமென்ற கட்டுப்பாடுகளும் விதிகளும் பெரிய அளவில் இல்லை. சங்கம் மருவிய காலகட்டத்தில் பெண் பற்றிய புதிய மதிப்பீடுகள் உருவாக்கப்பட்ட சூழலில் திருக்குறள் அவற்றை முன்மொழிந்துள்ளது.

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக் கேட்ட தாய் (குறள்:69)**

மகனைச் சான்றோன் எனப் பிறர் சொல்கின்றபோது, தாயின் மனதில் ஏற்படுகின்ற மகிழ்வைக் கொண்டாடுகின்ற குறளை மறுவாசிப்புக்குட்படுத்தினால் மகளைச் சான்றோள் என்று சொல்வது குறித்துத் திருவள்ளுவருக்கு ஏன் அக்கறை இல்லை என்று தோன்றுகின்றது.

கல்வி என்பது இரு பிறப்பாளராகக் கருதப்படுகின்ற பிறப்பினால் உயர் சாதியில் பிறந்தவர்களுக்கு மட்டும்தான் உரித்தானது என்று மநு தருமம் நுட்பமாக வலியுறுத்துகின்றது. வர்ணத்தால் தாழ்த்தப்பட்டவர்கள், பெண்கள் போன்றோரின் கல்வி குறித்து, மநுவிற்கு அக்கறை இல்லை. பார்ப்பனர் குலத்தைச் சார்ந்த இளைஞர்களின் குருகுலக் கல்வி குறித்து மநு விரிவாக விளக்கியுள்ளார். கல்வியைப் பிறப்பு, பால் அடிப்படையில் அளித்திடுவதற்கு விதிகள் செய்த மநுவிற்கு முற்றிலும் மாறான நிலையினைத் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

**மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்**
**கற்றார் அனைத்துஇலர் பாடு(குறள்:409)**

பிறப்பின் அடிப்படையை மறுத்து எல்லோருக்கும் கல்வியை வழங்கிட விழைகின்ற திருவள்ளுவர், ஒருநிலையில் பெண் கல்வியையும் ஏற்றுக்கொண்டவராகத் தோன்றுகின்றது. மனிதன் கல்வியினால் மட்டும் முழுமை அடைவான் என்ற நோக்கத்துடன் கல்வியின் சிறப்பினைக் குறிப்பிட்டுள்ள வள்ளுவர், சநாதன தருமத்திற்கு எதிரானவராக விளங்குகிறார்.

திருவள்ளுவர் வலியுறுத்துகின்ற பெரும்பான்மையான அறக் கருத்துகள் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான பிரதிகளாக விளங்குகின்றது. பால், சாதிரீதியில் குறிப்பிட்ட பிரிவினர்க்குக் குறிப்பிட்ட ஒழுக்கம், தண்டனை போன்ற பாகுபாடுகள் திருக்குறளில் இடம் பெறவில்லை. திருவள்ளுவர் ஆணை முன்னிறுத்தி அறங்களை வலியுறுத்தினாலும் பிரதியில் பால் அடையாளம் இல்லாத தன்மை கவனத்திற்குரியது. திருக்குறளைத் தமிழர் அற நூலாக ஏற்றுக்கொண்ட பெரியார், மநு தருமம் பற்றிக் குறிப்பிடுவது பின்வருமாறு: ''ஆயிரக்கணக்கான அநீதியானதும், ஒரு சாராருக்கு நன்மையும், மறுசாராருக்குக் கொடுமையும் செய்வதுமான விதிகள் மனு தர்மத்தில் நிறைந்திருக்கின்றன. சுருங்கச் சொல்லுங்கால் "பிராமணன்" என்ற வகுப்பாரைத்தவிர, வேறு எந்த வகுப்பாருக்கும் அதில் யாதொரு நன்மையும் இல்லை என்றே கூறலாம். ஆகையால் தோழர்களே! இந்நூலை "மநு தர்மம்" என்று கூறுவதா? அல்லது "மநு அதர்மம்" என்று கூறுவதா? சற்று யோசித்து முடிவு செய்யுங்கள்.'' என்ற பெரியாரின் கூற்று, மநு தருமத்தைக் கடுமையாக விமர்சிக்கிறது. (குடி அரசு நாளிதழ்,10-03-1935)

மநு தருமம், வருணாசிரம தருமத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட சமூகம், செம்மையாகச் செயல்படுவதற்காக உருவாக்கப்பட்ட நீதி, சட்டங்கள், தண்டனைகள் பற்றிய கண்ணோட்டத்தை அழுத்தமாக வலியுறுத்துகின்றது. திருக்குறள், சமூகமாகக் கூடி வாழ்கின்ற மனிதர்களுக்கிடையில் தோன்றுகின்ற முரண்களைச் சீராக்கிடவும், செம்மையான வாழ்க்கை வாழ்வதற்கான பின்புலத்தையும் முன்னிறுத்தியுள்ளது. திருவள்ளுவர் நீதி, சட்டம், தண்டனை என விதிகளைவிட, தனிமனித மனதில் ஏற்படுகின்ற மாற்றங்களை வலியுறுத்துகின்றார். இன்றைய சிவில் சமூக வாழ்க்கைக்குத் தேவையான கருத்துகள், திருக்குறளில் இடம் பெற்றிருப்பது தனிச்சிறப்பானது.

**சான்றாதாரம்**


1. புலியூர்க் கேசிகன்(ப-ஆ). திருக்குறள்: பரிமேலழகர் உரை. சென்னை:பூம்புகார் பிரசுரம்,2014.
2. திருலோக சீதாராம் (மொ-பெ). மநு தர்ம சாஸ்திரம். சென்னை:ஏ.கே. கோபாலன்,1999.


●


கட்டுரையாளர், இணைப் பேராசிரியர்
தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி

கட்டுரை

# சிலம்பு வழி வந்த மாதவி காவியம்

முனைவர் கா. வாசுதேவன்



கவிஞர் தமிழ் ஒளியின் மாதவி காவியம் தனித்துச் சுட்டத்தக்கது. மாதவியை கதைத் தலைவியாக்கி அவளுடைய சிறப்பையும் மேன்மையையும் சிறப்பிக்கும் வகையில் அமைந்த காவியமாக 'மாதவி காவியத்தை' படைத்திருக்கிறார்.

**கவிஞர் தமிழ் ஒளி அடையாளம்**

புதுவையை இருப்பிடமாகக் கொண்டவர் தமிழ் ஒளி, பாரதியின் பாடல்களால் ஈர்க்கப்பட்டு பாரதிதாசனோடு தன்னை தொடர்புபடுத்திக் கொண்டு பக்குவப்பட்டவர். பல நூறு தனிக்கவிதைகளையும் எட்டு குறுங்காவியங்களையும் தமிழுக்குத் தந்த பெருமைக்குரியவர். எழுத்துப் படைப்புகள் கவிஞரை வளமாக வாழ வைக்கவில்லை. வாழ்நாள் முழுவதும் நண்பர்களைச் சார்ந்து வாழ்ந்த கவிஞர். மகாகவி பாரதி போல நாற்பதாண்டுகள் மட்டுமே வாழ்ந்து மறைந்தார். (21.09.1924-29.03.1965) வளமானத் தமிழுக்கு நலம் சேர்த்த பெருங்கவிஞர் தமிழ் ஒளியை மண்ணின் மைந்தராக ஏற்று புதுவை அரசு 1999இல் பவள விழா எடுத்துச் சிறப்பித்தது.

### மாதவி காவியமும் படைப்பாக்கமும்

*மாதவி காவியம் முதல் பதிப்பாக 1995ஆம் ஆண்டு மறுபதிப்பாக 2003ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. மாதவி காவியத்திற்குப் படைப்பாளர் பூவண்ணன் தந்துள்ள அணிந்துரையில் இருந்து இக்காவியம் அச்சாக்கம் பெற்று படைப்பாக வெளிவந்த தகவலை அறிய முடிகின்றது.*

"இதழ்களில் மட்டும் வெளிவந்த ஏட்டிலேயே கையெழுத்தில் குடிகொண்ட கவிஞர் தமிழ் ஒளியின் கவிதைகள் சாகாமல் காத்து வாழ்விக்கும் சஞ்சீவியானார். பொருள் வளம் இல்லாதச் சூழலிலும் தமிழ் ஒளியின் பாடல்களைத் தமிழ் உலகிற்கு வெளிக்கொணர்ந்தவர் செ.து. சஞ்சீவி. அந்தக் காலத்து உ.வே.சா போலத் தேடித் திரிந்து தமிழ் ஒளியின் கவிதைகளையும், கட்டுரைகளையும் தேடி அவற்றை வெளியிட்டும் மகத்தான பணியை மேற்கொண்டார். அதன் பயனே இவ் மாதவி காவியம்.''

''மாதவி கதை இளங்கோவடிகள் சிலம்பில் கூறியது. அந்தப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு தமிழ் ஒளி இக்காவியத்தைப் படைத்திருக்கிறார். நெஞ்சை அள்ளும் சிலம்பைப் படித்துப் படித்து மகிழ்ந்த போது இப்பகுதியை இப்படி செய்திருக்கலாமோ என நினைத்து இளங்கோ படைத்த மாதவியைத் தம் கற்பனை அணிகளால் அழகுபடுத்தி ஒரு புது மாதவியாக இக்காவியத்தில் அறிமுகப்படுத்துகிறார்."

என்ற பூவண்ணனின் கருத்து மாதவி காவியம் அச்சேறிய வரலாற்றையும், நூலாக்கம் பெற்ற நிலையையும் புலப்படுத்துகின்றது.

கவிஞர் தமிழ் ஒளி காவியம் படைத்த காரணத்தை தெளிவுபடுத்துகிறார். காவியத்தைத் தொடங்கும் முன் தன்னுடையதாகச் சில கருத்துக்களை முன் வைக்கும் தமிழ் ஒளி,

"என் கதையில் மாதவி மனம் மாறும் நிலையை மட்டுமே காட்டி செல்வங்களை தானஞ்செய்யும் நிகழ்ச்சி, பௌத்த சங்கத்தை அடையும் நிகழ்ச்சி ஆகியவற்றை உய்த்துணருமாறு விட்டுள்ளேன்"

என்கிறார். படைப்பை தந்தமைக்கான நோக்கத்தைத் தெளிவுபடுத்தினாலும் தமிழ் ஒளி அரசியல், பத்தினி, ஊழ்வினை என்ற மூன்றினை முதன்மைப்படுத்தாது மாதவியை மட்டுமே மையப்படுத்துவது சுட்டத்தக்கது.

கவிஞர் தமிழ் ஒளி இளங்கோவடிகள் சுட்டும் மூன்று காண்டங்களில் புகார்க்காண்டம் என்ற பெயரை அப்படியே முதல் காண்டமாக அமைத்திருப்பது சுட்டத்தக்கது. அதைப் போலவே உட்பிரிவுகளுக்கு காதை என பெயரிட்டிருப்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. சிலம்பில் புகார்க்காண்டத்தில் இடம்பெறும் கானல்வரியும், வேனிற்காதையும் மாதவி காவியத்தில் துறவுக் காண்டத்தில் இடம்பெற்றுள்ளன. சிலம்பில் புகார்க்காண்டத்தில் இடம் பெற்றுள்ள அந்தி மாலை சிறப்பு செய் காதை, இந்திரவிழா ஊர் எடுத்த காதை இரண்டும் மாதவி காவியத்தில் பட்டினக் காண்டத்தில் இடம்பெறுகின்றன. அரங்கேற்றுக் காதையை அரங்கக்காதை என்றும் கடலாடு காதையை நிலவாடுகாதை எனவும் கவிஞர் தமிழ் ஒளி மாற்றம் செய்திருப்பது சுட்டத்தக்கது.

புகார்க்காண்டத்தின் தொடக்கமான மங்கல வாழ்த்துப் பாடலில் கோவலன் கண்ணகித் திருமணத்தை விவரிக்கிறார் இளங்கோவடிகள். ஆனால், தமிழ் ஒளி புகார்க் காண்டத்தின் தொடக்கமாக 'பூர்வ காதை' என்ற பெயரில் மாதவியின் பிறப்பையும் சிறப்பையும் சொல்லிக் கதையைத் தொடங்குகிறார். மேற்சுட்டிய நிலைப்பாடுகள் சிலப்பதிகாரத்திற்கும் மாதவி காவியத்திற்கும் இடையிலான கட்டமைப்பைப் புலப்படுத்துகின்றன.

### காவியத் தொடக்கம்

தமிழில் கடவுள் வாழ்த்தாக இயற்கையைப் பாடிய புதுமைக் கவிஞர் தமிழ் ஒளியும் கடவுள் வாழ்த்தாக 'ஞாயிறு வணக்கம்' என்ற பகுதியினை காவியம் தொடங்கும் முன் அமைத்துக் காட்டுவது சுட்டத்தக்கது.

"நிலமாய்க் கனிந்து வெள்ள
நீரெனப் பொலிந்து தோன்றும்
கோலமாய் வளைந்த கடல் மேலே - ஒளி
கொண்டு வருகின்ற கதிர்வேலே!"

காவியத்தின் இம்முதல் பாடலிலேயே தமிழ் ஒளியின் கவித்திறன் முழுமையாய் வெளிப்படுவதையும் இளங்கோவின் தாக்கம் ஏற்றம் பெற்றிருப்பதையும் காணலாம்.

### மாதவி அறிமுகம்

கவிஞர் தமிழ் ஒளி தன் காவிய நாயகி மாதவியை,

"விண்ணிற் பிறந்த மகள்
இந்திரனார் சாபத்தால்
மண்ணிற் பிறந்தாள்
மயலூட்டி வாழ்வதற்கே!
பேர் வசியம் செய்கின்ற
பேதை அவள் பெயரும்
ஊர்வசியே என்றால்
உவப்புறுவர் ஊர்வசியின்
கால் வழியிடைப் போற்றும்
கணிகையர் தம் குலத்தில்
மேல் வழியைப் போற்றம்
மேதகைய மாதவிப் பெண்"

என அறிமுகப்படுத்துகிறார். இளங்கோவடிகள் மாதவியை அறிமுகப்படுத்தும் நிலைப்பாட்டோடு

பொருந்தி வருவதைக் காணலாம். மற்றவர்களை மயக்கும் பேரழகி என்றும் ஊர்வசியின் வழித்தோன்றலாகவும் மாதவியைச் சுட்டுவதோடு குறிப்பாகக் கவிஞர் மாதவியின் குலத்தை உணர்த்துவதும் குறிப்பிடத்தக்கது.

கவிஞர் தமிழ் ஒளி தன்னுடைய காவியத்தில் கோவலன் பிரிவுக்கு புதியதொரு காரணத்தைப் புலப்படுத்துகிறார். கோவலன் - கண்ணகி இருவர்க்கும் ஒரே குறை குழந்தை இல்லை என்பது. இக்குறையை நினைத்துக் கண்ணகி புலம்புவதை,

"புலியென்றிடப் புகழென்றிடப்
பூப்போல் ஒரு பிள்ளை!
நீளையாடவும் கிளியாடவும்
கீர்த்திக்கொரு பிள்ளை!
வயிறுற்றிடு மலட்டுப்பிணி
மாய்க்கும் ஒரு பிள்ளை!
என்றென்னுவள்! இடரென்னுவள்!
எதிற் கண்ணகி நங்கை
நீன்றென்னுவள் நெடிதென்னுவள்
நிறை மாதர்கள் தங்கை"
எனக் காட்டும் கவிஞர் தமிழ் ஒளி,
"இல்லிற் பிறந்த
இடரைக் கலைவாணர்
சொல்லிற் பிறந்த
சுவையால் தவிர்கின்றாள்"

எனக் கோவலனின் மனத்துயரத்தையும் வெளிப்படுத்துகிறார். சிலம்பில் இடம் பெறாத கதைப்பாங்கும் கண்ணகியின் நிலைப் பாடும் மாதவி காவியத்தில் இடம் பெறுவது புதுமையானது.

### கோவலனைத் தடுத்தல்

கண்ணகியை விட்டுப் பிரியும் கோவலன் மாதவியின் மனையில் வாழ்ந்த செயலை தவறு என யாரும் சுட்டிக்காட்டி நெறிப்படுத்தியதாக சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கதையமைக்கவில்லை. ஆனால், மாதவி காவியத்தில் கவிஞர் தமிழ் ஒளி கோவலன் மாலையை வாங்கி மாதவி மனைக்குச் செல்ல முயலும் போதே திருமுருகர். திருக்கண்ணர் எனும் இரு தமிழ்ப் புலவர்கள் தடுத்து அறிவுரை கூறுவதாகப் படைத்துக் காட்டுகிறார்.

"தாரொடு சென்றாய்த்!
தாயொடு கன்றாய்த்!
தன்வசங் கெட்டுப்போய்த்!
தேரோடு வந்தாய்த்
தெருவொடு நின்றாய்ச்
செய்கையுங் கெட்டுப்போய்!
அரவது துயிலும்
புற்றெனும் அல்குல்
அலைகளை அறியாயோ?
கரவது புரியுங்
கணிகையர் உரியுங்
கலைகளை அறியாயோ?
என திருக்கண்ணர் அறிவுரை கூறவும் மறுபுறம்
"நாடகம் முடியத்
தம்மனை நாடும்
நடுநிலை போற்றாமல்
ஆடகங் கண்டாள்
அவள் மனை நாடி
அலைவதும் அறிவுடைமை?''

என திருமுருகர் நெறிப்படுத்தவும் முனைகின்றனர். ஆனால், கோவலன்,

"ஒன்றெதிர் கூறும்
உரையெதும் இல்லை
உலகியல் என்கின்றான்"

எனப் பதில் தருகின்றான். புலவர்களின் அறிவுரையைக் கேளாமல் 'இது உலகியல்' எனக் கூறி மாதவி மனைநாடுகின்றான் கோவலன். இத்தகைய கதைப்போக்கும் சிலம்பில் இடம்பெறவில்லை. மன்னனிடம் நீதி கேட்கும் புரட்சிப் பெண்ணாகச் சித்திரிக்கப்படும் கண்ணகியும் கோவலனின் செயல் தவறு என இடித்துரைக்க வில்லை. மற்றவர்களும் தடுக்கவில்லை. கவிஞர் தமிழ் ஒளி படைத்துக் காட்டும் இப்பகுதி சிலம்பில் இருந்து முற்றிலும்



மாறுபட்டு அமைந்திருப்பதைக் காணலாம். இத்தகைய வேறுபாடுகளும் புதிய சிந்தனைகளும் சிலப்பதிகாரத்தில் தெரிக்கும் பல ஐயங்களுக்கு விளக்கம் தருவதாய் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

**கானல்வரி**

கடற்கரைப்பட்டினமான பூம்புகாரில் இந்திரவிழா எழுச்சியுடன் நடைபெறுகிறது. கோவலனும் மாதவியும் கடலாடச் செல்கின்றனர். கோவலன் காவிரியைப் பெண்ணாகப் பாவித்துப் பாட அதை வேறுவிதமாகப் புரிந்து கொண்ட மாதவி தானும் பாட கோவலன் அதைத் தவறாகப் புரிந்து கொள்வதாகப் பதிவு செய்கின்றார் இளங்கோவடிகள். மாதவி காவியத்திலும் இத்தகைய நிகழ்வு நடைபெறுகிறது. கானல்வரிப் பாடலை மாதவி வேடிக்கையாகப் பாடுகிறாள். அது வினையாகி விடுகிறது. யாழ் மீட்டித் தான் பாடிய பாடல் தனக்குத் துயரத்தைத் தந்துவிட்டதே என வருந்தும் மாதவியின் நிலையை,

''யாழே! அது தரும் அமுதநல் லிசையே!
ஊழே! உயிர்களை உருத்திடும் பாழே!
அலையே! கடலே! அவ்வயின் நிழலே!
பொழிலே! மணலே! புகார் எனுந்துறையே!
கழியே! கலனே! கடல்விளை யாட்டே!
புன்னையே! மலரே! புதுமணப் பெண்ணே!
அன்னையே! காவிரி! அனைவரும் கூறீர்!
கள்ளம் உடைய கருத்தால் கோவலன்
உள்ளம் உடைய உரைத்ததும் உண்டோ?
வெள்ளை மனத்தால் விளித்தேன்
பிள்ளை மனத்தால் பிதற்றினேன் பாவி நான்!''

என எடுத்துக்காட்டும் தமிழ் ஒளி மேலும்,

"வேடிக்கை வினையாவ துண்டோ?- வெறும்
வேடிக்கை வினையாவ துண்டோ?
மூடிக்கை திறந்திட்டால் முகமாக துண்டோ?
வேடிக்கை வினையாவ துண்டோ?

எனப் பாடுவதாகச் சுட்டுகிறார். விளையாட்டாய்ப் பாடிய பாடல் தன் வாழ்க்கையை முடமாக்கிவிட்டது என மாதவி வருந்தும் பகுதி படித்து இன்புறத்தக்கது. சிலப்பதிகார கானல்வரி பகுதியோடு ஒப்பு நோக்கத்தக்கது.

**வேனிற்காதை**

கோவலனின் பிரிவைத் தாங்காது மனம் வெதும்பும் கண்ணகி, மாதவி இருவரின் நிலைப்பாட்டை காட்சிப்படுத்தும் பகுதி வேனிற்காதை. தனிமை தீயாகச் சுடுகிறது மாதவி தன் தோழியாகிய வசந்த மாலையிடம் செண்பகம், மருக்கொழுந்து, இருவாட்சி, மல்லிகை, வெட்டிவேர் இவற்றோடு பல்வேறு மனம் வீசும் மலர்கள் நிறைந்த மாலையின் இடையே வெள்ளைத் தாழை மடலின் சிறிய செண்பகப் பூவின் மொக்கினை எழுத்தாணியாக்கிக் கோவலனுக்கு மடல் எழுதி அனுப்பும் பகுதியை இளங்கோவடிகள் கானல்வரியில் சுருக்கமாகத் தர மாதவி காவியத்தில் கவிஞர் தமிழ் ஒளி மாதவியின் புலம்பலையும் ஏக்கத்தையும் மிக விரிவாகக் காட்டுகிறார்.

மாதவி காவியத்தில் மாதவி தோழி வசந்த மாலை மூலம் கோவலனுக்குத் தாழை மடல் அனுப்புகிறாள். சிலப்பதிகாரக் கோவலனைப்போல மாதவி காவியக் கோவலனும் மடல் மறுத்துப் பேசுகிறான். கோவலன் மறுப்பிற்குப் பதில் சொல்லும் வசந்த மாலை,

"தழை தருமடல் அல்ல இவை கொடி
தந்த மலர்களும் அல்ல இவை!
வழை எனப்படும் மாதவியின் - உளம்
எட்டிப் பறித்த மலர்கள் இவை!''

என மாதவி கொடுத்தனுப்பிய மடலின் தன்மையைச் சுட்டிக் காட்டுகிறாள். இதற்கு மறுமொழி கூறும் கோவலன்,

"தாழை மலரினில் நாகமிருக்குது
தலையை நீட்டு தம்மா!
ஏழை மனிதனை இவ்விதம் கொன்றிட
எவ்விதம் கற்று வந்தீர்? - கலை
எவ்விதம் கற்று வந்தீர்?"

எனப் பதில் தருகின்றான். இவ்வாறு மாதவி காவியத்தில் கோவலனுக்கும் வசந்த மாலைக்கும் இடையே நடைபெறும் உரையாடல் பகுதியை மிக விரிவாக அமைத்துக் காட்டுகிறார் கவிஞர் தமிழ் ஒளி. சிலப்பதிகாரத்தில் கோவலன் பிரிந்தவுடன் வசந்தமாலை மூலம் மாதவி விடுத்தது ஒரு மடல். ஆனால், தமிழ் ஒளியின் மாதவி ஒரு மடல் அல்ல இருமடல் அல்ல பல மடல்கள் எழுதுவதாகப் படைக்கப்பட்டிருக்கிறாள். கோசிகமணி என்பவன் மூலமும் கோவலனுக்கு மாதவி மடல் தந்து அனுப்பும் கதையமைப்பு மாதவி காவியத்தில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

**பூம்புகார்**

பூம்புகாரின் சிறப்பினை இளங்கோவடிகள் இந்திர விழா ஊர் எடுத்த காதையில் வியந்து பேசுவதைப் போலவே கவிஞர் தமிழ் ஒளியும் நகர்க்காதையில் விரிவாகச் சுட்டுகிறார். மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம், நாளங்காடி, வீரர்கள் விழா எடுக்கும் நிகழ்வு, மண்டபத்தில் நடைபெறும் விழா, ஐவகை மன்றத்தில் நடைபெறும் அரும்பலி, வீதிகள் பூண்டிருக்கும் விழாக் கோலம், திருவிழாக் காட்சிகள் போன்ற நிலைப்பாடுகள் இளங்கோவடிகளால் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறதோ அதைப் போலவே மாதவி காவியத்திலும் நகர்வர்ணனை, தேர்ப்பாகர், குதிரைப்பாகர், உறையும் இடம், யானைப் பாகர், குயவர், அரசவீதி, மாளிகைகள், வணிகர் வீதி, கணிகையர் வீதி, படைக்கும் விழாவுக்கும் கொட்டு வோர், கன்னார், கலந்தநேர், காலக்கணியர், பட்டினப்பாக்கம், மருவூர்ப்பாக்கம், நாளங்காடி,

அல்லங்காடி என்ற நிலைகளில் பூம்புகார் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. சான்றாக சிலம்பில் இடம்பெறும் நாளங்காடி விழாவில், இந்திரன் ஆணையின்படி வானுலகம் விட்டு பூம்புகாரில் வந்து தங்கிய காவல் தெய்வமாகிய பூதத்திற்கு மக்கள் வழிபாடு செய்து மகிழ்ந்த செய்தியை,

"இந்திரனார் ஏவலினால்
ஈண்டுற்ற பூதத்தை
மந்திரத்தால் மகிழ்விக்க
மருகூறிய நாள் அங்காடி"

என கவிஞர் தமிழ்ஒளி எடுத்தாள்வது சுட்டத்தக்கது.

**கோவலன் மறைவுக்குப் பின் மாதவி**

கோவலன் கள்வன் எனப் பொய்க்குற்றம் சுமத்தப்பட்டு கொலையுண்ட பின் பாண்டியனிடம் நீதி கேட்டு மதுரையை எரித்த கண்ணகியை இளங்கோவடிகள் தெய்வநிலைக்கு உயர்த்துகிறார். கோவலனின் தந்தை மாசாத்துவான் மீளாத் துயரில் பொன்னையும் பொருளையும் தானமாக வழங்கிவிட்டுத் துறவியாகிறான். மாசாத்துவானின் மனைவியும் மகன் கோவலனின் நிலையறிந்து உயிர் விடுகிறாள். கண்ணகியின் தந்தை முனிவர் வேடம் கொண்டு சமண சமயத் துறவிகள் முன் தானங்கள் செய்து துறவு மேற்கொள்ள கண்ணகியின் தாயும் உயிர் விடுகிறாள். கோவலன், கண்ணகி அவர்களுடைய குடும்பம் என்ற அளவில் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் கதையமைப்பு இது.

கோவலன் குடும்பத்திற்கு ஏற்பட்ட அவலங்களை கேள்வியுற்று மனம்கலங்கித் தன் தாய் சித்திராபதியிடம் அறவழிச் செல்ல நான் முடிவு செய்துவிட்டேன். எனவே, நீயும் என் மகள் மணிமேகலையை பெருந்துன்பத்திற்கு ஆளாக்கும் விலைமாதர் வாழ்க்கையில் ஈடுபடுத்தாது விடு என்ற வேண்டுகோளை முன் வைத்து மணிமேகலை கூந்தலில் சூடியிருந்த மலர்மாலையை அகற்றி அறவாழ்வை மேற்கொள்ளச் செய்வதாக இளங்கோவடிகள் மாதவியின் நிலைப்பாட்டை கதையாகத் தருகிறார்.

மாதவி காவியத்திலும் கவிஞர் தமிழ் ஒளி இதே நிலைப்பாட்டை சாடுகின்றார்.

"மாட மாளிகை
ஏன் இனி? இது
மாயம் என்பதும் சேர்ந்தபின்!
ஆடவர் எனும்
வீணர்கள் விளையாடும்
காய்களோ மாதர்கள்?
புத்தனார் தரும்
தத்துவம் துயர்ப்
போக்க வந்த மருத்துவம்!
காவியாம் உடை
கட்டியே அவர்
கால்களில் மனம் ஒட்டியே
பாவியேன் புது
புதுவாழ்வைப் பெறப்
பாரிடை தவம் செய்திடுவேன்!
“என்னடி மணிமேகலை
இன்று நாம் புது
வாழ்வு பெற்றுள்ளோம்
என்றெழுந்தனள் நின்றவள்!
துறவெனும் ஒரு
கடலிலே இரு
படகுகள் என மாறினோம்!’

என மாதவி காவியத்தின் இறுதியில் பேசுவதாகச் சுட்டி காவியத்தை நிறைவு செய்கிறார் கவிஞர் தமிழ் ஒளி.

கவிஞர் தமிழ் ஒளி மாதவி காவியத்தில் அரங்குக் காதையில் ஆடலரங்கின் சிறப்பினைச் சிறப்பாக அவருக்கே உரிய கவிநடையில் சுட்டுக் காட்டுகிறார்.

"சிற்ப முறைப்படி செய்து
சித்திர வர்ணமும் பெய்து
விற்பனரின் தொழில் மேவ
விந்தை நிறைந்து உலாவ
கற்பனை யாவும் உயிர்த்துக்
கண்ணெதிர் நின்றதை ஒத்துப்
பொற்புறு மன்றம் அமைத்தார்
பொன்னுலக கத்தும் வியக்க!
செக்கரில் மூழ்கிய வானம்
சித்திரம் தைத்த விதானம்!
பக்கம் வளர் இருவாயில்
பாடும் அரம்பையர் கோயில்!
சக்கர வட்ட மதிக்குத்
தக்க நிறந்தர நிற்கும்
மிக்க நலம் பெறும் முத்தும்
மின்னும் அரங்கிடை தொத்தும்!
ஒருமுக எழினி எடுத்தார்
உயர்வுறு திரையும் விடுத்தார்
பொருமுக எழினி தொகுத்தார்
பூதரை உயர வகுத்தார்
திருமுகம் எழுதி இளைத்தார்
திசைவாளர் மாலை வளைத்தார்
வருமுகம் நோக்கி இருந்தார்
வரவெதிர் பார்க்கும் விருந்தாய்!"

எனக் கவிஞர் தமிழ் ஒளி படைத்து காட்டும் ஆடல் அரங்கு அப்படியே சிலப்பதிகாரத் தாக்கத்தைப் பெற்றிருப்பதைக் காணலாம்.

**இளங்கோவின் கண்ணகியும் தமிழ் ஒளியின் மாதவியும்**

இளங்கோவடிகளின் நோக்கம் காப்பிய தலைவி கண்ணகியைக் கற்பின் குறியீடாகவும், பெண்மையில் உயர்ந்தவளாகவும், அழகுப் பதுமையாகவும்,

கல்வியறிவு நிறைந்தவளாகவும் செல்வக் குடியில் பிறந்தவளாகவும் காட்ட வேண்டும் என்பது அதன் வெளிப்பாடே மனையறம் படுத்த காதையில் கோவலன் வாயிலாகக் கண்ணகியின் அழகை வெளிப்படுத்திக் காட்டுகிறார்.

"குழவித்திங்கள் இமையவர் ஏத்த
அழகொரு முடித்த அருமைத்து ஆயினும்
உரிதின் நின்னொடு உடன்றிப்பு உண்மையின்
.........................................................
(2:39-61)

எனக் கண்ணகியைப் புகழத் தொடங்கும் கோவலன்,

"மாசறு பொன்னே வலம்புரிமுத்தே!
காசறு விரையே கரும்பே தேனே!
அரும் பெறல் பாவாய் ஆர் உயிர் மருந்தே
பெருங்குடி வணிகன் பெருமட மகளே
மலை இடைப்பிறவா மணிவே என்கோ
அலையிடைப்பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ?
(2:73-79)

எனக் கண்ணகியைப் புகழ்வது புகழின் உச்சம். இப்பகுதி இளங்கோவடிகள் கோவலன் வழி தம்முடைய காப்பியத் தலைவி கண்ணகியை உயர்த்திக் காட்டி உயர்வடையும் இடம். இதைப் போலவே கவிஞர் தமிழ் ஒளி தன்னுடைய காவியத் தலைவி மாதவியை,

"யாழிடைப் பிறந்த இசை
நீரிடைப் பிறந்த மலர்
ஊரிடைப் பிறந்த மகளே - இவள்
ஊழிடைப் பிறந்த இசை
ஊற்றிடைப் பிறந்த எழிலே!
தத்திடப் பிறந்த நடை
தாக்கிடப் பிறந்த படை
தாவிடப் பிறந்த பெடை - சுக
வித்திடப் பிறந்த மழை
விட்புடப் பிறந்த முகில்
வெட்கிப் பிறந்த குழலே!
கட்டிடப் பிறந்த இடை
வெட்புடப் பிறந்த விழி
குத்திடப் பிறந்த முலையே - சுடர்
பொட்புடப் பிறந்த நுதல்
மொட்புடப் பிறந்த இதழ்
முத்திடப் பிறந்த நகையே!
தொற்றிடப் பிறந்த கிளி
துய்த்திடப் பிறந்த சுகம்
சொல்லிடப் பிறந்த கதையே! -இவள்
சுற்றிடப் படர்ந்த கொடி
தொட்டிடப் பிறந்த சிலை
கற்றிடப் பிறந்த கலையே!

என வியந்து பாராட்டுகிறார். இளங்கோவடிகளைக் காட்டிலும் கவிஞர் தமிழ் ஒளி மாதவியை உயர்த்திப் பேசும் பாங்கும், வெளிப்படுத்தும் கவிநடையும் சிறப்பாக அமைந்து மிளிர்வதைக் காணலாம். இளங்கோவும் அவர் வழி காவியம் படைத்த கவிஞர் தமிழ் ஒளியும் கருத்தினைப் புலப்படுத்தும் நிலையிலும் கவிதையாற்றலை வெளிப்படுத்தும் பாங்கிலும் எவ்வாறு தங்களை தனித்துவத்தோடு அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள் என்பதற்கு மேற்சுட்டிய பகுதிகளை சரியான சான்றாகக் கொள்ளலாம்.

**தொகுப்புரை**

சிலம்பு வழி மாதவி காவியம் தந்துள்ள கவிஞர் தமிழ் ஒளியின் தமிழ்ப்பணி நினைக்கத்தக்கது. கண்ணகியை தெய்வ நிலைக்கு உயர்த்திய இளங்கோ கண்ணகி இடத்தை மாதவிக்குத் தருகிறார். ஆனால், கவிஞர் தமிழ் ஒளி மாதவியை மாட்சிமைப் படுத்திக் காட்டும் பாங்கு தனித்துவமானது. மாதவி காவியத்தில் இடம்பெறும் பல நிகழ்வுகள் சிலம்பில் இல்லை. தனக்கே உரிய படைப்பாக்க நெறியினை, முறையினை மாதவி காவியத்தில் படைத்துக் காட்டியிருப்பதைப் போல சிலப்பதிகாரப் பகுதியை அப்படியே ஏற்றுக் கொண்டு அதனைத் தன் நடையில் அமைத்துக் காட்டும் கவிஞர் தமிழ் ஒளியின் தனித்தன்மையையும் உய்த்துணர முடிகின்றது. இளங்கோ தாம் படைத்த மாதவி,

"ஆடலும் பாடலும் அழகும் என்றிக்
கூறிய மூன்றின் ஒன்றுகுறை படாமல்" (3:9, 10)

நிகழ்ந்ததாகக் கூறுவார். இக்கூற்று அப்படியே கவிஞர் தமிழ் ஒளியின் மாதவி காவியத்திற்குப் பொருந்தும். மாதவி காவியம் ஆடல், பாடல், அழகு ஆகிய மூன்றும் முழுமையாய்ப் பெற்றுத் திகழ்கிறது. ஆடல் என்பது காட்சிச் சிறப்பு, பாடல் என்பது இசைச் சிறப்பு, அழகு என்பது கவியழகின் சிறப்பு. மாதவி காவியம் இம்மூன்று கூறுகளையும் முழுமையாகப் பெற்றுள்ளது. புகார்க் காண்டம், பட்டினக்காண்டம், துறவுக்காண்டம் என்ற மூன்று காண்டங்களையும் இருபத்தி ஏழு காதைகளையும் கொண்டு மாதவியின் அரங்கேற்றம் முதல் துறவறம் வரையிலான வரலாற்றைச் சொல்லும் மாதவி காவியம் சிலம்பு வழி வந்த உயர்ந்த காவியம் என உறுதியாகக் கூறலாம்.

**பயன்பட்ட நூல்கள்**


1. சிலப்பதிகாரம் தெளிவுரை - ஞா.மாணிக்கவாசகர் - உமா பதிப்பகம், சென்னை
2. மாதவி காவியம் - கவிஞர் தமிழ் ஒளி - புகழ்ப் புத்தகாலயம், சென்னை.


●


கட்டுரையாளர், இணைப்பேராசிரியர், தமிழாய்வுத் துறைத்தலைவர், தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி.

கட்டுரை

# கேரளநாட்டார் வழக்காறுகளில் தொல்தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள்



முனைவர் பிரபாஹரன்.கி

ஒரு சமூகத்தின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், சமூகவரலாறு போன்றவற்றின் தொன்மையை எடுத்துரைப்பதாக அமைவது நாட்டுப்புற இலக்கியங்கள் ஆகும். 19 - ஆம் நூற்றாண்டின் இறுதியில் உலகம் எங்கும் நாட்டுப்புறவியல் ஆய்வுகள் பரவலாக மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக உலக மக்களிடையே காணப்படுகின்ற நாட்டுப்புற பழக்க வழக்கங்களின் ஒரு சார்த்தன்மைகள் கண்டறியப்பட்டன. குறிப்பாக உலக நாட்டுப்புறக் கதைகளைத் தொகுத்த கிரீன் சகோதரர்கள் அக்கதைகளுக்கிடையே காணப்படும் ஒற்றுமைகளை உலகிற்கு எடுத்துரைத்தனர்.

அதனைத் தொடர்ந்து இத்துறை விரிவடைந்து உலகெங்கும் பரவியதன் விளைவாக தமிழகத்திலும் நாட்டார் வாழ்வியல் ஆராயப்பட்டது. தமிழக முன்னோடியாகத் திகழ்ந்தவர் நா.வானமாமலை ஆவார். இவர் நாட்டுப்புறப் பாடல்களைத் தொகுத்து அதன் அடிப்படையில் நாட்டார் வாழ்வியலை ஆராய வழி வகுத்தார். மட்டுமன்றி தாலாட்டுப் பாடல்களைத் தொகுத்து நாட்டார் ஆய்வாளர்களான மு. அருணாச்சலம், அன்னகாமு போன்றோர் ஏட்டில் எழுதாத கவிதைகள், காற்றில் மிதந்த கவிதைகள் போன்ற அநேக நூல்களை வெளியிட்டனர்.

இதனைப் போன்று கேரளத்தில் அறிஞர் குண்டர்ட், டயசு, பி. கோவிந்தன் பிள்ளை போன்றோர் ஆய்வுகளை மேற்கொண்டனர். 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் மற்றும் மலையாள மொழிகளில் நாட்டார் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாகக் காலனி ஆட்சியின் கலாச்சார திணிப்பால் கட்டமைக்கப்பட்ட பண்பாட்டுச் சூழல் கேள்விக்குள்ளாக்கப்பட்டது. நாட்டார் ஆய்வுகள் காலனிய ஆட்சிக்கு முன் இவ்விரு நிலப்பரப்புகளில் நிலவியிருந்த தொல்திராவிடப் பண்பாட்டை நமக்கு எடுத்துரைத்தன. தமிழகத்தைப் போன்று கேரளத்திலும் தென்னகப் பண்பாட்டின் அல்லது திராவிடப் பண்பாட்டின் எச்சங்கள் நாட்டுப்புற வழக்காறுகள் காணக் கிடைகின்றன.

பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுச்சொல் அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பின்
(தொ.செ.இயல்:78)

எனும் நூற்பாவின் வழியாக தென்நாட்டில் வழக்கத்திலிருந்த வாய்மொழி இலக்கியங்களை தொல்காப்பியர் வரையறை செய்கின்றார். நாட்டுப்புறவியல் அறிஞர்கள் இவ்விலக்கியங்களை வாய்மொழி இலக்கியங்கள் என்றே குறிப்பிடுகின்றனர். மலையாள மொழியிலும் இவ்விலக்கியங்கள் 'வாமொழி' என்ற பெயரில் வழக்கப்படுகின்றன.

கேரளத்தில் நாட்டுப்புறப் பாடல்களை நாடன் பாட்டுகள்/ நாடோடி பாடல்கள் என்றும் நாட்டுப்புற கலை வடிவங்களை நாடன் கலாரூபங்கள் என்றும் அழைக்கின்றனர். (166-2007) நாட்டுப்புற ஆடலை நாடோடி நிருத்தம் என்றே அழைக்கின்றனர். நாடன் தனிமா (கிராமியத் தனித்தன்மை), நாடன்விபவங்கள், நாடன் பக்சனம் (கிராமிய உணவுகள்), நாடன் மருந்நுகள்( நாட்டு மருந்துகள்), நாடன் மல்சியம் (நாட்டுமீன்கள்) நாடன் சமஸ்காரம் (நாட்டார் பண்பாடு) போன்ற வார்த்தைகளை அன்றாட வாழ்வில் பரவலாக பயன்படுத்திவருகின்றனர்.

கிராமப்புறங்களைதமிழ் மொழியில் நாட்டுப்புறம் என்று குறிப்பிடுவதைப்போலவே நாடன்புறம் என்றும் நாடன் பிரதேசம் என்றும் மலையாளிகள் குறிப்பிடுகின்றனர். சங்க இலக்கியத்தில் மலைநாடன், தென்நாடன், கானல்நாடன் என்னும் குறிப்புக்கள் காணப்படுகின்றன. குறிஞ்சி நில ஊர்பகுதிகள் நாடு என்று அறியப்படுவதைப்போல குறிஞ்சி நிலத் தலைவன் நாடன் எனும் பொதுப்பெயரில் அழைக்கப்படுகிறான். சேரநாடு குறிஞ்சிநிலப் பகுதியில் அமைந்திருந்ததால் மலையாள மொழியில் நாடு, நாடன் என்னும் சொற்கள் இன்றளவும் வழங்கப்பெறுவதைக் காணமுடிகிறது. இத்தகைய சொற்கள் தொல்தமிழ் பண்பாட்டின் தொன்மைக்குச் சான்றாக அமைகின்றன.

**நாடன் எங்கோ ஊரன் என்கோ**
பாடிமிழ் பனிக்கடற் சேர்பன் என்கோ
பு.நா(49.1முதல் 2வரை) (2010 – 70)

இப்புறநானூற்றுப் பாடல் நாடன் குறிஞ்சி நிலத்தைச் சார்ந்தவன் என்று குறிப்பிடுகிறது. மட்டுமன்றி அழகிய குளிர்ந்த அருவிகளை உடைய மலைநாடனே என்று பழமொழி நானூறும் தென்னாடனே என்று ஆழ்வார் பாடல்களும் குறிப்பிடுகின்றன. ஆகையால் நாடன் என்ற வார்த்தை குடியான மக்கள் வாழும் இடத்தையும் குறிக்கிறது.

தமிழக நாட்டுப்புறப்பாடல்களை தெம்மாங்குப்பாட்டு, தாலாட்டுப் பாட்டு, திருமணப் பாட்டு, உறவுமுறைப் பாட்டு, ஏற்றப் பாட்டு, உடுக்கைப் பாட்டு, பம்பைப் பாட்டு (2000-84-94) என்று வகை செய்வதுபோல கேரள நாட்டுப்புறப்பாடல்களை தோற்றம் பாட்டு, சர்ப்பப்பாட்டுக்கள், தீயாட்டுப் பாட்டுக்கள், தெய்யம் பாடி பாட்டுக்கள், அய்யப்பன் பாட்டு, பிரமாணி பாட்டு, பகவதி பாட்டு, ஆவியர் பாட்டு, பூரக்களிப்பாட்டு, பானேக்களிப்பாட்டு, கண்ணியர் களிப்பாட்டு, ஐவர்களிப்பாட்டு, முண்டியன் பாட்டு குருந்தினி பாட்டு கந்தர்வன்பாட்டு, களம்பாட்டு, மாரிப்பாட்டு, கல்யாணப் பாட்டுகள், க்ரிஷிப் பாட்டு, பரணிப் பாட்டு, பணிப்பாட்டுகள் என்று வகைமை செய்துள்ளார் நாட்டுப்புறவியல் அறிஞர் விஷ்ணு நம்பூதிரி (1996-166to176)

### தோற்றப்பாட்டு

தோற்றத்தை குறித்தப் பாடல்கள் ஆகையால் இப்பாடல்கள் தோற்றப்பாட்டு என பெயர்பெற்றன. காளி,மாரி, கண்ணகி போன்ற தெய்வங்களின் தோற்றங்கள் தான் இப்பாடல்களுக்கு பாடுபொருளாக அமைகின்றன. காளியைப் பற்றிய தோற்றப்பாடல்களை வேலன் சமூகத்தைச் சார்ந்தவர்களே காலம்காலமாக பாடிவருகின்றனர். சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் வேலன் வெறியாட்டு கேரளத்தில் இன்றளவும் வழக்கத்தில் உள்ளது. வேலன் வெறியாட்டை தெய்யங்ஙள் என்று அழைத்து வருகின்றனர். அருள் வந்து நாட்டுப்புறங்களில் சாமி ஆடுவதுபோன்றதே தெய்யங்ஙள். வேலன், வண்ணான், புலையன், பறையன், புல்லுவன், பாணன் போன்ற பூர்வகுடி வேளாண்மக்களே நாட்டார்கலைகளின் உரிமை மாந்தர்கள் ஆவர். கண்ணகியைப் பற்றிய பாடல்களை பறையர் இன மக்களே அதிகமாக பாடிவருகின்றனர். பாண்டியநாட்டை அழித்த கண்ணகி சேர நாட்டை சென்றடைந்தாளென சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. இக்கூற்றை மெய்பிக்கும் வகையில் கேரள- தமிழக எல்லையோர மாவட்டங்களான பாலக்காடு மாவட்டம் முதல் தென்திருவிதாங்கூரைச் சேர்ந்த திருவனந்தபுரம் வரை கண்ணகி வழிபாடு வருடம்தோறும் நடைபெற்று வருகிறது.

பாலக்காடு மாவட்டத்தில் கண்ணகியை கொண்டாடும் உரிமை பறையர் இனமக்களுக்கே உரியது. பாலக்காட்டின் நெல்லறை என்றறியப்படும் கினாசேரி என்னும் கிராமத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் சேம்பட்டக்காவு பகவதியம்மன் கோவில் திருவிழாவை முன்னின்று நடத்துபவர்கள் பறையர் சாதியை சார்ந்தவர்கள் ஆவர். எனினும் பிற சமுதாயத்தினரும் இத்திருவிழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். அம்மன் என்ற சொல்லுக்கு நிகராக பகவதி என்ற சொல்லையே மலையாளிகள் பயன்படுத்திவருகின்றனர். குலதெய்வங்களை காவில் தெய்வங்கள் என்றே அழைக்கின்றனர். கா என்ற செந்தமிழ்ச் சொல்லின் பொருள் காடு என்பதாகும் எனவே காட்டில் உள்ள தெய்வங்கள் தான் காவில் தெய்வமானது. காவு என்றால் குலதெய்வ வழிபாடு செய்யும் இடமாகும். தமிழ் நாட்டார்வழக்கில் காவு என்றால் உயிர்பலி கொடுத்தல் என்று பொருள். எனவே உயிர்பலி கொடுக்கப்படுகின்ற குலதெய்வங்கள் தான் காவில் தெய்வங்கள் என அழைக்கப்படுகின்றன (களஆய்வு - 2017). கண்ணூரில் இரிக்கூர் எனும் கிராமத்தில் நாட்டுக் கோழியை இக்குலதெய்வங்களுக்கு காவு கொடுக்கின்றனர். தமிழர்களைப் போன்றே குடும்ப தெய்வமாக குலதெய்வங்களை மலையாளிகளும் வழிபட்டுவருவதை இங்கு காணமுடிகிறது.

### கண்ணகி தோற்றப்பாட்டு

கொடுங்களூர் சேம்பட்டக்காவு, ஆற்றுக்கால் போன்ற இடங்களில் அம்மனாக கருதப்படும் கண்ணகியை குறித்த ஏராளமான தோற்றப் பாட்டுகள் கேரளத்தில் காண்படுகின்றன.

**எடுத்துக்காட்டு :**

*பலிவாள் பத்ரவடகம்*
*கையில் ஏந்தும் தம்புராட்டி*
*நல்லச்சன்டெ திருமுன்பில்*
*சென்னு களித் துடங்கி*

பலி வாங்கும் வாளையும் பத்ரவடகம் (காற்சிலம்பு) என்னும் ஆயுதத்தையும் கையில் ஏந்திய அரசியே உன் கணவனைக் கொன்றவனை பலிவாங்க களியாட்டம் ஆடத் தொடங்கினாயே, என்று பொருள்படும் இப்பாடல் கண்ணகியின் பெரும் சினத்தை குறிப்பிடுவதோடு அவளைப் போற்றிப்பாடும் பாடலாகவும் அமைகிறது.

களி என்னும் சொல் மகிழ்ச்சி என்ற பொருளையும் களிப்பு என்றால் கோபம் என்னும் பொருளையும் உணர்த்துகின்றது. களி என்ற சொல் ஆடல் என்னும் பொருளையும் தரும். கள்ளுண்டு களித்தனர் என்னும் தமிழ்ச்சொல் கள்ளுண்டு மகிழ்ந்தனர், கள் அருந்தி ஆடிமகிழ்ந்தனர் என்னும் பொருளைத் தருவது போன்றே களி - களிப்பு- என்னும் சொற்கள் சூழலுக்கேற்ப எதிர்மறைப் பொருளைத் தருகின்றன. திருவனந்தபுரம் மாவட்டத்தில் மக்களின் அன்றாட வாழ்க்கையில் களிப்பு என்னும் சொல் பரவலாக பயன்பாட்டில் உள்ளது. களிப்பு என்னும் சொல் இங்கு கோபம் என்னும் பொருளையே உணர்த்துகிறது.

தோற்றப் பாட்டுகளில் தமிழ்ச் சொற்கள் தாராளமாக பயின்று வருகிறது. இப்பாட்டுகளை வடக்கன் பாட்டு, தெக்கன் பாட்டு என இருவகையாகப் பிரிக்கலாம். கேரளத்தின் தென்பகுதியில் வழங்கப் பெறும் தெய்யப்பாடல்கள் தெக்கன் பாட்டுகள் என்றும் வட மலபார் பகுதியில் வழங்கப்பெறும் பாட்டுக்கள் வடக்கன் பாட்டுக்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. (1996.164)

### விவசாயப் பாடல்கள்

நிலவுடைமையாளர்களை தம்புரான் என்றும் நாடுவாழி என்றும் கேரளமக்கள் அழைத்து வந்தனர். நாடு+வாழி நாட்டை ஆண்ட மன்னன் என்னும் பொருள் பெறுகிறது. நாட்டு ராஜாவ் என்றும் பிற்காலத்தில் அழைக்கப்பட்டனர். தமிழ் மொழியில் நாட்டரசன், குறுநிலமன்னர்கள் சிற்றரசர்கள் என்று அழைப்பது போன்றே இம்மக்கள் நாடுவாழிகள் என குறுநிலமன்னர்களை அழைத்தனர்.

நிலவுடைமையாளர்களுக்கு எதிரான எதிர்ப்புக் குரலாக நாட்டுப்புறப் பாடல்கள் அமைந்தன என கூறுகிறார் கேரள நாட்டுப்புறவியல் கழகத்தின் முன்னாள் தலைவர் சி.ஜெ.குட்டப்பன். பறையர், வேலர், வண்ணான், புலையர், செருமர் போன்ற பூர்வ வேளாண்குடிகளின் உரிமைக் குரலாகவே விவசாய நாட்டுப்புறப் பாடல்கள் காணப்படுகின்றன.

**சான்றாக:**

ஊணில்லா உறங்கியில்லா
பின்னே உணரில்லா
அடிக்குயூலா தெளிக்கில்லா
அடுப்பில் தீ ஏரிகில்லா
திண்ணில்லா திமிர்க்கேற்றம் பறையில்லா....

உண்ணவும் மாட்டோம் உறங்கவும் மாட்டோம்
உறங்கினால் பின்பு எழும்பவும் மாட்டோம்
வீடுபெருக்க மாட்டோம்
சுத்தம் செய்ய மாட்டோம் சாப்பிட மாட்டோம்
திமிர்த்தெழமாட்டோம்

ஆகையால் உன்னை எதிர்த்து ஒன்றும் சொல்ல மாட்டோம்(1996)

அடித்தள மக்கள் பண்டைய காலத்தில் நிலவுடைமையாளர்களை எதிர்த்ததால் பட்டினி கிடந்து சாக வேண்டிய நிலையை அடைந்தனர் என்பதை இப்பாடல் சுட்டுகிறது

சந்தனம் சார்த்தி நடப்பூண்டு சோவர்
சேறுமணிஞ்சு நடப்புண்டு நாங்க

வெற்றிலை திண்ணு நடப்புண்டு சோவரு
அல்லிக்கா திண்ணு நடப்புண்டு நாங்க
பொன்கோய சூடி நடப்புண்டு சோவரு
மீங்கோய சூடி நடப்புண்டு நாங்க ( 1996:175)

சந்தனம் பூசி நடக்கிறார் எசமான்
சேற்றைப் பூசி நடக்கிறோம் நாங்க
வெற்றிலை மென்றுநடக்கிறார் எசமான்
அல்லிக்காய் தின்னுரோம் நாங்க
பொன் குடைசூடி நடக்கிறார் எசமான்
வியர்வையில் உப்புகொட புடிச்சு
நடக்கிறோம் நாங்க

*வயலில் வேலை செய்யும் விவசாயியின் பாட்டை எடுத்துரைக்கிறது இப்பாடல். நிலவுடைமை - அடியாளன் வாழ்க்கைமுறை எவ்வளவு துயரமாக இருந்தது என்பதையும் இப்பாடல் உணர்த்துகிறது. பண்டைய நிலவுடைமை சமூகத்தில் அடித்தள மக்களின் நிலையை உணர்த்துவதாக மலையாள நாட்டுப்புறப் பாடல்கள் அமைகின்றன.*

தாரக பென்னாளே
கதிர் ஆடும் மிழியாளே
தம்புரான் எத்திடும் முன்பே
கரிங்காளி கோர பறிச்சாட்டே
வெற்றமான் தின்னோளே
வட்ட சுண்டுள்ள வா முடுக்கி
அந்திகொடருத்தி முருக்கி பெருத்தவள்
வீனது சேற்றிலானே
சூட்டும் கத்திசோராள்
பாடவரம்பத்து உறக்கமில்லாறு மாசம் (2010.17)

*இப்பாடல் வரிகள் ஆறுமாதங்கள் ஊணுறக்கமில்லாமல் பண்ணையாரின் நிலத்தை உழுது பாதுகாத்த புலையர்கள் என்றறியப்படுகின்ற பூர்வ வேளாண்குடி மக்களின் நிலையை எடுத்துரைக்கின்றது. முதலாளி வருவதற்கு முன்னே கருங்காளி மரப்பட்டையை உரித்து நான் சேகரித்த விறகு சுள்ளிகளை கட்டிக் கொள்ளட்டுமா? இங்கு பந்தத்தை கையில் ஏந்தி வயல் வரம்பில் ஒருத்தன் விளைநிலத்தைக் காவல் காக்கிறானே அவன் வீட்டில் அடுப்பு எரிந்து எத்தனை நாட்கள் ஆனதோ? எனும் வினாவை எழுப்பும் விதமாக இப்பாடல் அமைவதை உணரமுடிகிறது.*

**முடிவுரை**

*கி.பி.15ஆம் நூற்றாண்டிற்குப் பிறகே மலையாளம் ஒரு தனிமொழியாக உருவெடுக்கிறது. வடமொழியுடனான உடன்போக்கு நிகழ்ந்ததன் காரணமாக ஆரியப் பண்பாண்டின் தாக்கம் அம்மொழி சார்ந்த சமூகத்தில் நிலைபெற்றுவிடுகிறது. எனவே நாட்டார் வாழ்வியலை முன்னிறுத்தி அம்மக்களின் உணவு ,உடை, பேச்சு மொழி, விடுகதை, பழமொழி நாட்டார்கதைகள், நம்பிக்கைகள்போன்றவற்றை நுட்பமாக ஆராய்ந்தால் இதுபோன்ற ஏராளமான தொல்தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளை வெளிக்கொணரலாம்.*

**சான்றுநூட்கள்:**


*1. அச்சுதவாரியர் - கேரள சம்ஸ்காரம் - கேரள பாஷ. இன்ஸ்டியூட்திருவனந்தபுரம் 2010*
*2. கே.கே.பிள்ளை- தென்னிந்திய வரலாறு பழனியப்பா பிரதர்ஸ் பதிப்பகம் 2020 (ஒன்பதாம்பதிப்பு)*
*3. கே.கே.பிள்ளை- தமிழகவரலாறும் மக்களும் பண்பாடும் -உலக தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை 2020 (16-ம் பதிப்பு)*
*4. சு.சக்திவேல் - 4.நாட்டுப்புறவியல் ஆய்வுகள்- மணிவாசகர் பதிப்பகம் சென்னை- 2016 (7 ஆம் பதிப்பு)*
*5. விஷ்ணு நம்பூதிரி- நடோடி விக்ஞானியம்- டி.சி புக்ஸ் கோட்டயம் 2007*
*6. பாஸ்கர உண்ணி- பத்தொன்பதாம் நூற்றாண்டிலே கேரளம்- கேரள சாகித்ய அக்கதெமி பதிப்பகம் திருச்சூர் -2012*
*7. சி.ஸி ராஜகோபலன்-நட்டறிவுகள்-DC புக்ஸ் கோட்டயம் 2014*


●


கட்டுரையாளர், உதவிப் பேராசிரியர் அரசு கலை மற்றம் அறிவியல் கல்லூரி கொழிஞாம்பாறை, பாலக்காடு, கேரளா.



**புத்தகங்கள் அச்சிட**
**அற்புதத் தீர்வு**
**குறைந்த செலவு**
**அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**
தொடர்பு கொள்ள
**98412 93503**

Article

# KUṬAKŪTTU: THE POT DANCE OF KṚṢṆA IN TAMIL LITERATURE *AND ICONS WITH SPECIAL REFERENCE TO SAIVA TIRUMUṞAIGAL*



**K. Vadivelou & Dr. Saju George**

The Cilappatikāram, known as Muttamiḻ Kāppiyam, references Patiṉōrāṭal, comprising eleven distinct types of dances. Kuṭakūttu, performed by Kṛṣṇa, is one of these dances showcased by Madhavi during her Arangetram. This dance is acknowledged in various Tamil literary works, praising Kṛṣṇa, found in Sangam literature texts like Paripāṭal, Vaishnavite Bhakti literature Nālāyira Divya Prabandham by Āḻvārs, and later literary compositions. Icons portraying this dance adorn numerous South Indian temples. Appar, a devoted Saivite, and Cēramāṉ Perumāḷ Nāyaṉār, esteemed as Nāyanmārs, reference this dance in their works within a collection of Saiva Tirumuṟaigal. Kuṭakūttu is also noted in the later period's minor literature genre. Recognized as a source of evolution, Kuṭakūttu transformed into the present-day Karakāṭṭam.

**Kuṭakūttu**

Kuṭakūttu, a dance form involving pots as props, is associated with Lord Vishnu in Tamil literature, where he is referred to as Tirumāl, Neṭumāl, Mālōṉ, Māyōṉ. In various Tamil literary works from the Sangam period, Vishnu is depicted performing Kuṭakūttu. The dance recounts the story of Tirumāl gracefully dancing with a pot made of a combination of metal and clay in the city of Sonipuram, rescuing Anirudhan, captivated by the demon king Vānāsura.

This dance form is recognized as one of the six enduring dances and is categorized among the eleven dances collectively known as Patiṉorādal. Kuṭakūttu, characterized by standing and swaying movements, is part of the eleven dance forms, which include Alliyam, koṭukoṭṭi, kuṭai, kuṭam, pāṇṭaraṅkam, mal, kuṭakkūttu, pēṭi, marakkāl, pāvaikkūttu, kaṭaiyam. Among these, Kuṭakūttu is one of the six vinōtak kūttu varieties. It was also referred to as Kumpakkūttu.

**Kuṭakūttu in Tamil literature**

References to Kuṭakūttu span from Sangam classics to later works in the minor literary genre in Tamil literature. This dance form is particularly associated with Kṛṣṇa, known as Tirumāl, Neṭumāl, Mālōṉ, and Māyōṉ in Tamil literary works. Cilappatikāram, Paripāṭal, Nālāyira Divya Prabandham, Saiva Tirumuṟaigaḷ, Tiṟuvaraṇga Kaḻampagam, and Puduvai Arunachalam Pillai Tamil are among the notable texts that mention both Kumpakkūttu and Kuṭakkūttu.

**Kuṭakkūttu in Cilappatikāram**

In the Cilappatikāram, the reference to Patiṉōrāṭal encompasses eleven different dance forms, including Kuṭakūttu performed by Kṛṣṇa, showcased by Madhavi during her Arangetram. The mentions of Kuṭakūttu in Cilappatikāram are found in Pukār Kāṇṭam, particularly in Arankērrukātai and Kaṭal Āṭu Kātai.

Arankērrukātai provides a brief reference to the eleven dances, stating, "..Patiṉōrāṭalum pāṭṭum koṭṭum.." (Cilappatikāram. 3. 14). Detailed information on the eleven dances is available in Kaṭal Āṭum Kātai. In the Cilappatikāram Pukār Kāṇṭam – Kaṭal Āṭum Kātai, the dance is described as, "..Vāṇaṉ pērūr maṟukiṭai naṭantu nīṇilam aḷantōṉ āṭiya kuṭamum.." (Cilappatikāram. 6. 54,55).

Here, Nīṇilam Aḷantōṉ refers to Kṛṣṇa, who danced to rescue Anirudhan imprisoned by Vāṇācura for loving his daughter Usha. Kṛṣṇa's dance took place in the streets of Vāṇācuraṉ's city called Sonipuram, where he gracefully performed with a pot crafted from a combination of metal and clay.

Kuṭakkūttu in Paripāṭal

in Paripāṭal, the classic Tamil poetry and the fifth of the Eight Anthologies in Sangam literature, comprises musical songs known as Paṇ. In the third hymn of Paripāṭal, attributed to the poet Kaṭuvan Ilavēniyaṉār, Kṛṣṇa is depicted as the Kuṭakūttu dancer:

**"..ceṅ kaṭ kāri! Karuṅ kaṇ veḷḷai! Poṉ kaṭ paccai! Paiṅ kaṇ mā'al!**
**Iṭavala! Kuṭa ala! Kōvala! Kāvala! Kāṇā marapa! Nīyā niṉaiva!**
**Māyā maṉṉa! Ulaku āḷ maṉṉava!.."**
**(Paripāṭal. 3. 83,84)**

**Kuṭakkūttu in Muttollāyiram**

Muttollāyiram, a literary work from around the 5th century CE, extols the Cēra, Cōla, and Pāndia Kings. Comprising two thousand and seven hundred songs, with nine hundred dedicated to each king, only a few songs from this work are available today. The author's name remains unknown. The fourth song of Muttollāyiram praises the Pāndia King Maran as the incarnation of Lord Kṛṣṇa:

"kūntanmā konru kutamātik kēvalanāyp Pūntotiyaip pulkiya ñanruntal yankolittay

Tennavanē tērvēntē tērunīrk Kūtalār mannavanē mārpin maru."

This expresses admiration for the Pandian king, addressing him as the one who, in the city of Kūtal also called as Madurai, defeated the demon horse, performed the pot dance in the city of the demon king Pānā, and had a dark mole on his chest. The poet intriguingly questions, "Now it is not seen. Where did you hide it?" highlighting the king as the incarnation of Kṛṣṇa and prompting the inquiry about the disappearance of the distinctive freckle marks. (Pandian, 43)

**Kuṭakkūttu in Nālāyira Divya Prabandam**

Nālāyira Divya Prabandam is a compilation of around four thousand hymns dedicated to the praise of Lord Vishnu. Authored by twelve Āḻvārs between the 7th and 9th centuries CE, this anthology was organized by Nathamuni. In Nālāyira Divya Prabandam, various hymns highlight the dances of Krishna, specifically the Kalinga Narthana, dancing on the hood of the snake Kalinga and Kuṭakūttu, the pot dance. Kuṭakūttu is a significant aspect of Krishna depicted in different works of various Āḻvārs within Nālāyira Divya Prabandam. Many references to Kuṭakūttu found in different hymns as ,

In Periyāḻvār tirumoḻi -2:
"Kuṭaṅkaḷ eṭuttu ēṟa viṭṭuk kūttāṭa valla em kōvē…"
(Nālāyira Divya Prabandham – 188)

Āndal's Nācciyār tirumoḻi:
"Taṭattu aviḻ tāmaraip ……
Kuṭattai eṭuttu ēṟaviṭṭuk kūttāṭa valla em kōvē…"
(Nālāyira Divya Prabandham – 529)

Tiruccanta Viruthām by Tirumaḻicai Pirāṉ:
"Kaṭam kalantu……Kuṭam kalanta kūttaṉ āya koṇṭalvaṇṇa… (Nālāyira Divya Prabandham- 789)

Tirumaṅkaiyāḻvār Periya Tirumoḻi-2
on Thirukadalmallai: "Pēyt tāyai mulai uṇṭa piḷḷai-taṉṉai……. Kuṭam āṭu kūttaṉ-taṉṉai…."
(Nālāyira Divya Prabandham- 1090)

Tirumaṅkaiyāḻvār Periya Tirumoḻi-3
on Tiruvāli: "Kuyil ālum vaḷar poḻil cūḻ taṇ kuṭantaik kuṭam āṭi…" (Nālāyira Divya Prabandham-1205)

Tirumaṅkaiyāḻvār Periya Tirumoḻi-5,
on Tirunāṅkūr : "Kaṉṟu-ataṉāl viḷavu eṟintu kaṉi utirtta kāḷai….. kuṭam āṭu kūttaṉ…."
(Nālāyira Divya Prabandham- 1245)

Tirumaṅkaiyāḻvār Periya Tirumoḻi-5, |
on Thiruvarangam : "Tātu āṭu vaṉa mālai tārāṉō? ……..Pūmēl mātu āḷaṉ kuṭam āṭi matucūtaṉ..
(Nālāyira Divya Prabandham- 1393)

Tirumaṅkaiyāḻvār Periya Tirumoḻi-6:
"Collāy tiru mārvā uṉakku ākit toṇṭu paṭṭa nallēṉai….Mallā kuṭam āṭī matucūtaṉē……
((NalaayiraNālāyira Divya Prabandham – 1476)

Tirumaṅkaiyāḻvār Periya Tirumoḻi-6
on Tirunaṟaiyūr : "Tuṉṟu oḷit tukil paṭalam…. Maṉṟu ārak kuṭam āṭi..".
(NalaayiraNālāyira Divya Prabandham – 1531)

**Saiva Tirumuṟaigaḷ**

The Saiva Tirumuṟaigaḷ, or Tirumuṟai, consists of twelve volumes of hymns dedicated to Lord Shiva, serving as primary scriptures for Tamil Shaivites. Authored by twenty-seven devotees, the first three

volumes, Tiruñāṉacampantar Tēvāram, are attributed to Tiruñāṉacampantar. Volumes four to six, known as Tirunāvukkaracar Tēvāram, were composed by Tirunāvukkaracar. Cuntarar Tēvāram, the seventh volume, is the work of Cuntarar. Māṇikkavācakar contributed the eighth volume, consisting of Tiruvāsagam and Tirukkōvaiyār. The ninth volume, Tiruvisaipā, is a compilation of hymns sung by nine poets. Tirumular's three-thousand-verse Tirumandiram constitutes the tenth volume. The eleventh, Patiṉoṉṟām Tirumuṟai, compiles works from twelve poets. Cēkkiḻār authored the twelfth volume, Periya Purāṇam or Tiruttoṇṭar Purāṇam.

**Kuṭakkūttu in Saiva Tirumuṟaigaḷ**

In the twelve volumes of Saiva Tirumuṟaigaḷ, references to Kuṭakūttu are found in two places. The first reference is in the sixth volume of Tirumuṟai, Āṟām Tirumuṟai, specifically in the 8th hymn of Tirukōṭikkā Tevāram. The second reference appears in the eleventh volume, also known as Patiṉoṉṟām Tirumuṟai, a collection of works by twelve devotees. The second mention of Kuṭakūttu is found in Poṉvaṇṇattantāti, written by Cēramāṉ Perumāḷ Nāyaṉār.

**Kuṭakkūttu in Tēvāram**

In Tirukōṭikkā Tevāram, specifically in Āṟām Tirumuṟai, the sixth volume of Tirumuṟai, which comprises 100 Patikam, each set containing 10 to 11 hymns, and follows the Tāṇṭakam literary format.

"paṭamāṭu paṉṉakakkac cacaittāṉ kaṇṭāy
…..kuṭamāṭi yiṭamākak koṇṭāṉ kaṇṭāy
Kōṭikā amarntuṟaiyuṅ kuḻakaṉ tāṉē".

(Tirumuṟai- 06.81.08)

In this verse, Tirunāvukkaracar praises Shiva, stating that his left part was spared for Vishnu, who danced the Kuṭakūttu. This amalgamated form of Shiva and Vishnu is referred to as Kēsavārtta Mūrtti or Harihar.

**Kuṭakūttu in Patiṉoṉṟām Tirumuṟai**

In Patiṉoṉṟām Tirumuṟai, the eleventh volume of Saiva Tirumuṟaigaḷ, a hymn dedicated to Lord Shiva includes a reference to as,

"iṭammāl valantāṉ iṭappāl, tuḻāyvalap pāloṇkoṉṟai
Vaṭamāl iṭantukil tōlvalam, āḻi iṭamvalammāṉ
Iṭamāl karitāl valañcē, tivaṉuk keḻilnalañcēr
Kuṭamāl iṭamvalaṅ kokkarai, yāmeṅkaḷ kūttaṉukkē".

(Tirumuṟai- 11.06.06)

This hymn from Patiṉoṉṟām Tirumuṟai, composed by Cēramāṉ Perumāḷ Nāyaṉār, praises Lord Shiva's dance, mentioning Kuṭakūttu, the dance of Kṛṣṇa. Cēramāṉ Perumāḷ Nāyaṉār describes the deity with the right side dancing Kokarai and the left side performing Kuṭakūttu, depicting the features of Lord Shiva and Vishnu. This form is known as Harihara Murthy, a significant aspect in Shaivism, representing a union of Shiva and Vishnu.

**Kuṭakkūttu in Kalampakam and Pillai Tamil**

Kalampakam and Pillai Tamil poetry, belonging to the Pirapantaṅkaḷ, are minor literary genres in Tamil language, that flourished in the later centuries. Tiruvaraṅka Kalampakam, a work by Piḷḷai Perumāḷ Aiyaṅkār in the 17th century CE, praises Vishnu at Srirangam and includes a reference to Kṛṣṇa's Kuṭakūttu dance with the mention of "Kuṭa naṭam makiḻntu kuravaikaḷ" (Kameswaran, xi).

Puduvai Arunachalam Pillai Tamil, another late-century piece, offers praise to a benefactor named Arunachalam. In this work, the poet extols the hero as a devotee of Muruga, the nephew of Vishnu, dancing Kuṭakūttu, with the lines "Kuṭanaṭa miṭumukila marumakaṉ viṇṭoṭā kokkeṉa niṟapōṉaik kuṟivaḻi yamarporu mayil kaṭa viyacēy kukkuṭa maṭṭōṉai" (Chandrasekharan, 330). Both works contribute to the rich tapestry of references to Kuṭakūttu in Tamil literature.

**Temple of Pot Dancer, Kudamātum Kūttar Koil**

Kudamātum Kūttar Koil, also known as the Kuṭamādu Kūttar Temple in Tirunāṅkūr, holds significance in Vaishnavism and is among the 108 Temples revered in this tradition. Tirumaṅkai Āḻvār, one of the twelve Ālvārs, composed hymns praising Kuṭamādu Kūttan, the main deity of the temple, with verses like "Kaṉṟataṉāl maḻai taṭuttuk kuṭamāṭuṅ kūttaṉ."

Built during the Chola period in the 9th to 10th century CE, the temple underwent later renovations in the Nayak period. The deity, Kudamātum Kūttar, is depicted in a sitting position with a pot at his feet, symbolizing the association with Kuṭakūttu. The temple stands as a testament to the rich cultural and religious heritage of the region. (Nedunchezhiyan, 40)

**Kuṭakkūttu in Icons**

Kuṭakūttu, a captivating art form, found celebration and recognition in Tamil society, leaving its mark through numerous temple icons. The meticulous work of Dr.mM. Rasamanicanakar Centre for Historical Research has unveiled thirty-six icons of Kuṭakūttu in various temples. Temples like Aiyarappar Temple in Thiruvaiyaru, Brahadeeshwarar Temple in Thanjavur, and Sivaloganathar Temple in Kiramam proudly display these representations of the dance form.

The diverse range of temples hosting Kuṭakūttu icons includes Abathsakayeswarar Temple in Adudurai, Umamaheshwarar Temple in Koneri Rajapuram, Kodeeswarar Temple in Tirukodika, and Kalyanasundareswarar Temple in Nallur, among others.

Different sizes and postures of this artistic dance form can be observed in temples such as Arasaleeswarar Temple in Olinthiapet, Perumal Temple in Ulagapuram, and Konar Koil in Tirumalpur. Each temple adds a unique dimension to the celebration of Kuṭakūttu, reflecting the cultural richness of Tamil Nadu.

Among the thirty-six Kuṭakūttu icons identified by Dr. M. Rasamanicanakar Centre for Historical Research in Tiruchirappalli, four showcase the elegant artistry of women dancers. The Saptharisheeswarar Temple in Tavatturai stands out with a depiction of a Bhūta ganā engaging in Kuṭakūttu in the Garuda Mandala. Additionally, nine icons capture the essence of this dance form by incorporating musical instruments to complement the performance.

The dance itself involves a skillful display of balance, with dancers expertly maneuvering pots on their heads, shoulders, hands, and ankles. In some instances, multiple pots are tossed into the air, creating a captivating spectacle as the falling pots are deftly balanced and shuffled during intricate head, hand, and foot movements. This adds a dynamic and visually stunning dimension to the Kuṭakūttu tradition, showcasing the diverse expressions of this cultural art form.

**Kuṭakkūttu icon in Kerala**

The Thrikodithanam Mahavishnu temple in Kerala, also known as Tirukkaṭitāṉam Aṟputa Nārāyaṇaṉ kōyil, features a captivating Kuṭakūttu sculpture of Lord Kṛṣṇa on the right side of the steps leading to the Sanctum Sanctorum. In this artistic representation, Kṛṣṇa is depicted dancing with numerous pots, skillfully throwing them into the sky while maintaining a delicate balance on his shoulders and catching the falling pots. This intricately crafted sculpture captures the essence of Kuṭakūttu, showcasing the dynamic and vibrant nature of Lord Kṛṣṇa's dance. Hymns sung by Nammāḻvār in praise of this temple can be found in the revered scripture Nalayira Divya Prabhandam.

**Conclusion**

The dance form of Kuṭakūttu, celebrated as one of the eleven dances in the Patiṉōrāṭal tradition, has deep roots in Tamil literary and religious history. Its earliest references in Sangam Classics like Cilappatikāram, Paripāṭal, and Muttollāyiram attest to its enduring cultural significance. Bhakti literature, particularly the hymns of Ālvārs, further amplifies the reverence for Kuṭakūttu, portraying Lord Vishnu's pot dance in various poetic expressions. The dance's resonance is not confined to Vaishnavite traditions alone, as Shaivite saints like Appar and Cēramāṉ Perumāḷ Nāyaṉār also acknowledge its importance in their hymns set in Saiva Tirumuṟaigaḷ.

The presence of Kuṭakūttu icons in numerous temples across Tamil Nadu, along with its incorporation into temple festivals and processions, underscores its enduring cultural and religious relevance. Dr. M. Rasamanicanakar Centre for Historical Research's identification of thirty-six Kuṭakūttu icons, including those danced by women, highlights the diversity within this art form. Mr. Projesh, author of "Dance of India," aptly characterizes Kuṭakūttu as a ritualistic and semi-religious dance, tracing its origins to folk traditions and its adaptation into contemporary expressions like Karakāṭṭam. Kuṭakūttu has consistently served as a dynamic component within the cultural fabric of Tamil society, skillfully intertwining with literary, religious, and performative aspects across numerous centuries.

**References**


- Banerjee, P. The Life of Krishna in Indian Art, National Museum, New Delhi,1978.
- Banerji, Projesh, Dance of India, Kitabistan, Allahabad, 1942.
- Boominaganathan, D. Amrita Madana Kuttu Nadagam, International Institute of Tamil Studies, Chennai.1996.
- Chandrasekharan, T. Piḷḷait tamiḻk kottu, Government of Madras, Madras, 1959.
- Gani, Shajahan. Arankērrukātai ārāycci, International Institute of Tamil Studies
- Tharamani, Chennai, 2009.
- Iyyar, Ramanatha. A.S. Travancore Archaeological Series, Government Press, 1925.
- Kameswaran, Sathyabama. Thiruvaranga Kalambagam, Saraswati Mahal Library, Tanjore, 2007.
- Krishnamachari, S, M . Kambanattazhwar Iyatriaruliya Saraswati Andathi, Ganesh Press, Chennai, 1914.
- Nedunchezhiyan, ka. Tirunāṅkūr, Arun Pathippagam, Jayankonda Chola Puram, 1994.
- Pandian, P. Muttollāyiram, Central Institute of Classical Tamil, Chennai, 2010.
- Ranganathan. Alwargal Arullich Cheyalgalil Avatarangal, Sri Mangai Pathippagam, Kumbakonam.
- Reddiar, Venkataswamy. Nālāyira Divya Prabandham, Thiruvengadathan Tirumandram Trust, Chennai, 2009.
- Sundaram, Ve.Pa.Ka. Tamilisai Kalai Kalanjiyam, Bharathidasan University, Tiruchirapalli, 2000.
- Srinivasan, Mathi. Muthal Aayiram- Nālāyira Divya Prabandham, Sri Varahi Enterprises, 2000.
- SwaminathaIyer, U.Ve. Paripadal Mulamum Asiriyar Parimelazhagar Uraiyum, Commercial Press,1918.
- Kalaikovan,R. "குடக்கூத்து." வரலாறு.காம். varalaarucom, 1 Feb. 2022,


●


**K. Vadivelou**
Research Scholar
Department of Research (Dance)
&
**Dr. Saju George**
Research Supervisor Kalai Kaviri College of Fine Arts, Tiruchirapalli(Affiliated toBharatidasan University,Tiruchirapalli)



20.06.2024 அன்று சென்னையில் திருப்பதி வெங்கடசாமி எழுதிய மூன்று நூல்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் ஆர். பாலகிருஷ்ணன் ஐஏஎஸ், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், இரா.செல்வம் ஐஏஎஸ், சி.நெடுஞ்செழியன் ஐஏஏஎஸ், தேவேந்திர பூபதி, திருப்பதி வெங்கடசாமி ஐஏஏஎஸ் மற்றும் என்சிபிஎச் மேலாண்மை இயக்குநர் க.சந்தானம் ஆகியோர் கலந்துகொண்டனர்.



15.06.2024 அன்று சென்னையில் த.ஸ்டாலின் குணசேகரன் எழுதிய 'காகிதப் புரட்சி' எனும் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் கோ.பாலச்சந்திரன் ஐ.ஏ.எஸ், கவிஞர் கே.ஜீவபாரதி, நடிகர் பொன்வண்ணன், ஜோ மல்லூரி, த.ஸ்டாலின் குணசேகரன், என்சிபிஎச் பொது மேலாளர் எஸ்.சண்முகநாதன் மற்றும் ந.அன்பரசு ஆகியோர் கலந்துகொண்டனர்.

Published by **Shanmugam Saravanan** on behalf of **New Century Reader's Sangam** at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and Printed by **A.Sivakumar** at **Pavai Printers (P) Ltd.,** 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor: **T.Stalin Gunasekaran**

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly) Registered with RNI No :TNBIL/2009/28728. Postal Regn No. TN/CH(C)/601/2022-2024. WPP No: TN/PMG(CCR)WPP-673/2022-2024
Date of publication 1-7TH of every month Posted at Egmore RMS / 1 Patrika Channel
If undelivered, please return to: New Centurian Ungal Noolagam,
16 (142), Jani Jhan khan road, Royapettah, Chennai - 14.



## மிகமிக விரைவில்...
# நியூ செஞ்சுரி வெளியீடாக...
# தமிழில் வரவுள்ள மார்க்சிய அரசியல் நூல்கள்


முதன்மைப் பதிப்பாசிரியர்:


**ந.முத்துமோகன்**


இணைப் பதிப்பாசிரியர்:

**ப.கு.ராஜன்**





















## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884 www.ncbhpublisher.in | email: info@ncbh.in

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 -234990.